

# முதன்மை ஆசிரியரின் குரல்

We Welcome you to the readership of The Voice of Truth, a translation of the English The Voice of Truth International, and joining sister magazines in Spanish and Telugu. Now, we are happy to announce the pilot edition of this quarterly publication in Tamil.

For almost three decades our brother, P.R. Swamy, has served as the speaker for "SATHYA VAZHI" radio broadcasts of churches of Christ over Sri Lanka's short-wave transmissions for India. A great harvest of souls has been reaped throughout Tamil Nadu, as the radio messages have been coordinated with extensive evangelistic efforts: Gospel meetings, personal studies, seminars, Bible correspondence courses, and books and magazines in Tamil.

Now, through the leadership of Douglas, son of P.R. Swamy, a team has been brought together to provide translation, proof-reading, and lay-out expertise, so that the magazine that has proved to be invaluable in its other languages can be made available to a Tamil reading populace.

To preaching brethren and other leaders among churches of Christ, we invite your submission of articles, poems and short "fillers" for consideration for future issues. We believe that each volume will add important resource materials to your library of research and study aids, enabling you to grow in a sound knowledge of God's word and to be a better and more effective worker in the kingdom.

To readers in general, we encourage you to study each article and we invite your comments. Most of all, we pray that The Voice of Truth will bring many souls to God.

In His Service
**J.C. Choate,**
Editor - in - chief

March 20,2004

## முகவுரை



அன்புள்ள வாசக நண்பருக்கு,
புனிதர் இயேசுவின் புண்ணிய நாமத்தில் வாழ்த்துக்கள்!
கிறிஸ்துவுக்குள் அன்பான சகோ. J.C. சோட் அவர்கள் நம் இந்திய துணைக் கண்டத்தில் ஆற்றிவரும் தெய்வப் பணி போற்றத்தக்கது.
தமிழில் ' சத்திய வழி ' என்ற பெயரில் இலங்கை வானொலி ஆசிய சேவையில் தேவ செய்தியை வழங்கும் வாய்ப்பினை அடியேனுக்கு தந்தார்.
' வாய்ஸ் ஆப் ட்ருத் இன்டர்நேஷனல் ' என்ற புத்தகத்தை தமிழ் உலகத்திற்கு அளிக்க வேண்டும் என்ற என் நீண்ட கால விருப்பத்தை நிறைவேற்றினார். ஆனால் அடியேனின் மிகுந்த வேலைபளு காரணமாக இப்பணி பல ஆண்டுகளாக முடங்கி கிடந்தது.
இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை வெர்ணன் டக்ளஸ் சகோதரனுக்கு கொடுத்துள்ளோம்.
'சத்தியத்தின் குரல்' என்ற இந்த அழகிய புத்தகத்தை வெளியிட உதவிய அவருக்கும், அவருக்கு ஒத்துழைப்பு தந்த அனைவருக்கும் நன்றி உரித்தாகுக!

இறைப்பணியில் உங்கள்
*பி.ஆர்.எஸ்*



அன்புள்ள வாசக நண்பனுக்கு,
நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் வாழ்த்துக்கள்.
உலகம் எங்குமுள்ள தமிழ் மொழி தெரிந்த மக்களுக்கு, தனிப்பட்ட ஆன்மீக வளர்ச்சிக்கும், ஊழியத்துக்கும் தேவையான வேத கருத்துக்களடங்கிய ' சத்தியத்தின் குரல் ' என்ற இப்புத்தகத்தை உங்களுக்கு படைக்கிறேன்
' வாய்ஸ் ஆப் ட்ருத் இன்டர்நேஷனல் ' புத்தகம், இப்புத்தகத்துக்கு ஆதாரமாக இருக்கிறது. முதன் முதலாக தமிழில் அச்சிட்டு உங்களுக்கு அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் ஒவ்வொருவருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும், ஒரு ஆசீர்வாதமாக இருக்கும் என நம்புகிறேன்.

இறைப்பணியில்
*டக்ளஸ் சாமி*



# தேவனுடைய பெரிய புத்தகம்

– J.C.சோட்

எல்லா புத்தகங்களிலும் அதி உன்னதமான புத்தகம் பரிசுத்த வேதாகமமே. இது ஏழைக்கு ஒரு பொக்கிஷம், வியாதியஸ்தனுக்கு ஒரு ஆறுதலும், காணாமற்போன நிலையிலுள்ளவனுக்கு ஒரு வழி காட்டியும், மரிப்போருக்கு ஒரு நம்பிக்கையுமாயிருக்கிறது. இந்த உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் புத்தகம் இதுவே. உலகத்திலுள்ள எல்லா சமயத்தவரும் அதிகமாக விரும்பிப் படிக்கும் புத்தகமும் பரிசுத்த வேதாகமமே. கிறிஸ்தவ மார்க்கத்திற்கு அடிப்படையும் இது தான். உலகத்திலுள்ள எல்லா மக்களும் போற்றி பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம்.

## 1. நாம் இதை மதிக்க வேண்டும்

வேதாகமம் தேவனுடைய வார்த்தை. அது தேவனால் அருளப்பட்டது. தேவனுடைய மனுஷர்கள் தேவாவியினால் ஏவப்பட்டு,எழுதி இருக்கின்றனர். இது ஒன்றான மெய்த்தேவனையும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும், தேவனுடைய நோக்கத்தையும் மனுக்குலத்தின் ரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டத்தையும் வெளிப்படுத்துகிறது. இதைப்போன்ற அழகிய, உன்னதமான, வாழ்க்கைக்கு வழிகாட்டியான புத்தகத்தை யாரும் இதுவரை படைத்தது கிடையாது.

அநேக நூற்றாண்டுகளாக எத்தனையோ எதிர்ப்புகளையும் சோதனைகளையும் தாங்கி, யாராலும் அழிக்க முடியாத ஒப்பற்ற புத்தகமாகத் திகழ்கிறது. எல்லோராலும் விரும்பிப்படிக்கும் தெய்வீக புத்தகம். இதைக் கண்டனம் பண்ணுவோர், இதில் காணும் ஆச்சரியப்படத்தக்க ஒற்றுமையைக் கண்டு என்ன கூற முடியும்?

இதைப் பரிகசிப்போர், இதைக் காட்டிலும் மேலான புத்தகத்தை உண்டாக்கட்டும்! வேதாகமம் தேவனுடைய புத்தகம் என்பதாலே, நாமும் அதை மதித்து சர்வ ஜாக்கிரதையாக வாசிப்போம்.

## 2. இதை சரியாக பகுத்துப் படிக்க வேண்டும்

வேதாகமம் ஒரு அருமையான நூலகம். இது பார்வைக்கு ஒரு புத்தகத்தைப் போலிருந்தாலும், 66 புத்தகங்களைக் கொண்ட மாபெரும் புத்தகமாக இருக்கிறது. இவற்றை 2 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று பழைய ஏற்பாடு, மற்றொன்று புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் உண்டு. பழைய ஏற்பாடு எபிரேய மொழியிலும், புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டது.

பழைய ஏற்பாட்டுபுத்தகங்களில், அனேக நூற்றாண்டுகளாக தேவனுக்கும், யூத ஜனங்களுக்கும் இடையே நடந்த ஏற்பாட்டை (உடன்படிக்கை)ப் பற்றிய வரலாற்றை காணலாம். புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் மனுக்குலத்துக்கான தேவனுடைய கடைசி வெளிப்படுத்துதல்கள் அடங்கி இருக்கின்றன. கி.பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவைகள் எழுதப்பட்டன. பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட எல்லா காரியங்களும் நம்முடைய போதனைக்காக கொடுக்கப்பட்டிருந்தாலும், இன்று நாம் பழைய ஏற்பாட்டின் கீழ் ஜீவிப்பதில்லை. புதிய ஏற்பாட்டின் கீழ் ஜீவிக்கிறோம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. நாம் புதிய ஏற்பாட்டை திறந்து பார்த்தால், அதிலுள்ள சில பிரிவுகளைக் காணமுடியும்.

**முதல் பிரிவு :-** மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்ற நான்கு புத்தகங்கள் அடங்கிய சுவிசேஷ புத்தகங்கள் அல்லது கிறிஸ்துவின் சுயசரிதை. இதைப் படிக்கிறபோது நசரேயனாகிய இயேசு கிறிஸ்து, ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்று அறிந்து கொள்ளலாம்.

**இரண்டாவது பிரிவு :-** சரித்திரம் - அது தான் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம். இதில் குணப்பட்டவர்களின் சம்பவங்கள் அடங்கி இருக்கிறது. இதை வாசித்தால் மனிதனுடைய ரட்சிப்பிற்கான தேவனுடை.ய திட்டத்தை அறியலாம்.

**மூன்றாவது பிரிவு :-** நிருபங்கள்-ரோமர் என்ற புத்தகத்திலிருந்து யூதா என்ற புத்தகம் வரை மொத்தம் 21 புத்தகங்கள். இவைகளை வாசிக்கிறபோது தேவனுடைய குடும்பத்தில் புதிதாக சேர்ந்த ஒருவன், கிறிஸ்தவனாக எப்படி ஜீவிக்க வேண்டும் என்பதை அறியலாம்.

**நான்காவது பிரிவு :-** தீர்க்கதரிசனம்-வெளிப்படுத்தின விசேஷம் என்கிற புத்தகம். இதில் விசுவாசிகளுக்கு நேரிடும் சோதனைகள், அவர்களுடைய முடிவான வெற்றி இவற்றை அறியலாம்.

## 3. இந்த புத்தகத்தை பயபக்தியோடு படிக்க வேண்டும்

உணவை உட்கொள்ளாமல் அதனால் என்ன பயன்? தண்ணீரை பருகாமல் அதனால் என்ன பலன்? காற்றை சுவாசிக்காமல் அதனால் என்ன பிரயோஜனம்? அதைப்போல இந்த வேதாகம புத்தகத்தை படிக்காமல் யாருக்கு என்ன லாபம்? சங்கீதக்காரன் தாவீது கூறுகிறார். (சங் 1:1,2-ல்) "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்".

இந்த பரிசுத்த வேதாகமத்தை நாம் ஜாக்கிரதையாக படித்து, அதை தியானித்து அதன்படி ஜீவித்தால், நம்முடைய இருதயத்தையும், ஜீவியத்தையும் அருமையானதாக மாற்றிவிடும். நம்முடைய பாதைக்கு வெளிச்சத்தை தந்து நம்மிலிருக்கும் அறியாமை என்னும் இருளை அகற்றி, நமக்கு சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுக்கும். இவ்வுலகிலிருக்கும்வரை ஜீவியத்தின் நோக்கத்தையும் தந்து, எல்லோராலும் நாம் விரும்பப்படத்தக்க ஒரு சிறந்த பிரஜையாகவும், நமக்கும் மற்றவருக்கும், நாட்டுக்கும், பெருமை தேடித்தரும். எல்லாவற்றிற்கும் மேலாக, இவ்வுலகை விட்டுச் செல்லும்போது, மறுமையில் நித்திய ஜீவனுக்கான நல்ல நம்பிக்கையையும் ஊட்டும். ஆகவே இதை மறவாமல் நாம் ஒவ்வொருவரும் தினமும் வாசிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, நாம் ஏன் வேதாகமத்தை வாசிக்க வேண்டும் என்பதை சற்று ஆராய்வோம். அதற்கு அனேக காரணங்கள் உள்ளன. ஆனால் சிலவற்றை மாத்திரம் நோக்குவோம்.

1. எப்படி ஒரு விதையை நாம் மண்ணிலே விதைக்கும் பொழுது அது உயிர் பெற்று வளருகிறதோ, அதைப் போல தேவ வசனமாகிய ராஜ்யத்தின் விதையை (லூக்கா 8:11) ஒருவன் இதயத்தில் விதைக்கும் பொழுது, அவன் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறான்.

ஒருவன் மறுபடியும் பிறந்தாலொழிய பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் (யோவான். 3:3-5) என்றார் இயேசு.

நாம் தேவனுடைய வசனத்தை படித்தாலொழிய அந்த மேலான ஆவிக்குரிய நிலையை அடைய முடியாது.

2. எப்படி சரீர வளர்ச்சிக்கு உணவை உட்கொள்ளுகிறோமோ, அதைப்போல ஆத்துமாவிற்கு உணவாக தேவனுடைய வசனத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும்."மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்". இயேசு (மத்தேயு 4:4).

மேலும், "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்" என்றார் (யோவான் 6:51). நாம் இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலும், அவரை அறிகிற அறிவிலே வளரவும் தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய உணவு அவசியம் (2பேதுரு3:18). அது இல்லாமல் நாம் ஆவிக்குரிய சக்தி, பெலனை அடைய முடியாது.

சாத்தானை எதிர்த்து நிற்கவும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம் தேவை (எபேசியர் 6:16, 17).

கிறிஸ்துவும், அப்படியே தாம் சோதிக்கப்பட்ட போது, தேவ வசனத்தைக் கொண்டே சாத்தானை மடங்கடித்தார் (மத். 4:1-11)

நன்மை செய்கிறவர்களாய் இருக்கவும், ஊழியம் செய்வதற்கான சக்தியைப் பெறவும் தேவ வசனம் தேவை. அது ரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது. (ரோமர் 1:16).

3. எப்படி இருள் மூடிக் கொள்ளுகிறபோது விளக்கைப் போடுகிறோமோ, அப்படியே அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞான வழியை அடையவும் தேவ வசனம் தேவை.

"எந்த மனிதனும் தன் நடைகளை தன்னாலே நடத்த முடியாது (எரே.10:23). தேவனுடைய வசனம், கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது". (சங்கீதம் 119:105).

நாம் செல்லும் வாழ்க்கைப் பாதையில் எத்தனையோ மேடுபள்ளம், குழியும் உண்டு. நம்மை மோசம் போக்கும் பிசாசின் தந்திரங்களும், நம்மை பட்சிக்க துஷ்டமிருகங்களும் உண்டு. தேவ வசனத்தை படிக்காமல், எது நல்லது கெட்டது, எது நன்மை தீமை என்றறிய முடியாது. தேவ வசனம் ஒன்றே நம்மை வெளிச்சத்தில் நடத்த வல்லதாயிருக்கிறது. ஏனெனில் தேவன் ஒளியாயிருக்கிறார் (1 யோவான். 1:5).

எப்படி நெருப்பை மூட்டி அனலைப் பெறுகிறோமோ அப்படியே இந்த கொடூரமான உலகத்தில் அனலுமின்றி, குளிருமின்றி ஜீவிக்கும் நமக்கு ஆவியின் அனலைப் பெற, தேவ வசனம் தேவை.

தேவன் அன்பாயிருக்கிறார் (1யோவான் 4:8), "தேவன் நம்மீது அன்பு கூர்ந்ததினாலே தம் குமாரனை நமக்கு தந்தார். அவரை விசுவாசிக்கிறவன் என்றும் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடைவான்" (யோவான் 3:16).

தேவ வசனத்தின் துணையில்லாமல் இந்த அருமையான தேவனுடைய அன்பின் நீளம், அகலம், ஆழம் அறிய முடியாது.

நாம் வேத வசனத்தைப் படிக்கும்போது, அந்த தேவனுடைய அன்பை அறிகிறோம். அப்பொழுது நம் இதயத்தில் அனல் மூட்டப்படுகிறது. அதன் பிரதிபலன், அந்த அன்பையே மற்றவரிடத்தில் பகிர்ந்து கொள்ளுகிறோம். (1 யோவான் 4:19)எப்படி நம் சரீரத்தின் வியாதிகளுக்காக மருந்தைஉட்கொள்கிறோமோ, அப்படியே பாவத்திலிருந்து நம்மை காப்பாற்ற ஒரே வழி, தேவ வசனத்தை படித்து அதன்படி நடப்பதே. (சங்கீதம் 119:11)

இதயத்திலுள்ள கசப்பான வைராக்கியம், பொறாமை, பகை, மேட்டிமை போன்ற விஷத்தை வெளியேற்ற விஷ முறிவாக இருப்பதும் தேவனுடைய வசனமே. அது பரிசுத்தமானது. பாவமும், தேவ வசனமும் ஒரே இதயத்தில் வாசஞ்செய்ய முடியாது. ஒன்று சேரும் பொழுது, மற்றொன்று ஓடிவிடும் (யோவான் 15:3).

எப்படி நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரம் தன் காலத்தில் தன் கனியை கொடுக்குமோ, அப்படியே நாமும் கனி கொடுக்கிறவர்களாயிருக்க தேவ வசனம் தேவை (சங்கீதம் 1:1-3).

எப்படிப்பட்ட கனிகளை கொடுக்கலாம் என்று பவுல் கூறுகிறார் "ஆவியின் கனியோ அன்பு சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் முதலியன" (கலாத்தியர் 5:22,23). வேத வசனத்தை படிக்காமல் நம் ஜீவியம் மலட்டுத்தன்மை அடையும்.

எப்படி ஒரு போட்டோ ஆல்பத்தில் அழகிய படங்களை காணுகின்றோமோ, அப்படியே நம்முடைய அருமை நண்பர் இயேசுவை, வேதாகாமத்தை படிக்கும் வாயிலாக காண்கிறோம். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அவருடைய தெய்வீக தன்மையை மற்றும் ஜீவியத்தை படம் பிடித்துக் காட்டுகின்றனர். அவரை அதிகதிமாக பார்க்க பார்க்க, அவரை போலவே நாமும் மாறும் முயற்சியில் வளர்கிறோம். (2கொரிந்தியர்3:18). இன்னும் நம்முடைய வருங்கால சுதந்திர வீடாகிய பரலோகத்தைப் பற்றியும் அதிலே பார்க்கிறோம் (யோவான் 14:2,3). அதைப் பார்க்கப் பார்க்க, அந்த இடத்திற்குச் செல்லும் வாஞ்சை மேலீட்டால் உந்தப்படுகிறோம் (வெளி. 21:1-4).

எங்கே, இப்பொழுது கூறுங்கள் இந்த அற்புதமான தேவனுடைய படைப்பாகிய வேதாகமத்தை எவ்வளவு பேர் வாசித்து அதன் பலனை அடையப்போகிறீர்கள் !

இன்றே இதை வாங்கிப் படியுங்கள்.

# வேதாகமம் தேவனுடைய வார்த்தை

– J.C.சோட்

இந்த உலகத்திலுள்ள பல லட்சக்கணக்கான மனிதர்கள் வேதாகமம், தேவனுடைய வார்த்தை என்றே விசுவாசிக்கின்றனர். இதை கேள்வியாகக் கேட்காமல் உண்மை என்று ஒத்துக்கொள்கின்றனர். மற்றவர்கள் இதன் பொருளை ஆராயாமலும், இதனுடைய கனிகளை பரிசோதியாத காரணத்தால் ஐயுறவு மனப்பான்மை உடையவர்களாக இருக்கின்றனர்.

இன்னும் சிலர், இந்த உலகத்தில் பிறந்து, வித்தியாசப்பட்ட போதனைகளை ஏற்றுக் கொள்ளுமாறு வளர்க்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், முழுவதுமாக வேதாகமத்தை தள்ளுபடி செய்கின்றனர். மேற்சொன்ன கூட்டங்களில் நீங்கள் ஒருவராக இருப்பீரானால், நீங்கள் ஏன் வேதாகமத்தை தேவனுடைய வார்த்தை என்று விசுவாசிக்க வேண்டும் என்பதற்கு சில காரணங்களை நான் சுருக்கமாகக் கூறுகின்றேன்.

1. வேதாகமம், தேவனுடைய வார்த்தை. அது கர்த்தருடைய வசனம் என்று அழைக்கப்படுகிறது(எரே.14:1) தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசினார்கள் என்று பேதுரு கூறுகின்றார் (1 பேதுரு 1:20,21). தேவ வசனம் என்று குறிப்பிட்டு கிறிஸ்துவும் அடிக்கடி பழைய ஏற்பாட்டிலிருந்து பேசி இருக்கிறார் (யோவான் 10:35). கடைசியாக, இவை தேவாவியினால் அருளப்பட்டதாக பவுலும் உரைக்கிறார் (2 தீமோத். 3:16-17).

2. வேதாகமம் விஞ்ஞானத்தோடு ஒத்துப்போவதாக உள்ளது. பூமி உருண்டை என்று மனிதன் கண்டு பிடிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே, பூமி உருண்டை என்றும், கடலில் பாதை இருக்கிறது என்றும் நூற்றுக்கணக்கான உண்மைகளை வேதாகமம் வெளிப்படுத்தியிருக்கிறது (ஏசா. 40:22; நீதி. 8:27). இவை அனைத்தையும் தேவன் தாமே வெளிப்படுத்தி இருந்தார்.

3. புதைபொருள் ஆராய்ச்சி கண்டு பிடிப்புகளும் வேதாகமத்தோடு ஒத்துப்போவதாக உள்ளது. கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவங்களைப்பற்றிய உண்மைகளை, அப்படிப்பட்ட கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்தி வேதாகமத்து கோரிக்கையை, ஒத்துக்கொள்ளச் செய்கிறது. ஜலப்பிரளயம் போன்ற சில வேதாகமத்து சம்பவங்களை சந்தேகப்பட்டவரும் உண்டு. ஆனால் 1872-இல் ஜார்ஜ் ஸ்மித் என்பவர் இந்த ஜலப்பிரளயத்தைப்பற்றி கூறும் பாபிலோனிய கல் வெட்டுகளை கண்டுபிடித்தார். இதைப் போன்றே அனேக உதாரணங்களை கொடுக்க முடியும்.

4. வேதாகமமும், பூகோளமும் ஒத்துப் போகிறது. இன்றுள்ள அனேக மலைகள், நதிகள், நகரங்கள், முதலியவைகளும் இப்பெயர்களில் வேதாகமத்தில் கூறப்பட்டவைகளும் ஒன்றாக இருக்கிறது. வேதாகமம் வெறும் கற்பனை இடங்களை கூறவில்லை என்பதை இது காட்டுகிறது.

5. வேதாகமமும், உலக சரித்திரமும் ஒன்றுக்கொன்று பொருந்துவதாகவே உள்ளது. உதாரணமாக, வேதாகமத்தில் கூறப்பட்ட அனேக சம்பவங்கள் வித்தியாசப்பட்ட உலக வரலாற்றிலே இடம் பெறுகின்றது. வேதாகமம் வெறும் கட்டுக்கதையானால் இவைகள் எப்படி பொருந்தும்?

6. வேதாகமம் மனிதனால் மாத்திரமே எழுதப்பட்டிருக்க முடியாது. ஏனெனில் அதிலுள்ள அனேக காரியங்கள் மனித அறிவுக்கு அப்பாற்பட்டவை. மனிதன் மாத்திரமே எழுதி இருந்தால், ஏன் இன்னும் யாரும் அதற்கு சமமாக எழுத முடியவில்லை. மனிதன் எழுதி இருந்தால் இதற்குள் வேறு யாரேனும் அதை விட சிறந்த புத்தகத்தை எழுதி இருக்க கூடும்.

7. வேதாகமம் ஒரு உன்னதமான ஐக்கியத்தை குறிக்கும் புத்தகம். சுமார் 1600 வருட இடைக்காலத்தில் வித்தியாசப்பட்ட இடத்தில் வாழ்ந்த, வித்தியாசப்பட்ட தொழிலைச் செய்து வந்த நாற்பது வித்தியாசப்பட்ட ஆசிரியர்களால் எழுதப்பட்டிருந்தாலும், ஒரு முழுமையான புத்தகமாக காட்சி தருகிறது. இதில் எழுதப்பட்டவைகள் முழுவதையும் தேவன் வழி நடத்தவில்லை என்றால் இந்த ஐக்கியம் எப்படி சாத்தியமாகும்?

8. வேதாகமம் அனேக தீர்க்கதரிசனங்களை உடையதாக இருந்தாலும், எவ்வாறு அவைகள் நிறைவேற்றப்பட்டது என்றும் வெளிப்படுத்துகிறது. உதாரணமாக, யோவேல் 2:28,29-ல் அதன் ஆசிரியர் கர்த்தருடைய ஆவி ஊற்றப்படும் நாட்களைப்பற்றி பேசுகிறார். பிறகு அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் பேதுரு, தீர்க்க தரிசி யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறியதாகக் கூறுகிறார். பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவைப்பற்றிய அனேக தீர்க்கதரிசனங்கள், புதிய ஏற்பாட்டில் நிறைவேறி இருக்கிறது. (ஏசாயா 53-ம் அதிகாரம்; லூக்கா 22:63, 64-ம் வசனங்களை படிக்கவும்).

9. காலத்தின் பரீட்சையை தாங்கி நின்றதால் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை உறுதிப்படுத்துகிறது. அதற்கு அனேக எதிரிகள் இருந்தனர். என்றாலும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிலைநிற்கிறது. அனேக நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. வேதாகமம் அப்படியே மாறாமல் இருக்கிறது என்பதை நிரூபிக்க, இன்றைய வேதாகம மொழிப் பெயர்ப்புகளை, புராதன கைப்பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

10. வேதாகமம் மனிதனுடைய மிகப் பெரிய கேள்விகளுக்கு விடையளிக்கிறது. மனிதன் எங்கிருந்து வந்தான்? இந்த வாழ்வில் அவனுடைய நோக்கமென்ன? மரித்த பின் எங்கே செல்லுகிறான்? வேதாகமம் ஒன்றே இதற்கு பதிலளிக்கிறது. மனிதன் தேவனிடத்திலிருந்து வந்தான். (ஆதி .1:26,27) இந்த வாழ்க்கையில் தன் சிருஷ்டி கர்த்தாவை மகிமைப் படுத்துவதே அவனுடைய நோக்கம் (1 பேதுரு 4:11) தன் நித்தியத்தை நிச்சயமாக எங்கே கழிக்கப் போகிறான்? (மத். 25:46) பரலோகத்தில் அல்லது நரகத்தில்.

11. உலகத்திலுள்ள எந்தப்புத்தகத்தைக் காட்டிலும் மனிதன் மீது மிகச் சிறந்த செல்வாக்கைப் பயன்படுத்துவது வேதாகமமே. எவ்வளவு மோசமான உலகத்தில் இருந்தாலும், அதனுடைய செல்வாக்கினால் பயன்தரக்ககூடியதாகவே இருக்கிறது.

12. வேதாகமம் என்றும் ஒழிந்து போகாது. கிறிஸ்து அவ்வாறு கூறி இருக்கிறார் (யோவான் 24:35) அப்படியானால், உண்மையிலே வேதாகமம் தேவனுடைய வார்த்தையே. இது தேவனிடத்திலிருந்து மனிதனுக்கு வந்தது.இது சத்தியம், இப்பொழுது நீங்களும் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று விசுவாசிப்பீர்களா ?



# தேவனுடைய வார்த்தையை நீ நம்பு

— பி.ஆர்.எஸ்

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்று சங்கீதக்காரன் தாவீது உரைப்பதாக பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

ஆம் பிரியமானவர்களே, தேவனுடைய வார்த்தையை தியானிப்பது நமக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும். ஏனெனில் கர்த்தருடைய பேச்சுக்கள் நீதியும், யதார்த்தமுமானவைகளாக இருக்கிறது.

அப்படியென்றால், பொய் வழியை தேவன் வெறுக்கிறார். இவ் உலகில் வாழும் மக்களுக்கு, எது நன்மை, எது தீமை என்று நிச்சயம் தெரிவதில்லை. தேவனுடைய வார்த்தை ஒன்றே எது நீதி, எது அநீதி, எது நியாயம், எது அநியாயம் என்று வரையறுக்க முடியும்.

தேவன் பாரபட்சம் இல்லாதவர். நீதியுள்ள நியாயாதிபதி. கர்த்தருடைய வார்த்தை உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது என்று வேதாகமம் வெளிப்படுத்துகிறது. கர்த்தருடைய வார்த்தையையும் அவருடைய செய்கையையும் சரிவர புரிந்துகொள்ளாததினால், அவருடைய நீதி நியாயத்தைக் கேள்விகேட்கிறோம். தவறாக எடை போட்டு விடுகிறோம்.

சங்கீதக்காரன் தாவீதுடன் சேர்ந்து நாமும், " கர்த்தாவே உம்முடைய வசனத்தை நம்பியிருக்கிறேன்" என்று சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சரி, இனி அவருடைய வசனத்தை நம்பியிருப்பதினால் வரும் பலன் என்ன என்பதை நோக்குவோம்.

அறியாமை நிறைந்த இந்த உலகத்தில், குருட்டாட்டத்தில் சென்று கொண்டிருக்கும் இவ்வுலகில், கர்த்தருடைய வசனமே, நம்மை வெளிச்சத்தில் நடத்துவதாக இருக்கிறது. மனுஷனுடைய வழி, அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் எரேமியா என்ற தீர்க்கதரிசி எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே கூறியிருக் கின்றார்.

மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும். அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர் என்று ஞானி சாலமோன் கூறியிருக்கிறார்.

மனுஷனிடத்தில் சுயம் இருக்கும் வரை, தன்னலத்தால் ஆளப்படும்வரை மற்றவனுக்கு நீதியைச் செய்வது எப்படி சாத்தியமாகும். இப்படி ஒரு குருடன், இன்னொரு குருடனுக்கு வழி காட்டினால். இருவரும் பள்ளத்தில் விழுவது திண்ணம். ஆகவே தான், மனுஷன், துன்மார்க்கனை நீதிமானாக்குகிறான். நீதிமானைக் குற்றவாளியாக்குகிறான்.

கர்த்தரோ, தம்முடைய நாமத்தினிமித்தம் நம்மை நீதியின் பாதையில் நடத்துகிறார். ஏனெனில் நீதியும், நியாயமும் அவர் சிங்காசனம்.

இரண்டாவது, கர்த்தருடைய வசனம் மனிதனைச் சரியான வழியில் நடத்தவல்லது. மனுஷனுடைய வழி அவன் பார்வைக்கு வேண்டுமானால் சரியாக தோன்றலாம். ஆனால் தேவனுடைய வழி அவன் பார்வையில் வித்தியாசமாக இருக்கும். மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள் என்று பரிசுத்த வேதம் கூறுகிறது. இங்கும் மனிதன் தனக்கு விருப்பமான, தனக்கு இஷ்டமான காரியங்களையே செய்ய வாஞ்சிக்கிறான். அது எந்த அளவுக்கு பிறரைப் பாதிக்கிறது என்பதை சிந்தியாமலே, செயலாற்றுகிறவனாக இருக்கிறான்.

உலகில் இரு வழிகளில் மனிதன் செயல்படுகிறான். இப்படித்தான் வாழவேண்டும் என்பது ஒருவழி, அது தேவனுடைய வழி; அது இடுக்கமான வாசல், நெருக்கமான வழி; அதைக் கண்டுபிடிப்பவர்கள் சிலர்; ஆம்! அது ஜீவனுக்குப் போகிற வாசல்.

எப்படியும் வாழலாம் என்பது மற்றோரு வழி; அது குறுக்கு வழி, அதன் வாசல் விரிவானது, வழி விசாலமுமானது. அதன் வழியாய்

பிரவேசிப்பவர்கள் அநேகர். ஆனால், அது கேட்டுக்குப் போகிற வாசல்; அநேகம் பொய் வழிகள் உண்டு. ஆனால் மெய் வழியோ ஒன்றுதான். நானே வழியும்,சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன்; என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று தேவ குமாரன் இயேசு கிறிஸ்து கூறி இருக்கிறார்.

தேவன் நமக்கு முன்பாக ஜீவ வழியையும், மரண வழியையும் வைத்து இருக்கிறார். இதில் எதை தேர்ந்தெடுப்பது என்பது அவனவன் பங்கு. நாம் கிறிஸ்துவாகிய சத்திய வழியை பின்பற்றினால் ஜீவனுக்குள் பிரவேசிப்போம். இல்லாவிட்டால் எல்லா பொய்வழிகளையும் பின்பற்றி நம் ஆத்துமாவை அழித்துக் கொள்வோம்.

தேவன் நமக்கு இரட்சிப்பின் வழியை தந்து இருக்கிறார். அது கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் இருக்கிறது. நாம் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசித்து, பழைய பாவங்களை விட்டு மனந்திரும்பி, வாயினால் கிறிஸ்துவை மனுஷர் முன்பாக அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்பொழுது, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் நம்முடைய பாவங்களை கழுவி இரட்சிப்பின் வழியில் நம்மை சேர்க்கிறது.

மூன்றாவது, கர்த்தருடைய வசனம் நீதியின் பாதையில் தொடர்ந்து நம்மை நடத்துகிறது. அநேகர் பழைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டதும், எல்லாம் முடிந்துவிட்டதாக எண்ணுவர். உண்மை அதுவல்ல. இரட்சிக்க படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் தம்முடைய சபையிலே சேர்க்கிறார் என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

சபை கிறிஸ்துவுக்குச் சொந்தம். அது அவருடைய சரீரம். தேவனுடைய குடும்பம். அதில் அங்கமாக்கப்பட்ட நாம் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரர்களாக நடந்து, மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருந்தால்தான் நித்தியமாக ரட்சிக்கப் படுவோம். அதற்கு சரியான போதனை அவசியம். ரட்சிக்கப்படுவதற்கு முன்னும் பின்னும் ஒருவன் சரியாக போதிக்கப்பட்டிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து தாமே, தாம் பரமேறிசெல்லும் முன்பாக, தம் சீஷர்களுக்கு கொடுத்த பிரதான கட்டளையில், "நீங்கள்

புறப்பட்டுப்போய், சகலஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில்அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்று கூறி இருக்கிறார்.

கிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று நிக்கொதேமு சாட்சி பகன்றான். ஆகவேதான் இயேசு இவ்வுலகில் இருந்தபோது, அதிகாரமுள்ளவராக மக்களுக்கு போதித்தார். அவர் போதனைகளைக் கேட்டு எல்லோரும் பிரமித்தார்கள். அந்த வார்த்தைகளையே, அவருடைய அப்போஸ்தலர்கள் முதல் நூற்றாண்டில் எங்கும் பிரசங்கித்தும் அவற்றை தங்கள் நிருபங்களில் எழுதியும் வந்திருக்கிறார்கள். அதன் தொகுப்பே புதிய ஏற்பாடாகும்.

புதிய ஏற்பாட்டைக் கொண்டுதான், கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய சபையைப் பற்றியும், அவருடைய உபதேசங்களைப் பற்றியும் அறிந்து கொள்ளமுடியும். கிறிஸ்து தேவனுடைய குமாரன். "அவர் குமாரனாயிருந்தும், பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்கு கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய ரட்சிப்பை அடைவதற்கு காரணரானார்" என்று புதிய ஏற்பாட்டிலுள்ள எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் அதன் ஆசிரியர் கூறுகிறார்

கிறிஸ்து ஒருவரே நம் இரட்சகர். அவராலேயன்றி வேறொருவராலும் ரட்சிப்பில்லை. கிறிஸ்து நம்மை ரட்சிக்கிறார். ரட்சிக்கப்படுகிறவர்களை கிறிஸ்து தம்முடைய சபையில் சேர்க்கிறார்.

ஆகவே ஒருவன் ரட்சிக்கப்பட்டிருந்தால் கிறிஸ்துவின் சபையில் அங்கமாயிருக்கவேண்டும். கிறிஸ்து, தம் சரீரமாகிய சபைக்கு இரட்சகராயிருக்கிறார். அவருடைய சரீரத்துக்கு வெளியே ரட்சிப்பு இல்லை. அவருடைய சபை, அவர் தம் திரு ரத்தத்தால் விலைக்கு வாங்கப்பட்டது. அந்த சபையில், எப்படி செயல்படுவது, எவ்விதம் ஜீவிப்பது? என்பதற்கான மாதிரிச் சட்டத்தை புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தி இருக்கிறார். அதையே நாம் பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டுமே தவிர, நம்முடைய முன்னோர்களின் பாரம்பரியங்களையல்ல.

வேதம் எங்கு பேசுகிறதோ அங்கு பேசி, வேதம் எங்கு மவுனமாயிருக்கிறதோ அங்கு மவுனமாயிருப்பதே அவர் மாதிரிச் சட்டத்தை பின்பற்றுதலாகும். கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை யுடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன் என்கிறார் அப்போஸ்தலனாகிய யோவான்.

ஏனெனில், கர்த்தருடைய வசனம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். "வானமும் பூமியும் ஒழிந்துபோம். என்வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை"என்று கிறிஸ்து கூறியிருக்கிறார்.

இறுதியாக, கர்த்தருடைய வசனம் நம்மை நியாயந்தீர்க்க வல்லது என்று பார்க்கிறோம். நம்மில் ஒவ்வொருவரும் தன்னைக் குறித்து தேவனுக்கு கணக்கொப்புவிக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது. அதற்காகவே கிறிஸ்து மீண்டும் வருகிறார். அவரது நியாயத்தீர்ப்பு நீதியானது. பாரபட்சமில்லாதது.

கிறிஸ்து கூறியிருப்பதை சற்று கவனத்தோடு கேளுங்கள். "என்னை தள்ளி, என் வார்த்தைகளை ஏற்றுகொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" என்றார்.

ஆம், பிரியமுள்ள நண்பனே, நீ கிறிஸ்துவின் வசனத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிறாயா? அல்லது மனித சித்தாந்தங்களுக்கும், கோட்பாடுகளுக்கும், வேதாந்தங்களுக்கும் கீழ்ப்படிந்திருக்கிறாயா?

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்று கூறும் விசுவாசியே, நீ எதற்கு கீழ்ப்படிந்திருக்கிறாய்? மனிதனால் இயற்றப்பட்ட சபை கோட்பாடுகளுக்கு கீழ்ப்படிந்திருக்கிறாயா? அல்லது கிறிஸ்துவின் மாதிரி சட்டத்திற்கு, புதிய ஏற்பாட்டு போதனைக்கு கீழ்ப்படிந்திருக்கிறாயா?

நாம் ஒவ்வொருவரும், கர்த்தருடைய வசனத்தை நம்பி, கிறிஸ்துவின் போதனைக்கே, கலப்பிடமில்லாத புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கே கீழ்ப்படிவோமாக.

# வேதாகமம்,தேவாவியினால் அருளப்பட்டது

– J.C.சோட்

வேதாகமம் தேவனுடைய வார்த்தை, தேவனுடைய மனுஷர்கள் தேவாவியினால் ஏவப்பட்டு பேசினார்கள். இந்த உண்மையை எத்தனையோ பேர் மறுத்திருக்கிறார்கள். இன்றும் ஏற்றுக்கொள்ள தயங்குகின்றனர். சிலர் வேதாகமத்தில் சொல்லப்பட்ட அற்புதங்கள் முடியாத காரியம் என்கின்றனர். இன்னும் சிலர் அற்புதங்கள் வெறும் இயற்கையின் விளையாட்டு என்பர். மற்றும் சிலர் வேதாகம ஆசிரியர்கள், சேக்ஸ்பியர் அல்லது ஒரு பாடலாசிரியரைப் போன்றவர்கள், எண்ணங்கள் மாத்திரம் தேவாவியினால் அருளப்பட்டிருக்கலாம், ஆனால் வேதாகமத்து ஆசிரியர்கள் அவர்கள் சொந்த வார்த்தைகளை உபயோகித்திருக்கிறார்கள் என்று கூறுவர். இன்னும் சிலர், வேதாகமம் தேவனிடத்திலிருந்து வரவில்லை என்று சாதிப்பர்.

**வேதாகமம் தேவாவியினால் அருளப்பட்டதாக கூறுகிறது.**

இந்த உண்மையை வேதாகமமே நிரூபிக்கிறது. தாவீது கூறுகிறார்: "கர்த்தருடைய ஆவியானவர் என்னைக்கொண்டு பேசினார்". (2 சாமுவேல் 23:2).அப்போஸ்தலனாகிய பேதுரு கூறி இருக்கிறார்: "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுபேசினார்கள்"(2பேதுரு1:21). "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது". என்றார் பவுல் (2 தீமோ. 3:16).

அப்படி என்றால், தேவன் தம்முடைய சித்தத்தை நமக்கு, இந்த வேதாகம ஆசிரியர்கள் மூலமாக வெளிப்படுத்தினார். அவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களை எழுதவில்லை. தேவன் தந்த வார்த்தைகளையே எழுதி இருக்கிறார்கள் என்று பொருள்.

ஆனால் வேதாகமத்தை மறுப்பவர்கள் என்ன கூறுவர், வேதாகமம் தனக்குத்தானே சுயசாட்சி கூறினால் மட்டும் போதாது, வேதாகமத்துக்கு வெளியே சாட்சியங்கள் வேண்டும், அப்பொழுதுதான் இதை உண்மை என்று ஒப்புக்கொள்ள முடியும் என்பர். ஆனால் வேறு எத்தனையோ விவகாரத்திலும் சுய சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

உதாரணமாக, ஒரு குடியானவன் தான் விளைவித்த கோதுமையின் தரத்தை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. வழக்கு மன்றங்களிலும் பிரதிவாதி தனக்குத் தானே சாட்சியாக இருக்க முடியும்.அவன் பொய்யன் என்று நிரூபிக்கப்பட்டாலொழிய அவன் சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மிட்டாய் என்பதற்கு உண்மையான நிரூபணம் அதை சாப்பிடுவதில் உள்ளது. மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஆச்சரியப் படத்தக்க ஐக்கியத்தையும், தீர்க்கதரிசனங்களும் அவற்றின் நிறைவேறுதலையும், காலத்தினால் அழிக்கப்பட முடியாத தன்மையையும் பார்க்கும்பொழுது வேதாகமம் உண்மை என்றே நம்ப வேண்டி இருக்கிறது.

வேதாகமத்திலுள்ள பொதுவான அம்சங்கள், தலைப்புகள் மாத்திரம் தேவாவியினால் அருளப்பட்டது என்ற கூற்றுக்கு மாறாக, வேத வாக்கியங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய முறையே தேவனால் அருளப்பட்டிருக்கிறது. மறுபடியும் வேதாகமமே இதற்கு பதில் கூறட்டும். எகிப்து நாட்டின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்களை அழைத்துவர மோசே தேவனால் அழைக்கப் பட்டபோதுஅவன் கூறியது,"நான் வாக்குவல்லவன் அல்ல.நான் திக்கு வாயும் மந்த நாவும் உள்ளவன்" என்றான் (யாத்தி 4:10) அதற்குக் கர்த்தர், "நீ போ, நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன்" என்றார் (12-ம் வசனம்).

இதே வாக்குறுதி அப்போஸ்தலர்களுக்கு இயேசுவினால் அளிக் கப்பட்டது."அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது எப்படிப்பேசு வோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படா திருங்கள். நீங்கள் பேச வேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" என்றார் இயேசு.

(மத்தேயு 10:19,20). தேவன் என்ன கூறினார் என்பதை மோசே வெளிப்படுத்துகிறபோது: "கர்த்தர் கூறியதாவது, இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக் கடவது" என்றார் (உபாகமம் 6:6). அப்போஸ்தலர்கள் நிமித்தமாக கிறிஸ்து பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறபோது, "நீர் எனக்கு கொடுத்த வார்த்தைகளை, நான் அவர்களுக்கு கொடுத்தேன். அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டார்கள்" என்றார் (யோவான் 17:8).

உண்மையிலே தேவன் தம் வார்த்தைகளை அவர்கள் மனதில் ஊதி, அவர்கள் உபயோகித்த நாவையும், எழுதுகோலையும் கட்டுப்படுத்தி இருக்கிறார். தேவன் ஏசாயாவுக்கு கூறும்போது, "நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி" என்றார் (ஏசாயா 51:16). தாவீதும், "கர்த்தருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது" என்றார் (2 சாமு. 23:2). கிறிஸ்துவும் அவருடைய வார்த்தைகளை உலகத்துக்கு கொடுக்க இருப்பவர்களுக்கு கூறிய உறுதிமொழி, "நான் வாக்கையும், ஞானத்தையும் உங்களுக்கு கொடுப்பேன்" என்றார் (லூக்கா 21:15). இந்த வாக்கையும், ஞானத்தையும் பெற்ற பவுல் அப்போஸ்தலன் கூறியது. "அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல் பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி" என்றார் (1 கொரிந்தியர் 2:13).

வேதாகமம் மாத்திரமல்ல, வேதாகம ஆசிரியர்களும் அவ்வாறெ எண்ணத்தினாலும், வார்த்தையினாலும் தேவாவியினால் வழி நடத்தப்பட்டதாக கூறுகின்றனர். எசெக்கியேல் தீர்க்கத்தரிசி "எங்கே, எப்பொழுது, எந்த சந்தர்ப்பத்திலே, கர்த்தருடைய வார்த்தை உண்டாகி" என்று கூறுகிறார் (எசேக். 1:1-3). ஆமோஸ் வார்த்தைகளை தரிசனங்கண்டதாகக் கூறுகிறார் (ஆமோஸ்1:1). மீகாவும், கர்த்தருடைய வார்த்தையை தரிசித்ததாகக் கூறுகிறார். (மீகா. 1:1). பவுல் அப்போஸ்தலன், தன் பேச்சும், பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நய வசனம் உள்ளதாக இருக்க வில்லை. என்றார் (1 கொரி. 2:5). பின்னும் தான் போதித்த காரியங்கள் இயேசு கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்ட காரியங்கள் என்றார். (கலா. 1:12). சீமோன் பேதுரு, "நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே" என்றார் (அப்.4:20).

பின்னும் அவர் எச்சரிப்பதாவது ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் (1 பேதுரு 4:11).

ஆகையினால், வேதாகம ஆசிரியர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட வார்த்தைகளையே நமக்கும் எழுதி வைத்து இருக்கிறார்கள். நாம் வேதாகமத்தை பிரசங்கிக்கும் வேளையில், நாம் கர்த்தருடைய வார்த்தைகளையே பிரசங்கிக்கிறோம். நாம் வேத வசனங்களை கூறும் பொழுது, நம்முடைய வார்த்தைகள் தேவாவியினால் அருளப்பட்டிருக்கிறது. நாம் அல்ல.

ஆதி கிறிஸ்தவர்களைப் பற்றியும், வேதாகாமத்தைப் பற்றி யும் சில உண்மைகளை இப்போது ஆராய்வோம்.

ஆதி கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை காணவில்லை என்றும், கிறிஸ்து மரித்து சுமார் 60 வருடங்களுக்கு மேல், புதிய ஏற்பாடு உரு வாக்கப்படும் கட்டத்தில் இருந்தது. புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்படுவதற்கு முன்பே எத்தனையோ ஆயிரக்கணக்கான பேர் தங்கள் விசுவாசத்திற்காக தியாகிகளாக மரித்திருக்கின்றனர். ஆகவே அந்த காலத்தில் கத்தோலிக்க சபையினிடம் மாத்திரமே சத்தியம் இருந்தது என்று எப்படி கூறமுடியும்?

முதலாவது, அந்த காலத்தில் ரோம கத்தோலிக்க சபை இருக்கவில்லை. அது நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு பின்னரே தோன்றியது. அதுவும் சத்தியத்தை விட்டு வழி விலகிச் சென்றதன் விளைவாக (2 தெச. 2:1-11; 1 தீமோ. 4:1-4).

இரண்டாவது, வேதாகமம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட மனுஷர்களால் எழுதப்பட்டது (2 பேதுரு 1:21;1 கொரி. 2:13). வேதா கமம் எழுதப்படுங்காலத்தில் வேதாகமத்தை எழுதிய ஆசிரியர்கள் தேவாவியினால் ஏவப்பட்டிருந்தார்கள். வேதாகமம் எழுதி முடித்த பின்பு, வேதாகமம் தேவாவியினால் அருளப்பட்டிருந்தது. மனிதர்கள் அல்ல.

இன்னும் வேதாகமத்தில் எல்லாம் வெளிப்படுத்தப்பட வில்லை, இது போதுமானது அல்ல என்று சாதிப்பர் சிலர். 2 தீமோ 3:16-17,வசனங்களை வாசித்தாலே, வேதாகமம் போதுமானது என்று

அறியலாம். "வேத வாக்கியங்களெல்லாம், தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத்தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத் தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமாயிருக்கிறது". யோவான்21:25-ல் "இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால், எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாது" என்று வாசிக்கிறோம்.

ஆனால் இவைகள் ஏன் எழுதப்பட்டது என்பதற்குரிய கார ணத்தை யோவான் அறிவிக்கிறார். "இயேசு தேவனுடைய குமாரனா கிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" என்றார் (யோவான் 20:31). கடைசி யாக வேதம் கூறுவதைக் கவனிப்போம்.

1. கிறிஸ்து உலகத்திலிருந்தபோது, அப்போஸ்தலர்களுக்கு பரி சுத்த ஆவியானவர் மூலம் எல்லா சத்தியங்களையும் அளிப்பதாக வாக்குத்தத்தம் பண்ணி இருந்தார் (யோவான் 14:26;16:13). அப்போஸ்தலர்களும் முதல் நூற்றாண்டிலே இந்த சத்தியங்களை பெற்றுக் கொண்டனர் (அப்போஸ்தலர் 20:20-27; 2 பேதுரு 1:3; யூதா 1:3; எபேசி. 3:3-5). எல்லா வேத வாக்கியங்களும் முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்டன. வேதவசனங்களே விசுவாசப்பிரமாணங்கள் (ரோமர் 12:6). அவைகள் கர்த்தருடைய கற்பனைகள். (1 கொரிந்தியர் 14:37). அந்த வேதவசனங்களைக் கொண்டே ஒவ்வொருவனும் நியாயந்தீர்க்கப்படப் போகிறான். (யோவான் 12:48).

அந்த வேத வசனங்கள் நம்மை தேவனுக்கு முன்பாக தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாக வும் செய்யும் (2 தீமோ, 3:16,17).

# கிறிஸ்தவ மார்க்கம் உங்களுக்கு எதைச் செய்ய வல்லது

– J.C.சோட்

கிறிஸ்தவ மார்க்கம் இந்த உலகத்திற்கு நிறைய நன்மைகளைச் செய்து இருக்கிறது. இதை ஏற்றுக் கொள்ளாதவர்களும் கூட இதன் செல்வாக்கினால் கவரப்பட்டிருக்கின்றனர்.இதினிமித்தம்,எவ்வளவோ தீமையான மனிதனாக இருப்பினும் ஒரு நல்ல மனிதனாக மாற்றப் படுகிறான்.

கிறிஸ்தவ மார்க்கம் இவ்வுலகில் இல்லாமற் போயிருந்தால் இந்த உலகத்திற்கு எவ்வளவு இழப்பு என்று பாருங்கள். அப்பொழுது இவ்வுலகம் வசிப்பதற்கு மிக பயங்கரமான இடமாக இருந்திருக்கும் என்பதற்கு சந்தேகம் இல்லை.

மனுக்குலத்திற்கு கிறிஸ்தவ மார்க்கம் எவ்வளவோ நன்மை களை செய்திருந்தாலும், இன்னமும் தனிப்பட்ட மார்க்கமாகவே இருக்கிறது. இதிலிருந்து நாம் வேண்டிய நன்மைகளை பெற விரும்பினால், அதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதனுடைய ஸ்தாபகர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவருடைய உபதேசங்களை பின்பற்றி நடந்தால் இது சாத்தியமாகும். அப்படிச் செய்யும் பொழுது, அதன் கொள்கைகள் நம் வாழ்க்கையில் நுழைந்து நல்ல கனிகளை கொடுக்கும் அளவிற்கு நம்மை ஆசீர்வதிக்கும்.

ஏதோ ஒரு மதத்தை சார்ந்திருப்பதாலோ அல்லது கிறிஸ் தவ மார்க்கத்தை மனதில் மட்டும் ஏற்றுக்கொள்வதினாலோ, சொல்லி முடியாத ஆசீர்வாதங்களை பெற முடியும் என்று அனேகர் எண்ணு கின்றனர். ஆகவே, தங்கள் பிரச்சனை எல்லாம் உடனடியாகத் தீர்ந்து, ஒரு பணக்காரனாக மாறுவோம் என்று மனக்கோட்டைகள் கட்டுகின்றனர்.

இப்படிப்பட்ட எண்ணம் யாருக்கு வரும் என்றால், ஆவிக்குரிய காரியங்களின் மீது அக்கரை கொள்ளாது, உலகப் பிரகாரமான ஆதாயத்தை எண்ணி இருப்பவர்களுக்கே. அப்படிபட்டவர்கள் தங்கள் கனவு பலிக்காமல் ஏமாற்றம் அடைவதுண்டு. சீக்கிரமாக மதம் மாறி போய் விடுவதுமுண்டு.

கிறிஸ்தவ மார்க்கம் ஒரு எளிமையான மார்க்கம். இதை ஏற்றுக் கொண்டு, கீழ்ப்படிபவர்களுக்கு அநேக பலன் உண்டு. ஒருவன் விசுவாசம், கீழ்ப்படிதல், சத்தியம் இவற்றின் மூலமாகத்தான் கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்றுக்கொள்ள முடியும். மனப்பூர்வமாக இதை ஏற்றுக் கொண்டவர்களுக்கு சரீரப்பிரகாரமான நன்மைகளும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிடைக்கும். கிறிஸ்தவ மார்க்கம் உங்களுக்கும், கீழ்கண்ட ஆசீர்வாதங்களை கொண்டுவரும்.

1. கிறிஸ்தவ மார்க்கம் உங்களுக்கு கடந்தகாலப் பாவங்களிலிருந்து, ரட்சிப்பை கொண்டுவரும். கிறிஸ்து தமக்கு கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய ரட்சிப்பை அளிக்கும் காரணர் (எபிரெயர் 5:9). அவர் கூறினார், "விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் ரட்சிக்கப்படுவான்" (மாற்கு 16:16).

மனிதன் ஒரு பாவி. அவனுக்கு மன்னிப்புத்தேவை. மனிதனுடைய விலையேறப்பட்ட பொக்கிஷமாகிய அவன் ஆத்துமாவை கழுவி, சுத்திகரித்து, ரட்சிப்பவர் கிறிஸ்து ஒருவரே (லூக்கா 19:10;).

2. கிறிஸ்தவ மார்க்கம், தேவனுடைய அனேக வாக்குத்தத்தங்களைப் பெற உதவி செய்கிறது. பரிசுத்த ஆவியின் வரம். (அப்போஸ்தலர் 2:38). சபையில் சேர்க்கப்படுதல் (அப்போ 2:47). கர்த்தர் நம்மோடிருப்பது (மத்தேயு 28:20), ஜெபத்தில் தேவனோடு உறவு கொள்ளும் சிலாக்கியம். (யோவான் 9:31), மற்றும் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை (யோவான் 14:1-3).

3. கிறிஸ்தவ மார்க்கம் சரீரபிரகாரமான மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் தருகிறது. "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" என்றார் கிறிஸ்து (மத்தேயு 6:33).

பாருங்கள், தேவனுடைய ராஜ்யமாகிய சபைக்கு முதலிடம் கொடுப்பவர்களுக்கு இவைகளெல்லாம் கூடக் கொடுக்கப்படும் என்றார். அடிக்கடி கிறிஸ்தவர்கள் தங்களுக்கு அதிக ஆசீர்வாதங்கள் கிடைக்கப் பெறவில்லை என்று கவலைப் படுகிறார்களே தவிர கர்த்தருக்கு தாங்கள் ஒன்றும் செய்வதில்லை என்பதை எண்ணிப் பார்ப்பது கிடையாது. மத்தேயு 5-ம் அதிகாரத்தை வாசிக்கவும்.

4. கிறிஸ்தவ மார்க்கம், நன்மை செய்ய சந்தர்ப்பத்தை கொடுக் கிறது. "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்"(கலாத்தி 6:2). "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்" (கலாத்தியர் 6:10).

5. அதிகமாய் கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கிறவன், அதிகமாய் பெற்றுக் கொள்வான் என்று கிறிஸ்தவ மார்க்கம் போதிக்கிறது. பவுலும் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு கூறிய அறிவுரையில், "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான் பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" என்றார் (2 கொரிந்தியர் 9:6). மேலும் "ஒருவன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" என்றார் (கலாத்தியர் 6:7).


6. வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் என்று கிறிஸ்தவ மார்க்கம் கூறுகிறது. இயேசு தாமே அப்படிகூறி இருக்கிறார் (அப்போஸ்தலர் 20:35). மேலும், "தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்" (மத்தேயு 10:39).

7. கிறிஸ்தவ மார்க்கம், இந்த உலகத்திலிருந்து, பரலோகத்திற்கு எடுத்துச் செல்லும் ஜீவியத்தின் வழியை ஒருவனுக்குக் காட்டுகிறது. "மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்பு கிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்றார் இயேசு (லூக்கா 6:31). ஒரு மனிதன் தன் விரோதியையும் நேசிக்க வேண்டும் என்றார் (மத்தேயு 5:44). தன்னைப் போல் பிறனையும் நேசிக்க வேண்டும் என்றார் (மத்தேயு 22:39).

ஒரு கிறிஸ்தவன் உலகத்தின் மீது அன்பு கூறாமல் (1யோவான் 2:15). இருதயத்தில் சுத்த முள்ளவனாக இருந்து (மத்தேயு 5:8), தன்னை தேவனுக்கு ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்றார்(ரோமர்12:1). இவைகளின் முடிவோ, இவ்வுலகில் சந்தோஷமும், சமாதானமுள்ள ஜீவியம், மறுமையில் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை (கொலோசெயர் 1:1-5).

இதற்குமேல் ஒருவன் என்ன எதிர்பார்க்கப் போகிறான்?

ஆகவே, கிறிஸ்தவ மார்க்கம் விலையேறப்பெற்றது. ஒரு வன் எந்த அளவுக்கு தன்னை ஒப்புக் கொடுக்கிறானோ, அந்த அளவுக்கே ஆசீர்வாதத்தையும் பெறுவான். தேவனுக்கு சமூலமாக ஒப்புக் கொடுக்காமல் ஒருவன் எதையும் அவரிடத்திலிருந்து பெற எதிர்பார்க்கமுடியாது. தேவனுக்கு ஒருவன் தன்னை ஒப்புக் கொடுத்து, அவர் வழியில் நடந்தால், தான் எதிர்பார்ப்பதற்கு அதிகமாக ஆசீர்வதிக்கப்படுவான்.



# நான்கு வேதாகம கேள்விகள்

– J.C.சோட்

ஒரே ஒரு சபைதான் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது (எபேசியர் 4:4; கொலோசெயர் 1:18). இருப்பினும், இன்று உலகத்தில் அநேக சபைகள் உள்ளன. ஆகவே, வேதாகமத்தில் குறிப்பிடுகிற அந்த ஒரே சபை எது என்று எவ்வாறு ஒருவன் அறிய முடியும்? என்ற கேள்விகள் எழும்புகின்றன. எல்லா சபைகளும் தேவனுடைய வசனத்தின்படி செல்லுவதாக கூறுகின்றன. ஒரே ஒரு சபைதான் என்றால், அப்பொழுது மற்ற சபைகள் கர்த்தருக்குச் சொந்தமானவைகளாயிருக்க முடியாது. எது உண்மையான சபை என்று தீர்மானிக்க நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் நான்கு எளிய கேள்விகளை கேட்கவேண்டியது. இன்னும் பல கேள்விகளை கேட்கலாம். ஆனால் ஒரு சபை உண்மையானதா அல்லது போலியா என்று கூற நான்கு கேள்விகள் போதுமானவை.

இந்தக் கேள்விகளைக் கேட்டு, அதற்கான பதிலை வேதாகமத்திலிருந்து எடுத்துரைப்போம்.

## 1. யார் சபையை ஸ்தாபித்தது?

கிறிஸ்துவே சபையை ஸ்தாபித்தார் என்று வேதாகமம் தெளிவாக உரைப்பதை எல்லோரும் ஒத்துக் கொள்ளுவோம் என்று நம்புகிறேன். கிறிஸ்து, தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்யப்பட்டதையொட்டி, அவர் கூறியதாவது, "நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத்தேயு 16:18). கிறிஸ்து சபையை கட்டுவேன் என்று வாக்குதத்தம் செய்திருந்தாரானால், கிறிஸ்துதான் சபையை கட்டினார் என்று கூறவும் வேண்டுமா? ஆம் அவரேதான். மேலும்

கிறிஸ்து ஒரு சபையைக் கட்டவேண்டியவராக இருந்தாரே தவிர பல சபைகளை அல்ல. ஆகவே ஒன்றையே கட்டினார். பிறகு அது தனக்கு சொந்தமானது என்றும் கூறி இருக்கிறார். "என் சபை" என்று கூறி இருக்கிறார். இதை தயவுசெய்து நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அப்படி இது அவருடைய சபையாக இருக்கும்பட்சத்தில் உங்களுடையதாகவோ, என்னுடையதாகவோ இருக்க முடியாது.

## 2. எங்கே ஸ்தாபிக்கப்பட்டது?

அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் உள்ளபடி, சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. எப்படி நமக்கு தெரியும்? ஏனெனில் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேமில் காத்திருங்கள் என்று கிறிஸ்து அப்போஸ்தலருக்கு கட்டளையிட்டிருந்தார்(லூக்கா 24:49). அந்த பெலன் வரும்போது அவர்கள் எருசலேமில் இருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:1-4). அது மாத்திரமல்ல ஏசாயா தீர்க்கதரிசி, ராஜியம் அல்லது சபை எருசலேமிலே ஸ்தாபிக்கப்படும் என்று கூறி இருக்கிறார் (ஏசாயா 2:2,3.).

## 3. எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?

அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி சபை கிறிஸ்துவினால் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டதானால், அது ஸ்தாபிக்கப்பட்ட வருடம் கி.பி. 33. அப்படியென்றால், கர்த்தருடைய சபை ஸ்தாபிதம் ஆகி சற்றேறக்குறைய 2000 ஆண்டுகள் ஆகிறது.

## 4. எந்த நாமத்தை அது தரிக்கிறது?

தனிப்பட்ட அங்கத்தினர்கள் 'கிறிஸ்தவர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர் (அப்போஸ்தலர்11:26;26:28;1பேதுரு 4 :16). எல்லா கிறிஸ்தவர்களும் சேர்ந்து சபையாக தொகுக்கப்படுகின்றனர். வேத வசனத்தில், அது கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்படுகிறது (1 கொரி.12 : 27). ஆனால் சரீரமாவது சபை என்று பார்க்கிறோம் (கொலோசெயர் 1:18).

ஆகவே அது கிறிஸ்துவின் சபை. பவுலின் காலத்தில் தனித்தனி பிராந்திய சபைகள், கிறிஸ்துவின் சபைகள் என்று

பேசப்பட்டது(ரோமர்16:16). கிறிஸ்து சபையை ஸ்தாபித்திருந்தால், அது இயற்கையாக அவருடைய நாமத்தைத்தான் தரித்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சபை அல்ல என்றால் பின் யாருடைய சபை? அவருடைய நாமத்தை தரிக்கவில்லை என்றால் அது கிறிஸ்வின் சபையாகுமா?

இவைகள் தான் அந்த நான்கு எளிய கேள்விகளும் எளிய விடைகளும், ஒரு சபை கிறிஸ்துவின் சபையா இல்லையா என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தால், அதைக்குறித்த இந்த நான்கு கேள்விகளை கேட்டுஅதன் விடைகளையும் கண்டுபிடியுங்கள். ஒரு சபை கிறிஸ்துவின் சபை என்று அழைத்தாலும், அது மனிதனால் ஸ்தாபிக்கப்பட்டிருக்குமேயானால், அப்பொழுது கர்த்தருக்கு சொந்த மானதாக இருக்க முடியாது.

லண்டனிலோ, அமெரிக்காவிலோ ஏதேனும் ஓரிடத்திலோ, அல்லது உலகத்தின் எங்கோ ஒரு பாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கு மேயானால் அது எப்படி கிறிஸ்துவின் சபையாக இருக்கக்கூடும்? கடந்த சில நூற்றாண்டுகளில் ஸ்தாபிக்கப்பட்டிருக்குமேயானால், கர்த்தருடைய சபையாக இருப்பதற்கு அது மிகவும் இளமையானதாகஇருக்க முடியும். முடிவாக, மனித நாமத்தை ஏற்றுக் கொண்டிருந்தால், அப்பொழுது ஒரு வெறும் நாமகரண கூட்ட சபையாகும். ஒரு சபை தேவனிடத்திலிருந்து வந்ததா, மனிதனிடத்திலிருந்து வந்ததா என்பதை பரீட்சை பார்க்க இதுதான் வழி என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? இந்த பரீட்சை என்றும் தோல்வியடையாது.

வேதாகமத்து போதனைகளின்படி, ஒரே ஒரு அம்சத்தை தவிர மற்ற எல்லா அம்சங்களிலும் பொருந்தி இருக்கிற ஒரு சபையைக் கண்டால் அதுவும் கிறிஸ்துவின் சபையாக இருக்க முடியாது. அது வேதாகமத்தில் சொல்லப்பட்ட அந்த ஒரே சபையாயிருக்குமானால், வேதாகமத்து போதனைகளின் ஒவ்வொரு அம்சத்திலும் பொருந்துவதாக இருக்க வேண்டும்.

என் நண்பனே, கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினனாக இருக்கிறீரா? இந்த நான்கு கேள்விகளையும் உங்களைப் பார்த்து கேட்டுப் பாருங்கள். அப்படிச் செய்து, ஒரு நாமகரண கூட்ட

சபையில் நீங்கள் இருப்பதைக் கண்டுபிடிப்பீரானால், உங்கள் வேதாகமத்தைத் திறந்து படித்து, கர்த்தருக்கு கீழ்ப்படியும்படி வேண்டுகிறோம். அதைச் செய்வீரானால் கர்த்தர் உங்களை ரட்சித்து தம்முடைய சபையில் உங்களை சேர்த்துக் கொள்வர்.

தவறிப்போய், தவறான சபையில் சேர்க்கமாட்டார். அவருடைய சபை அவருக்கு நன்றாகத் தெரியும். அந்த ஒரே சபையில் உங்களை சேர்ப்பார் (அப்போஸ்தலர் 2:47). அப்பொழுது வேதாகமத்தில் வாசிக்கிற அந்த சபையில் ஒரு அங்கமாக இருக்கலாம். சாக்குபோக்குகள் கூற வேண்டிய அவசியமுமில்லை. ஏன் இந்த சபையில் இருக்கிறேன் என்று விளக்கம் கூறத் தேவை இல்லை. காரணம், கர்த்தரிடத்தில் ஒரே ஒரு சபை உண்டு. அந்த ஒரே சபையில் நீங்கள் அங்கத்தினனாக இருக்கலாம்.

# விசுவாச வீரன் ஏனோக்கு

*ஏனோக்கைப் பற்றி இரண்டு சுவாரஸ்யமான காரியங்கள் உண்டு. உலகத்திலே அதிக வருடம் வாழ்ந்தவனான மெத்தூசலாவைப் பெற்றவன் இந்த ஏனோக்கு. ஏனோக்கு 65 வயதுடையவனாக இருக்கும் போது, மெத்தூசலாவைப் பெற்றான் . மெத்தூசலா 969 ஆண்டுகள் வாழ்ந்தான். ஒரு மனிதனுடைய தரமுள்ள வாழ்க்கை , எவ்வளவு நீண்ட காலம் என்பதைப் பொறுத்தது அல்ல, எப்படிப்பட்ட ஜீவியம் என்பதைத்தான் பொறுத்தது. மெத்தூசலாவைப் பற்றி சொல்லப்பட்டது எல்லாம், அவன் பிறந்தான், ஜீவித்தான், பிள்ளைகளைப் பெற்றான், மரித்தான் அவ்வளவு தான். (ஆனால் இயேசு கிறிஸ்து சுமார் 33 வருடமே இவ்வுலகில் இருந்தார். ஆனால் ஒப்பிடப்பட முடியாத ஒரு மலைபோல அவர் தம் ஜீவியத்தால் உலகத்திற்கு பெரிய ஆசீர்வாதமாக திகழ்ந்தார்).*

*இரண்டாவது காரியம், விசுவாசத்தினால் ஏனோக்கு மரணத்தை காணாத படிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான். தேவன் அவனை எடுத்துக் கொண்டபடியினால் அவன் காணப்படாமற்போனான். ஏன் தேவனால் எடுத்துக் கொள்ளப்பட்டான் ? அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே, தேவனுக்கு பிரியமானவனென்று சாட்சி பெற்றான். இந்த விசுவாச வீரனுடைய குணம் இவ்வளவு பெருமைக்குரிய பாராட்டைப் பெற அவனை தகுதியாக்கிற்று. ''ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான்,'' என்ற சொற்றொடர் ஒரு உருவக அணி. ஏனோக்கு அவன் காலத்து ஜனங்களால் நன்மதிப்பை மாத்திரம் பெற்றிருக்கவில்லை. தேவ நீதியைச் செய்தவனாகவுமிருந்தான் (ஆதி. 5:21 - 24).*



# வேதாகமத்துக்கே திரும்புங்கள்

தேவ வசனத்தை புறம்பே தள்ளி அதற்குப் பதிலாக மனுஷ கற்பனைகளுக்கும் உபதேசங்களுக்கும் இடம் கொடுத்த காரணத்தாலேயே தற்போதய மார்க்கநிலை இத்தகைய பாழான கதியை அடைந்திருக்கிறது.

பரலோகத்தின் தேவனுக்கு செவி கொடுப்பதற்கு முன்னதாக மனுஷனுக்கு ஒருவன் பணிவானேயாகில் அது எவ்வளவு துக்கத்துக்குரிய ஓர் காரியமாயிருக்கும்.

இது யாவரையும் நடுநடுங்கச் செய்து "தேவனே எமக்கு மன்னியும், நாம் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறோம்" என்று ஏக சத்தமாய்க் கூக்குரலிட்டுச் கத்தச் செய்யும்.

கர்த்தர் சொல்வதை கேட்பதற்கு மனுஷன் முற்றாகவே வேதாகமத்துக்குத் திரும்பவும் போக வேண்டியவனாயிருக்கிறான்.

ஏன் இப்படிச் செய்யவேண்டுமென்பதற்குப் பவுல் நமக்கு சொல்லுகிறதாவது "வேத வாக்கியங்கௌெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்குபடியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2தீமோ3:16,17).

இப்படியாக வேதவாக்கியம் மனுஷனை சகல நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாக இருக்கச் செய்யும் போது, அவன் ஏன் அதைச் தள்ளிவிட்டுபுதியதொன்றை நாடிச் செல்லுகிறான்?

காரணம்யாதெனில் சத்தியத்தின்மேல் அவனுக்கு இருக்க வேண்டிய அன்பு இல்லாமையே ஆகும்.

ஆவிக்கடுத்த காரியங்களுக்கு எல்லாம் வேதாகமத்தை ஓர் பூரண மூல புத்தகமாகக் கிறிஸ்துவின் சபை ஒப்புக்கொள்ளுகிறது. இது காரணமாக, இச்சபை வேதாகமம் பேசுமிடத்தில் பேசவும், வேதாகமம் மௌனமாயிருக்குமிடத்தில் மௌனாமாயிருக்கவும், வேதாகமத்துக்குரிய காரியங்களை வேதாகம முறைப்படி செய்யவும் முயலுகிறது.

இதைக் கொண்டே கிறிஸ்துவின் நாமத்திலே சொல்லப்பட்டு அல்லது செய்யப்பட்டு வரும் எந்த காரியத்துக்கும் வேதாகமத்துக்கே திரும்புமாறு நம்மைச் சூழவிருக்கும் பக்தியுள்ள ஜனங்களை நாம் வருந்தி கேட்கிறோம்.

ஒருவன் வேதாகமத்தோடுநிலை நிற்குமட்டும் பிழை போகமாட்டான். ஆனால் அதிலிருந்து விலகிப்போவானேயாகில் தொல்லைகள் அவன் மேல் சூழும். நாம் சொல்லி கொள்ளுகிறபடி வேதாகமத்தில் நமக்கு மெய்யான விசுவாசமிருந்தால் சபையை பற்றிய

சத்தியத்தை அறிந்து கொள்வதற்கு வேதாகமத்துக்கே திரும்ப வேண்டும்.

கிறிஸ்து சொல்லுகிறதாவது: "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்: பாதாளத்தின் வாசல்கள் அதைமேற்கொள்வதில்லை". (மத். 16,18). அவர் தன் சபையை கட்டுவேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினார், அவர் அந்தப்படியே தன் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார் என்று அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

இப்பொழுது நாம் கிறிஸ்து வாக்குதத்தம் பண்ணின அந்தச் சபையின் அங்கத்தினர்களாயிருக்கிறோமா?

வேதாகமம் மனுஷனுடைய பூரண வழிகாட்டியாயிருக்கிற தன்மையினால், உண்மையான சுவிசேஷத்தை அறிந்து கொள்வதற்கு வேதாகமத்திற்கே திரும்ப வேண்டும்.

இன்று பல மாறுபாடான சுவிசேஷங்கள் பிரசங்கிக்கப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்: ஆனால் வேத வாக்கியங்களை ஆராயும் இடத்தில், ரட்சிக்க கூடிய சுவிசேஷம் ஒன்று மாத்திரமே என்று அறியதக்கதாய் இருக்கிறது.

அது யாதெனில் இயேசுகிறிஸ்து சுவிசேஷமே!

அதைக்குறித்து பவுல் சொல்வதாவது: "கிறிஸ்துவின் சுவிசேஷத்தை குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாய் இருக்கிறது"(ரோமர் 1:16)

சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிவதற்கு ஒருவன் தன் பாவங்களை விட்டு மனம் திரும்பி கிறிஸ்துவை வாயினால் அறிக்கை இட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும் (மாற்கு 16:16; அப். 2,38).

நீங்கள் இந்த சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்துவிட்டீர்களா?

வேதாகமம் தேவனுடைய புத்தகமாதலால், உண்மையில் தேவனைத் தொழுது கொள்வதற்கு வேதாகமத்துக்கே திரும்பவேண்டும்.

ஒருவன் யோக்கியனாயும், உண்மையுள்ளவனாயும் இருக்கும் வரையில் அவன் விருப்பத்துக் கிணங்க தொழுது கொள்ளலாமென்று பல முறைகளிலும் சொல்லக் கேட்டிருக்கிறோம்: ஆனால் வேதவாக்கியங்களின் படி இக்கொள்கைக்கு ஒரு ஆதாரமுமில்லை.

கிறிஸ்து நமக்கு சொல்வதாவது "தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" (யோவான் 4:24). உண்மையோடுதொழுது கொள்வதற்கு கிறிஸ்தவன் ஜெபம் பண்ணவும், சத்திய வசனத்தைப் படிக்கவும், சங்கீதம் பாடவும், கர்த்தருடைய இராப்போஜனப் பந்தியில் பங்கு பெறவும், காணிக்கை செலுத்தவும், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடி வருதல் அத்தியாவசியமான ஓர் காரியம் ஆகும்.

லூக்கா. 18:1; 2 தீமோ. 2:15; கொலோ. 3:16; அப். 20:7; 1 கொரி. 16:2; ஆகிய சத்திய வசனங்களின்படி தேவனை நாம் அவருக்கு பிரியமான வகையாய் தொழுது கொள்ளுகிறோமா?

தேவனுக்கு நாம் கீழ்ப்படிவதானால் கிறிஸ்தவ ஜீவியத்தைப்

பற்றிய சத்தியத்தை அறிந்து கொள்வதற்கு வேதாகமத்துக்கே திரும்ப வேண்டும்.

ஒருவன் ஒரு தரம் இரட்சிக்கப்பட்டுவிட்டால் என்றும் இரட்சிக்கப்பட்டிருப்பானென்று தேவ ஆவியால் அருளப்பட்ட சத்திய வசனம் எவ்விடத்திலாவது சொல்வதில்லை. ஆனால் அது மற்றப் பக்கமாக எமக்குச் சொல்வதென்ன வெனில் நாம் கிறிஸ்தவர்களேயானால் ஈற்றிலே நித்திய காலத்துக்கும் இரட்சிக்கப்பட்டவர்களாயிருக்கும் பொருட்டுக் கர்த்தருக்கும் உண்மையுள்ளவர்களாக நிலைத்திருக்க வேண்டும் என்பதே.


நாம் வாசிக்கிறதாவது: "ஆகிலும் நீ மரண பரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவி கிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி 2:10). உண்மையான கிறிஸ்தவனாய் ஒருவன் இருக்கவேண்டுமானால், அவன் செய்யும் யாவற்றிலும் கர்த்தருக்கே முதலிடம் கொடுத்துத் தன் ஜீவிய பரியந்தம் நாள்தோறும் அவரைப் பின்பற்றக்கடவன்.

இப்படியாயிருக்க நாம் நம்மைப் புதிய ஏற்பாட்டுக்குரிய கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளலாமா?

மேற்கூறப் பட்ட காரியங்கள் யாவற்றிற்குமாக திரும்பவும் வேதாகமத்துக்கே நாம் போக வேண்டும்.

ஆனால் அது மட்டுமல்ல, வேதாகமத்தை நாம் உண்மையோடு விசுவாசித்தால், நாமத்துக்கும் (1பேது. 4:16), அஸ்திபாரத்துக்கும் (1 கொரி, 3:11). சபையின் தலைக்கும் (எபே. 5:23). இரட்சிப்புக்குரிய விசுவாசத்துக்கும் (எபே. 4:5), உண்மையான ஞானஸ்நானத்துக்கும் (கொலோ. 2:12), வழிக்கும் (யோவான் 14:6),

ஆம் இன்னும் சத்தியத்துக்கும், நீதிக்கு முரிய யாவற்றிற்கும் திரும்பவும் வேதாகமத்துக்கே போக வேண்டியவர்களாயிருக்கிறோம். (யோவான் 8:32, தீத்து 2:11,12).



# தேவனுடைய குமாரன்

– J.C.சோட்

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று வேதாகமம் தெளிவாக போதிக்கிறது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நினைக்கும் சிலர் அதைக் கேள்வி கேட்கின்றனர். ஆகையினால், இதை மறுக்கவும் செய்கின்றனர். அவர்களுடைய பிரச்சனை என்ன வெனில், மனித சம்பந்தமாக இதை புரிந்து கொள்ள முற்படுகின்றனர். அவர்கள் கேட்கிறார்கள், தேவனுக்கு எப்படி குமாரன் இருக்க முடியும்? தேவனுக்கு குமாரன் இருப்பாரேயானால், மனைவியும் இருக்க வேண்டும். ஆகவே அவர்கள் தவறான எண்ணத்துக்கு தங்கள் மனதை விட்டுவிடுகின்றனர். ஆனால் நாம் அந்த காரியத்தை வெளிப்படையாக அணுகி அதில் என்ன உண்மை இருக்கிறது என்பதை பார்ப்போம். தேவனுடைய குமாரன் என்று வேதாகமம், வித்தியாசப்பட்ட கருத்தில் கூறுவதை நாம் இங்கு சற்று ஆழமாக கவனிப்போம்.

1. தேவன் மனிதனைப் படைத்தார். மாமிச பிரகாரமாக கூற வேண்டுமாயின், எல்லோரும் தேவனுடைய பிள்ளைகள் என்று பிரிக்கலாம். இது ஆதியாகமம் 6:2-ல் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மனிதன் தேவனுடைய சந்ததியார் (அப். 17:28).

ஆகவே ஒருவன் நல்லவனோ, தீயவனோ, சரீரத்தோடும், ஆத்துமாவோடும் தேவனுக்கு ஊழியம் செய்கிறானோ அல்லது இல்லையோ, அவன் தேவனுடைய சிருஷ்டியாயிருக்கிறான். இந்த உலகத்தில் அவன் தேவனுடைய குமாரன் என்றும் தேவனுடைய பிள்ளை என்றும் பிரிக்கப்படுகிறான். இருந்த போதிலும் பாவத்தினால், தான் சிருஷ்டிகரை விட்டு காணாமற் போன நிலையில் இருப்பதையும், தான் மீட்கப்பட வேண்டும், ஒப்புரவாக்கப்பட வேண்டும் என்பதையும் அறிவான்(எபே.2:16).

2. தேவன், இஸ்ரவேல் தேசத்தாரை தம்முடைய குமாரன் என்று பேசியிருக்கிறார்.இது உண்மைதான். ஏனெனில் சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப் பட்ட ஜனமாக இருந்தனர். "அப்பொழுது நீ பார்வோனோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்ட புத்திரன், எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன். அவனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை உன் சேஷ்ட புத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்று சொல்" என்றார்.

3. தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது, ஒருவன் ஆவிக்குரிய நிலையில் தேவனுக்கு குமாரனாகிறான். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் (ரோமர் 8:14). "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில் சுதந்தரவாளியானவன் எல்லாவற்றிற்கும் எஜமானாயிருந்தும், அவன் சிறுபிள்ளையாயிருக்குங்காலமளவும், அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசமில்லை. தகப்பன் குறித்த காலம் வரைக்கும் அவன் காரியக்காரருக்கும் வீட்டு விசா ரணைக்காரருக்கும் கீழ்ப்பட்டிருக்கிறான்".

அப்படியே நாமும் சிறு பிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ் வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமை பட்டவர்களாயிருந்தோம். நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறின போது, ஸ்திரியினிடத்தில் பிறந்தவரும் நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.

மேலும் நீங்கள் புத்திரராயிருக்கின்றபடியால், அப்பா, பிதாவே என்று கூப்பிடதக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமை யாயிராமல் புத்திரனாயிருக்கிறாய். நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய் (கலா. 4:1-7).

"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராய் இருக்கிறீர்களே. ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள் ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்து கொண்டீர்கள். (கலா. 3:26,27).

"ஆதலால் நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி" (எபே. 5:1).

"இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும். நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்பு கூறாமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல" (1 யோவான் 3:10).

"நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்பு கூறுகிறோமென்று அறிந்து கொள்ளுகிறோம்"(1யோவான் 5:2).

4. கடைசியாக, கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று தனிப்பட்ட முறையில், விசேஷித்த பொருளில், தகப்பன்-மகன் உறவு முறையில், அழைக்கப்பட்டார். முதலாவது, தேவன் கிறிஸ்துவை தம்முடைய குமாரனென்று அங்கீகரித்தார். "அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவி கொடுங்கள்" (மத். 17:5) என்று கூறினார்.

பேதுரு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை இட்டார் (மத் 16:16). உலகத்திலுள்ளோர் பாவங்களுக்காக மரிக்க தேவன் தம்முடைய சொந்த குமாரனை அனுப்பினார் (யோவான் 3:16,17;ரோமர்8:3). கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று பிரசங்கிக்கப்பட்டார் (அப். 9:20). இன்னும் இதற்கு இணையான அநேக வாக்கியங்களை கொடுத்துக் கொண்டே போகலாம். ஆனால் இவைகள் போதுமானவைகள்.

கிறிஸ்து, பிதாவாகிய தேவன் குமாரனாகிய தேவன் பரிசுத்த ஆவியாகிய தேவன் என்கிற தேவத்துவத்தில் ஒரு நபர் (மத் 28:19). கிறிஸ்துவைப்பற்றி பவுல் உரைக்கும்பொழுது, "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" என்றார்.(கொலோ. 2 : 9, 10); ரோமர் 1:20-யும் வாசிக்கவும்.

தேவன் ஆவியாயிருக்கிறார். கிறிஸ்துவும் தேவனுடன் ஆவியிலே வாசஞ் செய்கிறார். முடிவில் குறித்த காலத்தில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடியே, தம்முடைய தகப்பனை விட்டு இவ்வுலகத்திற்கு வந்து, கன்னி மரியாளிடத்தில் பிறந்தார். மனிதனுடைய ரூபமெடுத்து, தன் ஊழியத்தை நிறைவேற்றவும் உலகத்திலுள்ள எல்லாருடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு திரும்பிச்சென்று பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். (மத். 1:21; யோவான் 3:17; கலா. 4:5; யோவான் 14:9; 1 கொரி. 15:1-4; அப் 2).

ஆதியிலே கிறிஸ்து தேவனோடு இருந்திருந்தாலும், அவர் நித்தியமானவராகவும் தெய்வீக தன்மையுள்ளவராகவும் தேவனுடைய இயற்பண்பு உடையவராகவும் இருந்தபோதிலும், அவர் பிதாவாகிய தேவன் அல்ல. ஒரே தேவன், ஒரே கிறிஸ்து, ஒரே ஆவியானவர் (எபேசி. 4:1-6). அவர்கள் மூவரும் ஒன்றேயானாலும் ஒவ்வொருவரும் தனித் தனி நபர். ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய வேலை உண்டு. ஒவ்வொருவரும் தேவத்துவத்தில் ஒரு நபர்.

தேவனுக்கு ஒரு குமாரன் இருக்க முடியாது என்று கூறுவது, தேவனை கட்டுப்படுத்துவதாகும். இதை நாம் செய்யக்கூடாது. முழுவதுமாக இதை நாம் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம், ஆனால் தேவனை நாம் முழுவதுமாக புரிந்து கொள்ளமுடியாதே. தேவனும், அவருடைய குமாரனும் தெய்வீகத்தன்மையுள்ளவர்கள். ஆதலால் மனிதர் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ள வேண்டியவைகளை, அறிந்துகொள்வதென்பது முடியாது. இவைகளைக் குறித்து நீங்களோ, நானோ யூகம் செய்ய முடியாது. எல்லாம் தேவனை சுட்டி காட்டுகிறது. அவர் நமக்கு தம்முடைய குமாரனை வெளிப்படுத்துகிறார். ஆகையினால் இயேசு கூறினார். "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" (யோவான் 14:1). உண்மையிலே நாம் இதைச் செய்ய முடியும். நிச்சயம் செய்வோம்.

" நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால், உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்" இயேசு (யோவான் 8:24).

# தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவு

— WAYNE JACKSON

"தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்"(2.கொரி.9:15). இந்த ஆச்சரியமான வசனப் பகுதி யிலிருக்கும் ஒரு சில அருமையான காரியங்களை நாம் படிப்போம்.

1. கொடுக்கின்ற தேவன்:

சிலர் கொடுப்பதை விட வாங்குவதில் இன்பம் கொள்கிறார்கள் கொடுப்பதற்கு அவர்கள் தயங்குகிறார்கள். ஆனால் தேவன் அப்படியல்ல. அவர் தாராள குணம் உடையவர்.

முதலாவதாக, நமக்கு அவர் வாழ்க்கையை கொடுத்திருக்கின் றார். வாழ்க்கை நமக்குத் தற்செயலாக வந்துவிடவில்லை. அது படைத்தவரால் கொடுக்கப்பட்ட ஈவு (அப். 17:25).

இரண்டாவதாக, அவர் நம்மை பாதுகாத்து நமக்கு நன்மையான ஈவுகளை அளித்து, நம்மை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார் (அப்.14:17). ஒவ்வொரு நல்ல ஈவும் தேவனிடத்திலிருந்து வருகின் றது என்பதை ஞானமுள்ள ஒருவன் ஏற்றுக்கொள்கிறான்(யாக் 1:17).

மூன்றாவதாக, ஏசாயா 9:6ஐப் பாருங்கள். இந்த வசனத்தின் மையப்பகுதி, தம்முடைய சொந்த குமாரனை கொடுத்த தேவனைப் பற்றியதாக இருக்கின்றது. ஒரு குமாரன் கொடுக்கப்படுவார் என்பதை தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள்.

தம்முடைய ஒரே பேரான குமாரனை தேவன் அளித்தார் என்பதை அருமையாக (யோவான் 3:16) அறிவிக்கின்றது. தேவனுடைய இரட்சிப்பின் ஈவை எல்லோரும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தேவன் அதை தமது குமாரன் மூலமாக கொடுத்திருக்கின்றார். (ரோமர் 6:23; எபே. 2:8,9).

2. தகுதியில்லாதவனுக்கு அளிக்கப்படும் ஈவு:

ஈவு என்கின்ற பதத்திற்கு கிரேக்க மொழியில் "டோரியா" என்று அர்த்தமாகும். இந்த பதத்திற்கு "இலவசமான ஈவு" என்று அர்த்தமாகும்.

மனிதன் மதிப்புக்குரியவனாக இருந்தாலும், அவன் தேவனுடைய சாயலையும், மகிமையையும் பெற்றிருந்தாலும், தன்னுடைய பாவத்தினால் அந்த மகிமையை இழந்து விட்டான். (ஆதி. 1:27; 1 கொரி. 11:7). இதிலிருந்து தன்னை ரட்சித்துக் கொள்ள அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

மேலும் தேவனுடைய பார்வைக்கு தன்னை மதிப்புமிக்கவனாக மாற்றிக் கொள்ள அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. இருந்தாலும், தேவன் அன்பாக இருக்கின்றபடியால் (1யோவான் 4:8) இரக்கத்தின் ஐசுவரியமுள்ளவராய் இருக்கின்ற காரணத்தினால் (எபே. 2:4). மனுக்குலம் பாவத்திலே இருந்தாலும், கிறிஸ்துவே ரட்சகராக விளங்குகின்றார்.

ரோமர் 5:6-11-ல் அப்போஸ்தலரின் இந்த கருத்தின் விளக்கத்தை படித்து அறிந்து கொள்ளுங்கள்.

ஆனால், கொடுக்கப்பட்ட எந்த ஒரு ஈவையும் பெற்றுக் கொள்ளவில்லையென்றால், அது பிரயோஜனமற்றதாகப் போய்விடுகிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

தேவனுடைய இந்த பெரிய ஈவை பெற்றுக்கொள்ள சிலர் விரும்புவதில்லை (யோவான் 1:11).

இஸ்ரவேலர்களுக்கு தேவன் எரிகோ பட்டணத்தை கொடுத்தார். (யோசுவா 6:2). ஆனால் அந்த எபிரெயர்கள் தங்களை யெகோவாவின் கட்டளைகளுக்கு முழுமையாக ஒப்புக் கொடுத்து அந்த பட்டணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாக இருந்தது (யோசுவா 6:3; எபி. 11:30).

அதைப்போல தேவன் தம் கிருபையினால் கிறிஸ்துவை நமக்கு தந்தார். ஆனால் தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டுமே கிறிஸ்து

இரட்சிப்பின் காரணராக இருக்கின்றார் (எபி. 5:8-9)

3. விவரிக்க முடியாத ஈவு:-

"சொல்லி முடியாத" என்கின்ற பதத்திற்கு கிரேக்க மொழியில் "விவரிக்க முடியாத" என்கின்ற அர்த்தம் உண்டு. கல்வாரி சிலுவையில், இயேசு அனுபவித்த பாடுகளை (எபி. 5:7,8), தேவனுடைய அன்பின் நிமித்தம், இயேசு பலியாக மாறிய உண்மையை, மனித வார்த்தையால் விவரிக்க முடியாது (வெளி: 1: 5; 2 கொரி. 8:9).

மேலும் பரலோகத்தின் ஈவைப்பற்றி நாம் வெறும் வார்த்தைகளினால் வர்ணிக்க முடியாது.

4. நாம் நன்றி உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும் :

"தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று பவுல் கூறினார்.

பாவபட்டியலில் நன்றி உணர்வு இல்லாமையும் இடம் பெற்றிருக்கிறது (2 தீமோத். 3:2).

"மற்ற ஒன்பது பேர் எங்கே" என்கிற கர்த்தரின் கேள்வியை நம்மில் அநேகர் சிந்திக்க வேண்டியிருக்கிறது (லூக்கா 17:17).

நாம் எல்லோரும் தேடுகின்ற சமாதானத்திற்குத் தேவையான ஒன்று, நன்றியோடு இருக்கக்கூடிய சுபாவமாகும். (பிலி. 4:6-7).

5. உதாரத்துவ குணத்தின் வல்லமை:

தேவனுடைய இரக்க குணத்தைப்பற்றி பவுல் கூறியதை இந்த கொரிந்தியர் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

கொரிந்தியர் புத்தகத்தில், குறைச்சலுள்ள சகோதரர்களுக்கு தாராளமாயும் சந்தோஷமாயும் உதவி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

சிலுவையின் பார்வையில் தன் முகத்தை மூடிக்கொள்கின்ற எந்த ஒரு மனிதனும் தன் மனதை கடினப்படுத்திக் கொள்கிறான்.

ஒவ்வொருவரும் வேதத்தை நன்கு கற்று, தேவனுடைய சொல்லி முடியாத ஈவை பெற்று, தேவனுடைய வழியில் நடந்தால் நித்திய வாழ்வை பெற்றுக்கொள்வோம்.

# கிறிஸ்துவின் ரத்தம்

– J.C.சோட்

தேவனுக்கும், மனிதனுக்குமிடையே உள்ள உறவு முறையில் எப்பொழுதும் ரத்தம் சம்பந்தப் பட்டுவந்திருக்கிறது. மிருக பலி செலுத்தி வந்த பழைய ஏற்பாட்டின் காலத்திலும் இது உண்மை யாகத்தானிருந்தது. ஆனால் இந்த பலிகள் நிரந்தரமாக பாவத்தை எடுத்து போட முடியாமலிருந்ததை குறித்து எபிரேய ஆசிரியர் கூறுவது, "அல்லாமலும் காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய ரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யமாட்டாதே" (எபிரேயர் 10:4).

ஆகையினால் மிருகங்களின் ரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யக் கூடாது என்றால், எவ்வாறு மனிதன் ரட்சிக்கப்படக் கூடும்? கிறிஸ்து ஒரே தரம் ரத்தத்தை சிந்தினார். ஒரு பாவி தன் பாவத்திலிருந்து முற்றிலும் கழுவப்பட, அந்த ரத்தத்தோடு சம்பந் தப்பட வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

இங்குதான் நம்முடைய உண்மையான பாடம் தொடங்கு கிறது. மனிதன் பாவியானதால் தன்னைத்தானே ரட்சித்துக் கொள்ள முடியாது. ஆகவே பவுல் என்ன கூறுகிறார், " நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 5:8).

கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்து, (1 கொரி 15:3). இது அவர் சிலுவையில் அடைந்த மரணம் (பிலிப்பியர் 2:8). இந்த மரணத்தில் அவருடைய ரத்தம் சிந்தப்பட்டது. இதன் மூலமாக நாம் பாவமன்னிப்பை பெற முடியும். இப்பொழுது கேள்வி என்னவெனில்;

## அந்த ரத்தத்தோடு எப்படி நாம் சம்பந்தப்படமுடியும்?

தேவ பக்தியுள்ள அனேகர், "விசுவாசத்தினால்" என்று கூறுவர். ஆமாம், விசுவாசம் அவசியம்தான். ஆனால் விசுவாசம் மட்டும் போதாது. தேவ வசனங்களை படிக்கும்போது நாம் என்ன தெரிந்து கொள்ளுகிறோம் என்றால், "நாம் அவருக்கு கீழ்ப்படியவேண்டும்" (எபிரேயர்5:8,9). வசனத்தின்படி செய்கிறவர்களாயிருக்க வேண்டும். (யாக்கோபு1:22) அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளுகிறவர் களாயிருக்க வேண்டும் (யோவான் 14:15) முதலியன. இதிலிருந்து, நாம் அவருக்கு கீழ்ப்படிந்தால் அவருடைய ரத்தத்தோடு சம்பந்தப் படலாம் என்பதை யூகிக்கலாம்.இப்பொழுது நாம் கீழ்ப்படியவேண்டிய கட்டளைகள் என்ன? சில வசனங்களை கவனிப்போம்:

உதாரணமாக, கிறிஸ்து கூறினார், "விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் ரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான் (மாற்கு 16:16). விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றால் ஒருவன் ரட்சிக்கப்படக்கூடும் என்று கிறிஸ்து கூறி இருப்பதால், இதற்கு கீழ்ப்படிவதனால் ஒருவன் கிறிஸ்துவின் ரத்தத்தோடு சம்பந்தப்பட்டு, பாவத்திலிருந்து கழுவப்பட முடியும் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

திரளான பாவிகளை நோக்கி, பேதுரு கூறினார், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வோருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப்போஸ்தலர் 2:38).

மறுபடியும் நாம் ஒரு முடிவுக்கு வரலாம். கிறிஸ்து தம் மையே பூரண பலியாக ஒப்புக் கொடுத்து, மனிதன் பாவத்திலிரு ந்து மீட்கப்பட, தம் இரத்தத்தைச் சிந்தினார். இந்த பாவமன்னிப்பைப் பெற ஒருவன் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற வேண்டும். இந்தக் கட்டளைகளுக்கு ஒருவன் கீழ்ப்படியும் போது, இயேசுவின் இரத்தத்தோடு சம்பந்தப்படுகிறான். அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. சவுல் குணப்படும் போது அனனியா அவரிடத்தில் வந்து, "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்"(அப்போ 22:16).

ஞானஸ்நானம் வலியுறுத்துவது தண்ணீரை அல்ல; கீழ்ப்படிதலையே. ஆகவே ஒருவன் கர்த்தருக்குக் கீழ்படிந்தால் கிறிஸ்துவின் ரத்தம் அவனுடைய பாவங்களை கழுவுகிறது, தண்ணீர் அல்ல. இது எவ்வளவு எளிமையாக இருக்கிறது. ரோமர் 6:3-6-ல் அப்போஸ்தலனாகிய பவுல் இதை விளக்குகிறார். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?

"மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனி பாவத்துக்கு ஊழியம் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையபட்டதென்று அறிந்திருக்கிறோம்".

நம்முடைய கீழ்ப்படிதலின் மூலம் கிறிஸ்துவின் மரணத்தோடு சம்பந்தப்பட முடியும். அதாவது அவருடைய மரணத்தினாலுண்டான நன்மைகளை பெற முடியும் என்பதை இங்கு வெளிப்படுத்துகிறார். அப்படியென்றால் இயேசு கிறிஸ்துவின் ரத்தத்தோடு சம்பந்தப்பட்டு, அதினால் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுகிறோம். எபேசியர் 1:7-ல் அவர் கூறுவதாவது. "கிறிஸ்துவினுடைய ரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு உண்டாகிறது". மத்தேயு 26:28-ல் கிறிஸ்து கூறுகிறார், "பாவ மன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காக இவருடைய ரத்தம் சிந்தப்பட்டது". மேலும் இந்த வசனங்கள், அப்போஸ்தலர் 2:38-லும் மாற்கு 16:16-லும் சொல்லிய பாவ மன்னிப்பையும், ரட்சிப்பையும் நினைவுக்கு கொண்டுவருகிறது. ஆகையினால்இந்த கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது கிறிஸ்துவின் ரத்தத்தோடு சம்பந்தப்பட்டு, கழுவப்படுகிறோம். இதைத் தவிர வேறு வழி இல்லை.

இப்பொழுது கிறிஸ்துவின் ரத்தத்தைக் குறித்த வேறு சில உண்மைகளை கவனிப்போம்:

1. கிறிஸ்துவின் ரத்தத்தினால் புதிய உடன்படிக்கை முத்தரிக்கப்படுகிறது. (மத்தேயு 26:28).
2. கிறிஸ்துவின் ரத்தம், யூதருக்கும், புறஜாதிகளுக்குமிடையே இருந்த நடுச்சுவரை தகர்த்துப் போடுகிறது (எபேசியர் 2:13,14)
3. நாம் அவருடைய ரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம். (ரோமர் 5:9).
4. அவருடைய ரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது (கொலோசெயர் 1:14).
5. சபை அவருடைய ரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்டது. (அப்போஸ்தலர் 20:28).
6. அவர் சிலுவையில் சிந்தின ரத்தத்தினாலே சமாதானம் உண்டாகிறது (கொலோசெயர் 1:20).
7. பாவிகள் விலையேறப்பட்ட கிறிஸ்துவின் ரத்தத்தினாலே மீட்கப்பட்டார்கள் (1 பேதுரு 1:18-19).
8. கிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7)
9. அவருடைய சொந்த ரத்தத்தினாலே நாம் பாவங்களற கழுவப்பட்டோம் (வெளிப்படுத்தின விசேஷம் 1:6).
10. ஆட்டுக்குட்டியானவருடைய ரத்தத்தினாலே அங்கிகளை வெளுத்தவர்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 7:17).
11. கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ளும்போது கிறிஸ்துவின் ரத்தத்தை நினைவு கூறுகிறோம் (மத்தேயு 26:26-28).

கிறிஸ்துவின் ரத்தத்தைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அந்த ரத்தத்துடன் சம்பந்தப்பட கர்த்தருக்கு கீழ்ப்படிந்திருக்கிறீரா? அப்படி இல்லை என்றால், இன்னமும் நீங்கள் பாவத்தில்தான் இருக்கிறீர்கள். ஆனால் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழபடிந்தால், அவருடைய ரத்தத்தோடு சம்பந்தப்படுவதனால் ரட்சிக்கப்படுவீர்கள்.

அதன் பிறகு கிறிஸ்துவின் ரத்தத்தினாலே சம்பாதித்த சபையிலே சேர்க்கப்படுவீர்கள். பின்பு கிறிஸ்தவனாக, ஒவ்வொரு வாரமும், கர்த்தருடைய பந்தியில் கலந்து கொண்டு, அந்த ரத்தத்தை நினைவு கூர்ந்து, அவர் ஒளியிலிருக்கிறது போல் நீங்களும் ஒளியிலே நடந்தால், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும், அநியாயத்தையும் கழுவி, முடிவான பரிசாக நித்திய ஜீவனை பெறுவதற்கு உங்களை பாத்திரராக்கும்.

# கிறிஸ்துவுக்குள்ளாக இணைக்கும் படிகள்

J.C.சோட்

கிறிஸ்துவுக்குள்ளாக சகல ஆசீர்வாதங்களும் இருப்பதாக வேத வசனங்கள் கூறுகின்றன.

இவைகளில் ரட்சிப்பும் சம்பந்தபட்டிருக்கிறது.

ஒரு சில ஆசீர்வாதங்களைப் பார்ப்போம்.

"இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரிந்தியர் 5:17).

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். (எபேசியர்1;3).

"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று. (எபேசியர்1:9).

மேற்கூறிய எல்லா ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள் இருப்பதனாலே,நம்முன் எழும் அடுத்த கேள்வி, எவ்வாறு ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாவது? என்பதே.

இந்த கேள்விக்கான விடையைக் காண தேவனுடைய வசனத்திற்கு செல்வோம். அவ்வசனங்களை படிக்கும் போது, அநேக நிபந்தனைகளுக்கு ஒருவன் கீழ்ப்படிய வேண்டியிருப்பதை பார்க்கிறோம். அந்த ஒவ்வொரு படியும் முக்கியமே. எல்லா படிகளும் ஒருவனை கடைசி படிக்குள் அழைத்து செல்லும். பிறகு அந்த கடைசி படியை ஒருவன் கீழ்ப்படியும் போதுதான், கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் அவன் "கிறிஸ்துவுக்குள்ளே" வருகிறான்.

உதாரணமாக, ஒரு கட்டிடத்திற்குள் செல்ல ஒருவன் எல்லா படிகளையும் தாண்டி, கடைசி படிக்கு வருகிறான். பிறகு அந்த கடைசி படியையும் தாண்டினால் தான் அவன் கட்டிடத்தினுள் நுழைய முடியும். இதை புரிந்து கொள்வது ஒன்றும் அவ்வளவு கடினம் அல்ல.

இப்பொழுது அந்த படிகள் என்னென்ன என்று பார்ப்போம்.

1. கிறிஸ்துவுக்குள்ளாக வர ஒருவன் கீழ்ப்படியவேண்டிய முதல் படி:- கிறிஸ்துவுக்கு அதாவது தேவனுடைய வார்த்தைக்கு ஒருவன் செவி கொடுக்க வேண்டும்.

மறுரூபமாகும் மலையில், தேவன் கூறியது, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில்பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவி கொடுங்கள்" (மத்தேயு 17:5).

பவுல் கூறினார், "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்"(ரோமர் 10:17). இதனால் தான் இயேசுவும், அப்போஸ்தலர்களைப் பார்த்து உலகெங்கும் போய் சர்வ

பார்த்து,"உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்றார் (மாற்கு 16:15).

கர்த்தரைப் பற்றி கேள்விப் படாமல் ஒருவன், அவரை விசுவாசிக்க முடியாது. அவரை விசுவாசியாமல் அவருக்கு கீழ்ப்படியவும் முடியாது.

முதல் படிக்கு கீழ்ப்படிய வேண்டியது முக்கியம். ஆனால் இந்த முதல்படி மாத்திரம் ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளாக்க முடியாது, இதோடு நிறுத்திக் கொண்டால், ஒன்றும் பிரயோஜனமில்லை.

2. இரண்டாவது படி:- இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். "விசுவாசமில்லாமல் தேவனிடத்தில் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபிரெயர் 11:6).

கிறிஸ்துவும் அவ்வாறே, "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" என்றார் (யோவான் 14:1). மேலும், "ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன், நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்றார் (யோவான் 8:24).

விசுவாசம், இரட்சிப்பிற்கு மிகவும் இன்றியமையாதது. இருந்த போதிலும் விசுவாசம் மட்டும் நம்மை ரட்சிக்காது. நம்மை கிறிஸ்துவுக்குள்ளாக இணைக்கவும் மாட்டாது. ரட்சிப்பின் திட்டத்தில் விசுவாசம் ஒரு படியே.

பவுல் கூறுவதை கவனியுங்கள். "நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" (ரோமர் 10:10). விசுவாசம் ரட்சிப்பின் மார்க்கத்தில் ஒரு படி, ஆனால் ரட்சிப்புக்குள்ளாக்காது.

3. மூன்றாவது படி:-ஒருவன் எல்லா பாவங்களையும் விட்டு மனந்திரும்ப வேண்டும். தேவனுடைய பார்வையில், கணக்கொப்புவிக்கும் பருவத்திலுள்ள ஒவ்வொருவரும் பாவிகள். (ரோமர் 3:23; ரோமர் 6:23).

ஒவ்வொருவனும் மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்புதல் என்றால், மனதை மாற்றிக் கொள்ளுதல், திரும்பி வேறு திசையில் செல்வது.

ஒருவன் ஜீவியத்திலுள்ள எல்லா பாவங்களையும் விட்டு, இவ்விதமாக நல்ல ஜீவியத்தை மேற்கொள்ளுதல் என்று பொருள் கொள்ளலாம்.

மனிதன் தன்னைத் தானே ரட்சித்துக் கொள்ள முடியாது என்று அறிந்துதான் கிறிஸ்து, ".அப்படியல்லவென்று உங்களுக்கு சொல்லுகிறேன். நீங்கள் மனந்திரும்பாமல் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்"என்றார் (லூக்கா13:3).

"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். என்று பவுலும் போதித்திருக்கிறார்" (அப்போஸ்தலர் 17:30).

பேதுருவும், "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது

பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றார். (அப்போஸ்தலர் 2:38)

ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவனுடைய பாவங்களை விட்டு மனந்திரும்பின போதிலும், ரட்சிப்படைய இன்னும் சில படிகளை கீழ்ப்படிய வேண்டும்.

4. நான்காவது படி: இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று வாயினால் அறிக்கை இட வேண்டும். "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" என்றார் கிறிஸ்து (மத்தேயு 10:32).

இதைத் தான் எத்தியோப்பிய மந்திரி ஒருவனும் செய்தான் (அப்போஸ் 8:37). ரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் என்று ஏற்கனவே பார்த்தோம் (ரோமர்10:10).

இனி வேறு என்ன படி மீதியாயிருக்கிறது.?

ஒரே ஒரு கடைசி படி!

அதுவே ஒருவனை இரட்சிப்புக்குள்ளாக்கி, கிறிஸ்துவுக்குள்ளாக்கும்.

மற்ற படிகளும் அவசியம் தான், ஆனால் இந்த கடைசி படியே முடிவாக ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது.

5. ஐந்தாவது படி:- பாவமன்னிப்புக்கென்று, தண்ணீராகிய ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவோடுகூட ஒருவன் அடக்கம் பண்ணப்படவேண்டும். இவ்விதமாகவே ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய சபையிலும் இணைக்கப்படுகிறான். கீழ்க்கண்ட மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38; 22:16; 1 பேதுரு 3:21 முதலியன.

பவுல் கூறுகிறார், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோமர் 6:3)

மேலும் கூறுகிறார், "நீங்களெல்லோரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே, ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலாத்தியர் 3:26,27).

இப்படியாக, கிறிஸ்துவுக்குள்ளாக ஒரே வழி ஞானஸ்நானத்தின் மூலம் மட்டுமே என்று பார்த்தோம்.

அப்படியென்றால் ஞானஸ்நானம் மட்டுமே ஒருவனை ரட்சிக்கும் என்று அர்த்தமல்ல ஏற்கனவே கூறியபடி, ரட்சிப்பிற்கு மற்ற படிகளையும் கீழ்ப்படிய வேண்டும்.

இந்த கடைசிபடியான ஞானஸ்நானத்தில் கீழ்ப்படியுமுன்னே மற்றபடிகளுக்கு ஒருவன் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

எல்லா படிகளுக்கும் கீழ்ப்படியாமல் ஒருவன் ரட்சிப்படைய முடியாது.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா?

மேற்கூறிய ஐந்துபடிகளுக்கும் கீழ்ப்படிந்திருக்கவில்லையெனில் நீங்கள் ரட்சிப்படைந்திருக்க முடியாது.

நீங்கள் தாமதிக்காமல், உடனே இவைகளுக்கு கீழ்படிய உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

# பரிசுத்த ஆவியானவர்

*ஜே.சி. பெய்லி*

## 1. பரிசுத்த ஆவி ஒரு நபர்; அவர் வசனம் சத்தியம்!

சபைக்குள்ளும் சபைக்கு வெளியேயும் பரிசுத்த ஆவியான வரைக் குறித்து சர்ச்சைகள் எப்பொழுதும் இருந்தவண்ணம் இருக் கிறது. கற்றுக் கொள்ள வேண்டும் என்ற அணுகு முறையில் நாம் இதனை சற்று விரிவாக்கி, பரிசுத்தாவியானவரின் செயல் திறனை சிறப்பான முறையில் புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

ஆவியில் ஒருமைப்பட்டு சமாதானத்தில் இணைந்தவர்களாய் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் (எபேசியர் 4:3 ). தேவன் நாம் செய்ய முடியாத ஒன்றை நமக்கு கொடுக்கமாட்டார். அந்த வசனம் ஒரே ஆவி என்று நமக்கு போதிக்கிறது (எபேசி4:4). வேதாகமம் பரிசுத்த ஆவியானவரை ஒரு நபராகக் காட்டுகிறதே தவிர, உணர்வாக சொல்லப்பட வில்லை. மக்களிடையே உணர்வுகளாக வாழ்கின்றார் என்பது உண்மைதான் என்றாலும், அவர் ஒரு நபர் என்று வேதாகமம் கூறுகின்றது.

" சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் (யோவான் 16 : 13 ). அவர் அப்போஸ்தலர் களுக்கு எல்லாவற்றையும் போதித்தமையால் அவர்களுடைய வார்த்தை களினால் நாம் ஒருமைப்பட்டிருக்கிறோம். அவர் சத்திய ஆவியானவர் (யோவான் 16 : 13). அவருடைய வசனம் சத்தியமாகவே இருக்கிறது (யோவான் 17 : 17). சத்தியம் எப்பொழுதும் சத்தியமாகவே இருக்கிறது. இந்த வார்த்தைகளுக்கு எப்பொழுதும் முரண்பாடு ஏற்பட்டு விடாமல் இருக்க பரிசுத்த ஆவியானவர் நமக்கு வழிகாட்டி எச்சரிப்பூட்டுகிற வராக இருக்கிறார்.

## 2. அப்போஸ்தலரின் வார்த்தைகள் உண்மையிலே பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகள்:

அப்போஸ்தலர்களின் போதனைகள் பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகளாக இருக்கிறது என்பதற்கு கீழ்க்காணும் வேதப் பகுதி சான்றாக இருக்கிறது: " நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்கிறதும் அல்லாமல், இவர்களுடைய வார்த்தைகளினால் என்னை விசுவாசிக் கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவா சிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாம் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன் " (யோவன் 17:20,21).

பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அப்போஸ்தலர்கள் நமக்கு வியாக்கியானம் செய்யவில்லை. அப்போஸ்தலர்கள் ஆவியானவரைப் பற்றி அதிகமாகக் கூறாமல், பரிசுத்த ஆவியானவா் நமக்கு என்ன சொன்னார் என்பதையே போதித்தனர்.

" அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தை களினாலே பேசாமல் பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளினாலே பேசி, ஆவிக்குரியவைகளை, ஆவிக் குரியவைக ளோடே சம்பந்தப் படுத்திக் காண்பிக்கிறோம். ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனு டைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்கு பைத்தியமாகத்தோன்றும்;அவைகள் ஆவிகேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால், அவைகளை அறியவு மாட்டான் (1 கொரி. 2: 12Ј13). மேலும் 'தீர்க்கதரிசனமானது ஒரு காலத் திலும், மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாக வில்லை. தேவனு டைய பரிசுத்த மனிதர்கள், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார் கள்', ( 2 பேதுரு 1 : 21 ) என்று வேதாகமத்தில் படிக்கிறோம்.

## ３. ஆவியினால் ஒருமைப்பட்டிருக்கிறோம்.

தேவனுடைய வார்த்தையில் இல்லாத ஒன்றை ஆவியானவர் நமக்கு போதிக்க மாட்டார். சத்தியமானது எப்பொழுதும் சத்தியத்துடன் முரண்பாடு கொள்ளாது. இரண்டை இரண்டால் பெருக்கினால் நான்கு என்பது கணித முறை. கணித முறையில் நமக்கு குழப்பங்கள் இருக்

குமானால் கணக்கைக் கற்றுக் கொள்ளவே முடியாது. அவர் சத்திய ஆவியாக இருக்கிறார். வேதாகமம் சத்திய வார்த்தைகளாக இருக்கிறது. ஆவியான வரும், வார்த்தையும் ஒருமைப்பட்டிருக்கிறது. இயேசு இதை உறுதிப்படுத்தும் படிக்கு இவ்வாறு கூறினார்.'ஆவியே உயிர்ப்பிக்கிறது' மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது (யோவான் 6:63).

நாமெல்லோரும் ஆவியினால் ஒருமைப்பட்டு இருக்கிறோம். தேவன் ஒருவரே என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. அதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவர் இருக்கிறதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆவியானவர் ஒருவர் இருக்கிறார். கொள்கையளவில் நாம் இவரை ஒப்புக் கொண டாலும், அவரை நடைமுறையில் கொண்டு வரும் போது அவரை மறுதலிக்கிறோம். ஒரு சரீரம், ஒரே ஆவி என்று வேதாகமம்நமக்குக் கூறுகின்றது ( எபேசி 4:4) அந்த சரீரம் தான் சபை; சபையானது பல அங்கத்தினர்களைக் கொண்டது.

ஒரே சரீரமல்ல என்றும், பரிசுத்த ஆவியானவர் நேரடியாக வழி நடத்துக்கிறார் என்றும் பலர் போதிக்கின்றனர். இந்த போதனையை கூறும் மக்கள் ஒருமைப்பட்டியிருக்கும் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துவதுமில்லாமல், நம்மை நம்ப வைக்க அதிக முயற்சி களையும் எடுத்துக் கொள்கிறார்கள். நேரடியாக பரிசுத்த ஆவியால் நாங்கள் வழிநடத்தப்படுகிறோம் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் போது, பரிசுத்த ஆவி சரீரமான சபையில் இருப்பதை மறுதலித்து விடுகின்றனர்.

## 4. பரிசுத்த ஆவியானவர் ஒரே சபையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் சபையை மகிமையுள்ள ஒன்றாக வெளிப் படுத்தியிருக்கிறார். இவர்கள் சபையை பற்றி வேதாகமம் போதிப்பதை மறுப்பதுடன், பிரிவினை கொள்கைக்கு வழிகாட்டுகின்றனர். கணவன் மனைவி கற்புடன் ஒற்றுமையாக வாழ்வதைப்போல, கிறிஸ்துவும் சபை யும் இருப்பதாக வேதாகமம் கூறுகிறது எபேசி 5:25-26). சரீரமாகிய சபையில் ஒரே ஆவியானவர் இருப்பதைப்போல, சபைக்கு ஒரே கர்த் தரும் இருக்கிறார். கர்த்தர் என்கிற வார்த்தைக்கு ஆளுகை

செய்கின்றவர் என்று பொருள். ஒன்றுக்கு மேற்பட்ட சபைகள் இருக்கும் போது ஒன்றுக்கு மேற்பட்ட ஆளுனர்களும் இருப்பார்கள். ஒவ்வொரு சபைக்கும் ஆட்சிமுறை சட்டங்களும் இருக்கும். இவ்விதமாக ஒவ்வொரு சபையும் தனித்தனியாக ஆட்சி முறையைக் கொண்டு இருந்தால் விசுவாசமும் வெவ்வேறாக இருக்கும். இதனால் விசுவாசம் சிதறடிக்கப்படுகிறது. 'பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக' என்று பரிசுத்த ஆவியானவர் யூதா நிருபத்தில் கூறுகிறார் (யூதா:3).

எனவே புதிய ஏற்பாட்டுக் கொள்கைக்கு மாறாக எது தோன்றினாலும் அது விசுவாசமாகாது. ஒரே ஒரு ஞானஸ்நானம் தான் உண்டு. பல கர்த்தர்கள், பல சரீரங்கள், பல விசுவாசங்கள் பல ஞானஸ்நானங்கள் வேதாகமத்தில் இல்லை.

பெந்தெகொஸ்து நாளில் பரிசுத்த ஆவியால் பேதுரு நிரம்பி, பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளும்படி போதித்தார். இந்த போதனை மிகவும் தெளிவாக இருக்கிறது. இதைப்புரிந்து கொள்ள எந்த வித கஷ்டமும் தேவையில்லை. ஆனால் மனிதர்களோ இந்த போதனை என்ன சொல்லுகிறது என்பதை தெரிவிக்க பீப்பாய் பீப்பாய்களாக மையையும், டன்டன்களாக காகிதத்தையும் செலவுசெய்கின்றனர். ஏன்? இவர்கள் கர்த்தத்துவத்தை மாற்றியும், விசுவாசத்தை மாறுபாடாக போதித்தும், ஒன்றுக்கு மேற்பட்ட ஞானஸ்நானம் இருப்பதாகவும் போதித்து வருகிறதினால் தான்.

## 5. ஞானஸ்நானத்தைப் பற்றி ஆவியானவர் கூறுவது :

இந்த சிறப்பான வேதாகமப் பகுதியை படியுங்கள். "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர்சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப் 2:41). பெந்தெகொஸ்து நாளில் சத்திய ஆவியானவரின் வார்த்தையை கேட்ட மக்கள் ஒரே ஞானஸ்நானத்திற்குள் கீழ்ப்படிந்தனர். இந்த திட்டத்தை தேவன் நமக்குக் கொடுத்தார்.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது என்ன? என்றுசிலர் கேட்கின்றனர். இதைப்பற்றி வேதாகமம் என்ன கூறுகிறதென்று பார்ப்போம். மேலும் பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த ஆவியின் ஞானஸ

நானத்தைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதையும் பார்க்கலாம். இந்த வாக்குத்தத்தமானது நிறைவேற்றப்பட்டதாக வேதாகமம் கூறுகின்றது. மனந்திரும்புதலுக்கு என்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ் நானம் கொடுக்கிறேன். எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார். அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரனல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். (மத்.3:11).

இதே பகுதியில் அக்கினியினால் ஞானஸ்நானம்கொடுப்பதை யோவான் ஸ்நானகன் கூறுகிறார். இயேசு உயிர்த்தெழுந்த பின் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பற்றி இயேசுவே கூறுகின்றார்.

பின்வரும் வேதப் பகுதியை கவனமாகப்படிக்க வேண்டுகிறேன். தெயோப்பிலுவே, இயேசுவானவர்தாம் தெரிந்து கொண்ட அப்போஸ் தலர்களுக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, இவர் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும், உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டு பண்ணினேன். அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ் தலருக்கு தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர் களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர் களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். அன்றியும் அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும் போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.

ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப்போகாமல் என்னிடத் தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (அப். 1:1-5).

## 6. பரிசுத்த ஆவி ஞானஸ்நானம் அப்போஸ்தலருக்கு மட்டுமே

இந்த இடத்தில் இயேசுவானவர் அப்போஸ்தலர்களைப் பார்த்து யோவான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தான். நீங்கள் சில நாட்களுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று சொன்னார். எனவே அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம். இவ்வாக்குத்தத்தமானது அப்போஸ்தலர் அல்லாதவர்களுக்கு கொடுக்கப்பட வில்லை.

என்ன நடந்தது என்பதை சற்று கவனமாக பார்ப்போம்.''பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்போது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போல் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்கு தந்தருளிய வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்'' (அப். 2:1-4).

பரிசுத்த ஆவி வந்ததின் பலனாக அவர்கள் ஆவியில் பெலன் அடைந்து அந்நிய பாஷைகளினாலே பேசினார்கள். பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தெ நாளில் ஏன் வந்தார் என்பதை விளக்கினார். அதன்பின்பு அங்கிருந்தவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். கிறிஸ்துவின் அற்புதங்களை அவர்களுக்கு அறிவித்தனர். நம்மை விசுவாசிகளாக மாற்றத்தான் கிறிஸ்து இந்த அற்புதங்களைச் செய்தார். பரிசுத்தாவியின் நேரடியான வழி நடத்தலினால் நம்மைஇரட்சிக்காமல், இயேசு தான் செய்த அற்புதங்களின் மீது விசுவாசம் வைத்தவர்களையே விசுவாசிகளாக மாற்றி இரட்சிப்படைய கிறிஸ்து இவைகளைச் செய்தார்.

நாம் வேத வசனங்களை கவனமாக படிக்க வேண்டும். '' இந்த புஸ்தகத்தில் எழுதியிராத அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது'' (யோவான் 20:30,31). பரிசுத்த ஆவியின் துணை கொண்டு பேதுரு இயேசுவின் அற்புதங்களை முதன் முதலில் பிரசங்கித்தார். சுவிசேஷத்தின் மூலமாக விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகிறோம். '' பின்பு அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான் '' ( மாற்கு 16:15,16). **கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் என்பதைத்தான் சுவிசேஷம் என்று பவுல் கூறுகிறார்** (1 கொரி.15:1-4).

பெந்தெகொஸ்தெ நாளில் பேதுரு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் என்ற சுவிசேஷத்தை சரியான முறையில் பிரசங்கித்தான். பேதுரு தன் முதல் பிரசங்கத்தை இந்த வார்த்தைகளினால் முடிக்கிறார். ''ஆகையால் , நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக ஆக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவங்கள் என்றான்'' (அப். 2:36). நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியை அந்த மக்கள் கேட்க காரணமாயிருந்தது எது? அந்த செய்தியை விசுவாசித்தபடியால் இந்த கேள்வியை கேட்கின்றனர். இதை அவர்கள் கேட்டபோது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து : ''சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்'' (அப் 2:37).பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் பரிசுத்த ஆவியால் நிறைந்தவர்களாய் இருந்தபடியால் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் கூறினார்கள். பரிசுத்த ஆவியின் பதில் மிகவும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது: '' நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும், பாவ மன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்வீர்கள்'' (அப் 2:38). பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் போது பரிசுத்த ஆவியின் வரத்தை (பரிசுத்த ஆவியை ஈவாக) பெறுவீர்கள் என்று பேதுரு கூறுகிறார்.

பேதுரு இன்னும் தெளிவாக கூறுகிறார். '' இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் இவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம். தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள் '' (அப். 5:32). இங்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு வாக்குத்தத்தமாக பரிசுத்த ஆவியின் வரங்கொடுப்பதாகச் சொல்கிறார். இதை முழுமையாக புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், வசனங்களின் மூலமாக பரிசுத்த ஆவியானவரைப் பற்றித் தெரிந்து அவரை விசுவாசிக்கிறோம்.

நான் இக் கட்டுரையை எழுதும் போது மின்சார பல்பு எரிகிறது. மின்சாரத்தைப் பற்றி அவ்வளவாக எனக்கு தெரியாவிட்டாலும் அதை நான் உபயோகப் படுத்துகிறேன். அம்மாதிரியே, உள்ளத்தில் தங்கி வாசம் செய்யும் பரிசுத்த ஆவியைப் பற்றி அவ்வளவாக தெரிந்து கொள்ளாவிட்டாலும்,நாம் ஞானத்தை சரியாக பயன்படுத்த உதவுகிறார். புதிய

ஏற்பாடு நமக்கு வேண்டியவைகளை கொடுக்க வல்லதாய் இருக்கிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு இவ்வாறாக எழுதுகிறார். இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத் தக்கதாக பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவன் என்றும் உனக்குத் தெரியும். "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவ னாகவும்எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்தி ருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவை களாயிருக்கிறது" (2 தீமோ. 3: 15 -17). தேவனுடைய வார்த்தையானது பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்டது என்று அவர்கள் அதைக் கற்றுக் கொள்வதிலும், அதை முழுமையாக விசுவாசிப்பதிலும், ஒவ்வொரு நற்காரியங்களிலும் பரிசுத்த ஆவியானவரின் பிரதிபலிப்பு இருக்க வேண்டும். வேத வசனங்களை கற்றுக்கொள்வது மட்டும் போதாது. கிறிஸ்துவுக்குள் விசுவாசிக்கிறவர்களுக்கு உள்ளத்தில் தங்கி பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார். நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாகி, (எபேசி 3:16-17). நாம் கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தினால் உறுதிப்பட்டிருந்தால் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய உள்ளத்தில் தங்கி வாசம் செய்வார்.

பரிசுத்தாவியானவர் உள்ளத்தில் தங்கி இருப்பது என்பது சுவிசே ஷத்தின் சிறப்பான நிகழ்ச்சியாகும்! பழைய ஏற்பாட்டில் ஆவியான வரின் உந்துதல் இருந்தது. சிருஷ்டிகரின் அற்புதங்களுக்கும் மோசே செய்த அற்புதங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. கிறிஸ்து ஊழியம் செய்து வருகின்ற காலத்திலும் அப்போஸ்தலர்களினால் அற்புதங்கள் செய்யப்பட்டன. யோவான் 7:37-39-ல் இவைகளுக்கெல்லாம் அப்பாற் பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. "பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று சப்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந் தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன். அவன் உள்ளத் திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடுமென்றார். தம்மை விசு வாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியால் பரிசுத்தாவி இன்னும் அருளப்படவில்லை . கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களே யல்லாமல் மற்றவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ள முடியாது. உலகத்திற்குரிய மனிதர்களுக்கு பரிசுத்த ஆவியை தேவன் கொடுக்காமல் தம்மை விசுவாசித்து கீழ்ப்படிகிறவர்

களுக்கே கொடுக்கிறார். சுவிஷேமானது விசுவாசிக்கிறவர்களுக்கு தேவ பெலனாயிருக்கிறது என்று ரோமர் 1:16 ல் பவுல் கூறுகிறார். உலகத்து மக்கள் ஜெபித்தாலும் பரிசுத்த ஆவியானவர் அவர்களை மன மாறுதலுக்கான திறனை தரமாட்டார். பாவியான மனுஷன் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள முடியாதென்று இயேசு கூறுகிறார். நமக்குள் ஆவியானவர் இல்லையெனில் அவரை நாம் எப்படி அவித்து போட முடியும்? ஆவியை அவித்துப் போடாதிருங்கள் என்று 1 தெச. 5:19ல் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் பாவம் செய்தோமாகில் நம்மில் பரிசுத்த ஆவி இல்லை என்று அறிகிறோம் (யூதா. 19).

ஆவிக்குரிய கனிகளை கொடுப்பதால் நமக்குள் பரிசுத்த ஆவி இருக்கிறார் என்பதை அறிகிறோம். ஆவிக்குரிய போராட்டம் நடந்த வண்ணம் இருக்கிறது என்று பவுல் கூறுகிறார். மாம்சத்திற்குரிய இச்சை ஆவியுடனும், ஆவி மாம்சத்துடனும் ஒன்றைஒன்று எதிர்த்தபடி இருக்கிறது (கலா 5:16-21). ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்று மில்லை (கலா. 5:22-23). கிறிஸ்துவை யுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந் திருக்கிறார்கள் என்று வேதம் கூறுகிறது. (கலா 5: 24).

நியம சட்டத்தின்படி தேவன் ஆளுகை செய்கிறார். அற்புதங்கள் இவைகளுக்கு விதி விலக்காயிருக்கிறது. மண்ணிலிருந்து ஆதாமை உண்டாக்கினார். ஆதாமின் விலா எலும்பினாலே ஏவாளை உண்டாக் கினார். அதற்குப் பிறகு இயற்கையின் நியதியின்படி உலகத்திலுள்ள மனுகுலத்தை உருவாக்கினார். மோசே தண்ணீரை இரத்தமாக மாற்றி னார். அது ஓர் அற்புதம். ஆனால் இயற்கையின் நியதியின்படி நம்மு டைய சரீரம் தண்ணீரை இரத்தமாக மாற்றும் திறனை உடையதாக இருக்கிறது. இம்மாதிரி நடைபெறவில்லையென்றால் மனிதன் என்றோ அழிந்து இருப்பான். 5000 பேரை தன் அற்புத வல்லமையில் இயேசு அன்று போஷித்தார். ஆனால் இன்று தேவன் இயற்கையின் நியதியின் படி பல்லாயிரக் கணக்கான மனிதர்களை போஷித்து வருகிறார். நாம் உயிர்வாழ கோதுமை, அரிசி போன்ற தானியங்களை கொடுத்து நம்மு டைய ஜீவனைக் காக்கிறார். இதை எந்த மனிதனும் உற்பத்தி செய்ய முடியாது. சூரியனின் ஒளியும், வெப்பமும் 43 மில்லியன் மைல்களுக்கு அப்பாலிருந்து நமக்கு கிடைக்கிறது. இதை மனிதர்கள் செய்யமுடியாது. தேவனின் இயற்கை நியதிதான். அவருடைய அற்புதங்களைக் காட்

டிலும் சிறந்தது. ஆனால் அற்புதங்கள் அவருடைய வல்லமையை காண்பிக்கிறது.

அநேக அற்புதங்களைச் செய்த ஊழியக்காரனாகிய பவுல் அவைகளுடைய நோக்கம் முடிந்துவிட்டதாக கூறுகிறார். தீர்க்கதரிசனங்களும் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளும் ஒழிந்துபோம் என்று 1 கொரி 13:8ல் பவுல் கூறுகிறார். தீமோத்தேயுவின் வியாதிக்கு மருந்து எடுத்துக் கொள்ளும்படி பவுல் அவனுக்கு எழுதுகிறார். துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டுவந்தேன் என்று 2 தீமோ. 4:20ல் குறிப்பிடுகிறார். தன்னுடைய அற்புத ஊழியத்திலும், இயேசு பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டுமென கூறுகிறார் (மாற்கு 2:17)அற்புதங்கள் மனிதனை மாற்றாது.

தீர்க்கதரிசியாகிய பேயோரின் மகனாகிய பிலேயாம் தீமையான வழியில் நடப்பதையே விருப்பமாக கொண்டிருந்தான். கடினப்பட்ட மனதை உடையவனாகிய காய்பா என்ற தீர்க்கதரிசி இயேசுவின் மரணத்தைப் பற்றி தீர்க்கதரிசனமாக கூறினார். கொரிந்து சபையில் அற்புதம் செய்யும் வரம் பெற்றவர் நிறைய இருந்தாலும் பாவம் மலிந்து கிடந்தது. அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயி ருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பித்தார். கடைசியாக ஜீவ தண்ணீரை பெறுவதற்கான அழைப்பு உங்களுக்காக இலவசமாக கொடுக்கப்படுகிறது(வெளி 22:17).

## உங்களுடைய ஜீவன் எங்கேயிருக்கிறது?

தேவனுடைய பார்வையிலிருந்து
நாம் மறைந்திருக்க முடியாது.
ஆனால் தேவனுக்குள் மறைந்திருக்க
முடியும் !
" உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே
தேவனுக்குள் மறைந்திருக்கிறது "
(கொலோசெயர் 3:3)

# வாரத்தின் முதலாம் நாள்

– J.C.சோட்

ஒவ்வொரு வாரத்திலும் ஏழு நாட்கள் உண்டு.

இவைகளில் எந்த நாளில் கிறிஸ்தவன் தேவனை தொழுது கொள்ள வேண்டும்?

தொழுகை நாளாக ஏதாவது ஓர் குறிப்பிட்ட நாள் ஒதுக்கப்பட்டிருக்கிறதா?

இதைக் குறித்து சத்திய வேதம் என்ன போதிக்கிறது?

நம் அனைவருக்கும் தெரிந்தபடி, நியாயப்பிரமாணத்தின் காலத்தில் ஓய்வு நாள், யூதரின் தொழுகை நாளாக இருந்து வந்தது. மற்ற மதங்களில் முகமதியர் வெள்ளிக்கிழமையையும், புத்தர்கள் போயா நாளையும் தொழுகை நாளாக அனுசரிக்கிறார்கள்.

ஆனால் கிறிஸ்தவனுடைய தொழுகை நாள் எது?

அவன் எந்த நாளில் தேவனை ஆராதிக்கிறான் என்பது அவ்வளவு முக்கியமான காரியமா?

யூத மார்க்கத்தின் பழைய ஓய்வு நாள் இப்போதும் நம்மை கட்டுப்படுத்தும் என நம்மில் பலர் கூறுகிறார்கள். ஆரம்பத்திலே இந்தக் கட்டளை யூதருக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது என்பதை கவனிக்கவும் (யாத்திராகமம் 20:1-17).

பழைய பிரமாணம் நிறைவேற்றப்பட்டதால் அது எடுத்துப் போடப்பட்டது (மத்தேயு 5:17-19) கிறிஸ்துவும் மோசேயின் பிரமாணத்தின் காலத்தில் வாழ்ந்து, மரித்ததால், அவரும் கூட ஓய்வு நாளை ஆசரித்தார்.

இந்த நாளை நாம் ஆசரிக்க வேண்டும் என கிறிஸ்து ஒரு போதும் கட்டளையிடவில்லை.

அப்போஸ்தலர்களும் இதைக் குறித்து கட்டளையிடவும் இல்லை. அவர்களும் ஓய்வு நாளை அனுசரித்ததும் இல்லை. அடிக்கடி பவுல் ஓய்வு நாளில் தேவாலயங்களில் பிரவேசித்தது தொழுகைக்காக அல்ல.

பின் ஏன் சென்றார்?

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை நீங்கள் வாசிப்பீர்களானால் பவுல் தேவ வசனத்தை போதிப்பதற்காகவே அங்குசென்றார் என்றறியலாம்.

மேலும் அவருடைய உண்மையான நோக்கத்தை அறிந்து கொண்ட யூதர்கள் அவரை அனுமதிக்கவில்லை.

தொழுகை நாள் கத்தோலிக்க மார்க்கத்தினரால் மாற்றப்பட்டது என சிலர் கருதுகிறார்கள். சத்திய வேதமும் கத்தோலிக்கர்கள் மூலமாய் கொடுக்கப்பட்டது என தாங்கள் உரிமை பாராட்டுகிறார்கள்.

உண்மை அதுவல்ல.

கிறிஸ்துவின் பிரமாணத்தில் வாழ்ந்தவர்கள் ஓய்வு நாளை தொழுகை நாளாக அனுசரித்தார்கள் என்று சத்திய வேதம் உபதேசிக்கவுமில்லை, வெளிக்காட்டவுமில்லை. சரித்திரமும் குறிப்பிடவில்லை.

சத்திய வசனத்தை நாம் நிதானமாய் பகுத்து அறியும் பொழுது (2 தீமோத்தேயு 2:15), மோசேயின் பிரமாணத்திற்கும் கிறிஸ்துவின் பிரமாணத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்ள முடியும்.

மேலும் மோசேயின் பிரமாணம், நிறைவேற்றப்பட்டவுடன் ஓய்வு நாள் முறைமையும் அழிக்கப்பட்டதை நன்கு அறிந்து கொள்ள முடியும் (2 கொரிந்தியர் 3:6-16).

அதற்குப் பதிலாக கிறிஸ்துவின் பிரமாணம், புதிய தொழுகை நாளாகிய வாரத்தின் முதலாம் நாள் கொடுக்கப்பட்டிருக்கிறது அப்.15:19-23ஐ. வாசித்தால் இங்கே புறஜாதியாரான கிறிஸ்தவர்கள், பரிசுத்த ஆவியானவர் மூலமாக, ஓய்வு நாளின் முறைமையிலிருந்ததும், மோசேயின் நியாயப்பிரமாணத்தினின்றும் விடுதலையாக்கப்பட்டார்கள் என்று பார்க்கிறோம்.

தவறான முடிவுக்கு நீங்கள் செல்லுமுன் வாரத்தின் முதலாம் நாளைப்பற்றி சில காரியங்களை உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

வாரத்தின் முதல் நாள் என்பது கிறிஸ்தவ ஓய்வு நாள் ஆகாது. அல்லது இது ஒரு ஓய்வு பெறும் நாள் என்றோ, அல்லது கைக்கொள்ள வேண்டிய - அனுசரிக்க வேண்டிய நாள் என்றோ எடுத்து கொள்ள கூடாது. அது ஒரு பரிசுத்த நாளும் அல்ல. இந்த நாள், கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி தொழுதுகொள்ளும்படியாக தேவனால் ஒதுக்கப்பட்ட நாளாகும்.

ஆகவே பழைய ஏற்பாட்டின் ஓய்வு நாளைப் போல் வாரத்தின் முதலாம் நாள் ஒரே மாதிரி இருக்காது.

வாரத்தின் முதலாம் நாளைப் பற்றி வேதவாக்கியங்கள் என்ன போதிக்கிறது என்பதை கவனிக்கவும்.

1. வாரத்தின் முதலாம் நாளிலே கிறிஸ்து மரணத்தை விட்டு எழுந்தார். (மத்தேயு 28;1-7)

கர்த்தர் உயிர்த்தெழுந்த பிறகு வாரத்தின் முதலாம் நாளிலே இரண்டு தரம் தம்முடைய சீடர்களுக்கு காணப்பட்டார். (யோவான் 20:9,19,26)

2. பரிசுத்த ஆவியானது பெந்தேகொஸ்தே நாளிலே பொழிந்தருளப்பட்டது. அந்த நாளும் வாரத்தின் முதலாம் நாளாக இருந்தது (அப்போஸ்தலர் 2:1-4).

இதை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்? ஏனெனில் பெந்தேகொஸ்தே நாள் எப்போதும் வாரத்தின் முதலாம் நாளிலே வந்தது.

3. சுவிசேஷம் முதன் முறையாக வாரத்தின் முதலாம் நாளிலே பிரசங்கிக்கப்பட்டது (அப்போ 2).

4. வாரத்தின் முதலாம் நாளிலே சபையானது ஸ்தாபிக்கப்பட்டது. (அப்போஸ்தலர் 2:38-47)

5. வாரத்தின் முதலாம் நாளிலே அப்பம் பிட்கும்படியாக சீஷர்கள் கூடி வந்தார்கள்,"வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறு நாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்"(அப்போ 20:7).

ஓய்வு நாள் தொழுகை நாளாக இருந்திருப்பின் பின்னே ஏன் பவுல் பல நாட்கள் காத்திருந்து, ஓய்வு நாளையும் கடந்து, வாரத்தின் முதல் நாளிலே சீஷர்களோடு கூடி தொழுது கொள்ள முயன்றார். நிச்சயமாக நீங்கள் இதையறிந்து கொள்ளமுடியும்.

6. வாரத்தின் முதலாம் நாளிலே தங்களிடத்தில் காணிக்கை சேர்த்து வைத்துக் கொடுக்க வேண்டுமென்று கிறிஸ்தவர்கள் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள் "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்ம பணத்தை குறித்து நான் கலாத்தியா நாட்டுசபைகளுக்குப் பண்ணின திட்டத்தின் படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன் (1 கொரிந்தியர் 16:1,2).

கிறிஸ்தவர்கள் சபையாகக் கூடி வந்திருக்கையில், தர்மப்பணம் சேர்க்கப்பட்டதை அறிகிறோம். பவுலின் உத்தேசப்படி அவர் வந்திருந்தபோது பணம் சேர்க்குதல் இராதபடிக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் சேர்த்து வைக்க வேண்டும் என கட்டளையிட்டிருந்தார்.

தர்மப்பணம் வீட்டிலே சேர்த்து வைக்கப்பட்டிருந்தால், அவர் வரும் போது சபையாக கூடவேண்டிய அவசியம் இருந்திருக்கும் ஓய்வு நாள் தொழுகை நாளாக இருந்திருந்தால் பின்னே ஏன் வாரத்தின் முதல் நாள் தோறும் எதையாகிலும் சேர்த்து வைக்க வேண்டும் என பவுல் கட்டளை தோறும் எதையாகிலும் சேர்த்து வைக்க வேண்டும் என பவுல் கட்டளையிட்டிருந்தார்? ஓய்வு நாளை கடைப்பிடிக்கிற உங்களில் சிலர், பவுலின் உபதேசத்தை ஏன் பின்பற்றக்கூடாது? முடியவில்லை என்றால் . . . . . ஏன்?

நாளானது சமீபித்து வருகிறதை அறிந்து சபைகூடி வருதலை கிறிஸ்துவர்கள் மறந்து விடக்கூடாது. (எபிரெயர் 10:25). இது வாரத்தின் முதல் நாளாகத்தான் இருத்தல் வேண்டும். கர்த்தருடைய நாள் என யோவான் இதை அழைத்தார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:10).

தேவனுக்கு கடைசி ஸ்தானம் கொடுப்பதற்கு பதிலாக முதல் ஸ்தானத்திலே வைத்து ஆராதிக்க வேண்டிய தொழுகை நாள், வாரத்தின் முதல் நாளாகும். (மத்தேயு 6:33).

பழைய நியாயப்பிரமாணத்தை பின்பற்ற முயற்சிக்கிறவர்கள் பின் வருகின்ற வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கவும். ரோமர் 7: 1-7, 2 கொரிந்தியர் 3; எபேசியர் 2; கொலோசெயர் 2; எபிரெயர் 8:7-10).

மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு நாம் கட்டுப்பட்டவர்களாக இல்லாமல், கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு கட்டுப்பட்டிருக்கிறோம் என்பதை உணரமாட்டோமா?

தேவனுடைய நியமத்தின்படி வாரத்தின் முதல் நாளிலே அவரை தொழுது கொள்ளுவோம், இதைத்தவிர மற்ற நாளை தேவன் ஏற்றுக் கொள்ளமாட்டார் ◆

# தேவ மன்னிப்பு

— பி.ஆர்.எஸ்

பாவம் செய்த ஒருவன்,மன்னிப்புக் கேளாமலே அவனை நாம் மன்னித்தேயாக வேண்டுமா?அவன் மன்னிப்புக் கேட்காவிட்டாலும் ஒரு கிறிஸ்துவன் அவனை மன்னிக்க வேண்டும் என்று வாதிடுவாரும் உண்டு.

கிறிஸ்துநாதரை சிலுவையில் அறைந்த யூதமக்களை, அவர்கள் கேட்காமலேயே கிறிஸ்துஇயேசு மன்னிக்கவில்லையா என்று கேட்பாரும் உண்டு. அன்பிலும் இரக்கத்திலும், தயையிலும் பெருத்த தேவன், மன்னிப்பைத் தருவாரா? அல்லது மனந்திரும்புதலை, மன்னிப்புப் பெறுவதற்கு ஒரு நிபந்தனையாக வைத்திருக்கிறாரா? என்று பார்ப்போம்.

லூக்கா 13:3ஐ வாசிப்போம். "அப்படியல்ல வென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் " என்றார். மேலும், லூக்கா 17:3ல் "உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றம் செய்தால், அவனை கடிந்துகொள். அவன் மனஸ்தாபப்பட்டால் அவனுக்கு மன்னிப்பாயாக" என்றும் கூறுகிறார்.

ஒருவன் மனந்திருந்தாவிட்டாலும் அவனை மன்னிக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறதா? ஒருவன் மன்னிப்புக் கேளாமல் இருந்தாலும் நாம் அவனை மன்னிக்க வேண்டியது அவசியமானால், பாவத்தில் ஜீவித்து கொண்டிருப்பவர்களையும் மன்னிக்கத்தான் வேண்டியிருக்கும் அல்லவா? ஒருவன் மனந்திரும்பி, மன்னிப்பைக் கேட்க அவசியம் இல்லையென்றால் ஒழுங்கற்றுத் திரிகிற எந்தச் சகோதரனையும் விட்டு சபை எப்படி விலக முடியும்? (2 தெச. 3:6,14,15)

மன்னிப்பைக் கேளாதவருக்கும் மன்னிப்பை கொடுக்க வேண்டியது அவசியமானால், மத்.18:15-17ல், ஒரு சகோதரன் நமக்கு விரோதமாய் குற்றம் செய்தால், தனிப்பட்டுப் போய், அது முடியாவிட்டால், ஓரிரு சாட்சிகளோடு போய், அதுவும் முடியாவிட்டால் சபைக்குத் தெரியப்படுத்து என்ற இயேசுவின் கட்டளைக்கு எப்படிக் கீழ்ப்படிவது? உண்மையிலேயே, மன்னிப்பை கேட்காமலே அவனை மன்னிக்க வேண்டும் என்று வேதாகமத்தில் போதிக்கப்பட்டிருக்கிறதா?

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1.யோவான் 1:9) " உன் சகோதரன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக" (லூக்.17:3)ஒருவன் மன்னிப்பைப் பெற வாஞ்சிக்காதபோது, அவனை மன்னித்தால், சபையின் ஒழுங்கு நடவடிக்கைகள் பயனற்றுப் போகும்.

ஒழுங்கற்றுத் திரிகிற எந்த சகோதரனும் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள் என்றும் பவுல் கூறியுள்ளார். (2 தெச. 3:14) புத்தி மதிகள் இப்படி இருக்க மன்னிப்புக் கேட்காதவர்களுக்கும் மன்னிப்புக் கொடுக்க வேண்டும் என்ற விதியை நாம் பின்பற்றினால் சபை ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு பவுல் கூறியிருக்கிற விதிமுறைகளை எப்படி அனுசரிப்பது?

கிறிஸ்து இயேசு, சிலுவையில் அறையப்பட்ட போது பிதாவே இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று தெரியாமல் செய்கிறார்கள் என்று பிதாவை நோக்கி செய்த ஜெபம் எப்போது கேட்கப் பட்டது? கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மரித்து உயிர்த்தெழுந்த 50 நாட்களுக்குப் பிறகு வரும் முதல் பெந்தெகொஸ்தே நாளில் அந்த ஜெபம் கேட்கப்பட்டது.

பேதுரு ஆவியிலே நிறையப்பட்டவராய் தன் முதல் சுவிசேஷ பிரசங்கத்தைச் செய்து கொண்டிருக்கும்போது, ஆபிரகாம், ஈசாக்கு, யாகோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார். அவரை நீங்கள் கொலை செய்ய ஒப்புக்கொடுத்தீர்கள். பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை விட்டுவிட்டு கொலைபாதகனை விடுதலை செய்ய வேண்டுமென கேட்டீர்கள் ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள்: ஆனால் தேவன் அவரை எழுப்பினார். இதற்கு நாங்கள் எல்லாரும் சாட்சிகள் என்று பிரசங்கித்தார்.

தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவையே கொலை செய்தவர்கள் நீங்கள் என்ற குற்றச்சாட்டை பேதுரு அவர்கள்மீது சுமத்திய போது, அவர்கள் மனம் கலங்கினார்கள்.பேதுருவைப் பார்த்து சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று வருந்திக் கேட்டார்கள். பேதுரு, நீங்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார். (அப்2:38) இந்தச் சந்தர்பத்தில்தான் கிறிஸ்துவின் சிலுவை ஜெபம் தேவனால் கேட்கப்பட்டு மன்னிப்பு அருளப்பட்டது.

பேதுருவின் வார்த்தையை ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் மூன்று ஆயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.(அப்.2:41) அதாவது, இப்போதுதான், இயேசு சிலுவையில் அறைய காரணமாயிருந்த மூவாயிரம் கொலைகாரர்களுக்கும் தேவன் மன்னிப்பை அருளினார்.

இரட்சிப்பின் திட்டத்திற்கான நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிந்த பின்னரே அவர்களின் பாவம் மன்னிக்கப்பட்டது.

✦ ✦ ✦ ✦ ✦

# கிறிஸ்துவின் சபை என்றால் என்ன?

– J.C.சோட்

?... இன்று உலகத்தில் ஏராளமான சபைகள் உண்டு. அனேக வழிகளில் அவைகள் ஒரே மாதிரியாக உள்ளன. அவைகள் மனிதரால் ஸ்தாபிக்கப்பட்டவை. அவைகள் முக்கியமானவைகள் அல்ல, ஏனெனில் அதன் அங்கத்தினர்களே, அதில் அங்கமாகாமல் பரலோகம் போகலாம் என்று கூறுகின்றனர். அனேக நாமகரண கூட்டங்களாகப் பிரிந்து கிடக்கின்றனர்.

ஆனாலும் ஒரு நாமகரண கூட்ட சபை மற்றொன்றை நல்லது என்கிற ஒரு விஷயத்தில் மாத்திரம் எல்லோரும் ஒன்றுபட்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லாவிதமான நாமங்களையும், பட்டங்களையும் தரித்துக்கொண்டு, ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தனிப்பட்ட கொள்கை புத்தகத்தை அல்லது குறிப்பு ஏட்டை தங்களுக்கென்று வைத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த கூட்டத்தில் சேராத ஒரே ஒரு சபை உண்டு. அது மற்றெல்லா சபைகளை விட வித்தியாசப்பட்டது. அதுதான் **கிறிஸ்துவின் சபை.**

கிறிஸ்துவின் சபை ஒரு நாமகரண கூட்டமோ அல்லது சமய பிரிவினை கூட்டமோ அல்ல. பல நாமகரண கூட்டங்களின் தொகுப்பும் அல்ல. அது கத்தோலிக்க, பிராட்டஸ்டண்டுசபையோ அல்லது யூத மார்க்கமோ அல்ல. அது ஒரு சமய உட்பிரிவும் அல்ல. மனிதனால் ஸ்தாபிக்கப்பட்டதும் அல்ல. அது மனிதனை தலைவராகக் கொண்டிருப்பதில்லை. அதற்கு உலகபிரகாரமான தலைமை ஸ்தாபனம் கிடையாது. மனிதர்களின் நாமத்தை தரிப்பதும் இல்லை. அது ஒரு அரசியல் நிறுவனமோ அல்லது சமுதாய ஸ்தாபனமோ அல்ல. அப்படியானால் அது என்ன? எதுவாக இருக்ககூடும்? அது எது என்று பார்ப்போம்.

சபை என்ற பதம் கிரேக்க வார்த்தையான 'எக்லெசியா', என்பதன் தழுவல். அதன் பொருள் 'அழைக்கப்பட்டவர்கள்' அதாவது, உலகத்திலிருந்து கர்த்தருடைய ராஜ்யத்திற்குள் அழைக்கப்பட்ட வர்களின் தொகுப்பு. 'இடம்பெயர்ப்பு ஏற்படுகிறது' என்று பவுல் கூறுகிறார். அதாவது உலகத்திலிருந்து, தேவனுடைய ராஜ்யம் அல்லது கர்த்தருடைய சபைக்குள்ளாக உட்படுத்தப்படுதல் (கொலோசெயர் 1:13-14).

வேதாகமம், சபையைப்பற்றிக் கூறும்பொழுது, இரண்டு கருத்தில் பேசுகிறது.

முதலாவது, அது பொதுவான கருத்தில் கூறப்பட்டது. இதை மனதிற்கொண்டு, கிறிஸ்து கூறும்பொழுது .நான் என் சபையைக் கட்டுவேன். (மத்தேயு 16:18) என்றார். இந்த சந்தர்ப்பத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள சபையை எண்ணாமல், பொதுவான சபை என்ற கருத்தில் பேசுகிறார்.

இரண்டாவது, சபை வித்தியாசப்பட்ட இடங்களில் உள்ள, பிராந்திய சபைகள் என்றும் பேசப்படுகிறது. இதை அடிக்கடி, கொரிந்து பட்டணத்திலுள்ள சபை, தெசலோனிக்கேயா பட்டணத்திலுள்ள சபை என்று வாசிக்கிறோம் (1 கொரிந்தியர் 1:2; 1 தெசலோனிக்கேயர் 1:1). பின்பு எல்லா பிராந்திய சபைகளையும் மனதில் கொண்டு பவுல் கூறுகிறார், "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:16).

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் சொல்லப்பட்ட ஆசியாவிலுள்ள ஏழு சபைகளைப் பற்றி படிக்கும்போது இதே கருத்தில்தான் புரிந்து கொள்ளுகிறோம்.

சபை, இப்பூமியில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாய் இருக்கிறது. அவருக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு ஊழியஞ் செய்பவர்களின் தொகுப்பு. இந்த சரீரத்திற்கு அனேக அவயவங்கள் இருந்தாலும் ஒரே ஒரு தலை உண்டு(1 கொரிந்தியர் 12:13; கொலோசெயர் 1:18) சரீரம் ஒன்றே; அதுவே சபையாகும் (எபேசியர் 4:4; 1:22,23).

மனிதனால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளை குறித்து அறிந்து கொள்ள, நீங்கள் இன்றைய சரித்திரம், இலக்கிய புத்தகங்களுக்கு செல்லலாம்.

அவைகளைப் பற்றி அறிந்து கொள்ள வேதாகமத்துக்கு உங்களால் செல்ல முடியாது. ஏனெனில் கர்த்தரால் அவைகள் தோற்றுவிக்கப்படவில்லை. அதேபோல, கிறிஸ்துவின் சபையைப் பற்றி அறிய விரும்பினால் நீங்கள் செல்ல வேண்டிய இடம் வேதாகமமே. வேதாகமம், சபையின் வரலாற்றை மட்டுமல்லாமல், அதைக் குறித்து நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய ஒரே வழிகாட்டியாகவுமிருக்கிறது(2தீமோத்தேயு 3:16-17;யாக்கோபு 1:25).

கிறிஸ்து சபையை ஸ்தாபித்தார் (மத்தே 16:18). எருசலேம் பட்டிணத்தில் கி.பி. 33-ல் ஸ்தாபிக்கப்பட்டது (அப்போஸ்தலர் 2). அப்படி என்றால் சபை, எனக்கோ, உங்களுக்கோ அல்லது எந்த மனிதனுக்கோ சொந்தமானது அல்ல. அது தோற்றுவிக்கப்பட்ட இடம் இங்கிலாந்து அல்ல. ஆகையினால் அது ஒரு இங்கிலாந்து சபை அல்ல. அது அமெரிக்காவில் தோன்றியதும் அல்ல. ஆகவே அது ஒரு அமெரிக்க சபையும் அல்ல. அல்லாமல், ஆசியாவிலுள்ள எருசலேம் பட்டிணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது ஒரு புதிய சபை அல்ல. 2000 வருடங்களுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டது.

அப்போஸ்தலர் காலத்தில் இந்த சபையில் அங்கமாக்கப்பட ஒரே ஒரு வழிதான் இருந்தது. அது கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதனாலேயே. சுவிசேஷத்தை கேட்டவர்கள் (ரோமர் 10:17); அதை விசுவாசித்து (எபிரேயர் 11:6), பாவங்களிலிருந்து மனந்திரும்பி (அப்போஸ்தலர் 17:30), கிறிஸ்துவை அறிக்கை யிட்டு(ரோமர் 10:10), பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் (தண்ணீரில் முழுக்குதல்) பெற்றனர் (அப்போஸ்தலர் 2:38). இப்படியாக இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்க்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 2:47). கர்த்தர் இன்றும் அதைச் செய்து வருகிறார்.

சபை அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 11:26;) அந்த சபை கிறிஸ்துவின் சபை அல்லது தேவனுடைய சபை என்று அழைக்கப்பட்டது.(ரோ16:16;) அது கிறிஸ்துவின் சரீரம் என்று அழைக்கப்படுகிறது (1கொரி 12:27). அந்த சரீரமாவது, சபை (கொலோசெயர் 1:18) என்பதனால் அதே ஆசிரியர் மீண்டும் கிறிஸ்துவின் சபையை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என்று பேசுகிறார். அவர் நாமத்தை தரித்துக் கொள்வது இன்று அவரை மகிமைப் படுத்துவது போலாகும். (அப்போஸ்தலர் 4:12).

சபை உலகமெங்கும் உள்ள ஆயிரக்கணக்கான தனித்தனி பிராந்திய சபைகளின் தொகுப்பு. ஒவ்வொரு தனிப்பட்ட பிராந்திய சபையும் சுயமாக இயங்கக்கூடியது. இருப்பினும் அன்பினாலும், ஒரே ஐக்கியத்தாலும், எல்லா பிராந்திய சபைகளும் கட்டப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவே அதன் தலைவர் (எபேசியர் 1:23).

எங்கெல்லாம் பிராந்திய சபை வளர்ந்து, ஆவிக்குரிய விஷயத்தில் பலமுள்ளதாக, தகுதி பெற்ற மனிதர்கள் இருக்கும்பொழுது தங்களுக்கென்று சொந்த மூப்பர், உதவிக்காரர், பிரசங்கிமார்கள், போதகர்கள் முதலானோரை அமர்த்திக் கொள்ளலாம் (1 தீமோத் 3;)

ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் ஆராதனை நடத்தப்பட்டு வருகிறது (அப்போஸ்தலர் 20:7). அங்கத்தினர்கள் சத்தியத்தை படிக்கவும் ( 2 தீமோத்தேயு 2:15), ஜெபிக்கவும் (1 தெசலோனிக்கேயர் 5:17), பாடவும் (எபேசியர் 5:19), கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ளவும் (1 கொரிந்தியர் 11), காணிக்கை கொடுக்கவும் கூடி வருகிறார்கள் (1 கொரிந்தியர் 16:2).

தேவன் தம்முடைய பிள்ளைகள் உலகத்தோடு கறைபடாத படிக்கு, பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க விரும்புகிறார் (எபேசியர் 5:27). உலகில் உள்ள சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது (மாற்கு 16:15,16), எளியோருக்கு உதவி செய்வதும் சபையின் ஊழியம் (யாக்கோபு 1-27). மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களுக்கு ஜீவகிரீடம் கிடைக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10; மத்தேயு 25).

இது தான் கிறிஸ்துவின் சபை, கர்த்தருடைய சபை. நீங்கள் வேதாகமத்தில் வாசிக்கும் ஒரே சபை. அதைக் குறித்து அதிகதிகமாக தெரிந்து கொண்டு, அதில் ஒரு அங்கத்தினனாக மாறுங்கள்.

# கிறிஸ்துவின் சபையைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

– J.C.சோட்

கிறிஸ்துவின் சபையைப்பற்றி இந்தியாவிலுள்ள பலரிடத்தில் பேசியபோது அனேகர் இதைப்பற்றி கேள்விப்படாதவர்களாகவே இருக்கிறார்கள்.

நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ? நீங்கள் ஒருவேளை கேள்விப்பட்டிருக்கலாம். நான் ஒன்று கேட்கிறேன். கிறிஸ்துவின் சபையைப்பற்றி எப்பொழுதாவது நீங்கள் கேள்விப்பட்டதுண்டா ? இல்லையென்றால். நான் மற்றவர்களைக் கேட்ட மாதரி உங்களையும் கேட்கிறேன். ஏன் கேள்விப்படவில்லை ?

உங்களிடம் வேதாகமம் இல்லையா ? அதிலே எந்த சபையைப்பற்றி வாசிக்கிறீர்கள் மறுபடியும் அதை வாசித்துப் பார்ப்பீர்களானால்,'' கிறிஸ்துவின் சபை '' என்கிற ஒரே சபை சொல்லப்பட்டிருப்பதைக் கண்டுபிடிப்பீர்கள். பின்பு ஏன் இந்த சபையைப் பற்றி கேள்விப்படாமல் இருந்தீர்கள் ? மற்றவர்களும் ஏன் கேள்விப்படவில்லை? அநேக வருடங்களாக வேதாகமத்தை வைத்திருக்கிறீர்கள். உங்கள் வட்டாரத்திலுள்ள பலர், ஏதோ ஒரு சபையில் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். ஆனால் கர்த்தருடைய சபையைப் பற்றி என்ன சொல்லுவோம் ?

கிறிஸ்துவின் சபை உலகம் பூராவும் இருக்கிறது. எல்லா இடங்களிலும் இல்லை. ஆனால் வேதமாகமத்தை மட்டும் பின்பற்றும் மக்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் இந்த சபை இருக்கின்றது. இந்த சபை ஒரு நாமகரண கூட்டமோ, பிரிவினைக் கூட்டமோ, அல்லது மனிதனால் ஸ்தாபிக்கப்பட்டதோ இல்லை. இது கத்தோலிக்க சபையுமல்ல, புராட்டஸ்டன்டு சபையுமல்ல, யூத மதமுமல்ல. அப்படியானால் அது எது? அது நீங்கள் வேதாகமத்தில் காணும் சபைதான். கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு விசுவாசமாயிருப்பவர்களினால் தொகுக்கப்பட்டது.

இந்த சபையின் ஸ்தாபகர் கிறிஸ்துவே. நீங்களே படித்துப் பாருங்கள். மத்தேயு 16:18-ல் கிறிஸ்து கூறினார், "இந்த கல்லின் மேல் நான் என் சபையைக் கட்டுவேன்." அது ஆரம்பிக்கப்பட்ட இடம் எருசலேம் பட்டணம். லூக்கா 24, அப்போஸ்தலர் 2-ம் அதி காரங்களை வாசித்து பார்த்தால், இது உண்மை என்று உங்களுக்கும் தெரியும். அது லண்டனிலோ, ஜெர்மனியிலோ, அமெரிக்காவிலோ தோன்றாமல் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது.

சபை கி.பி 33 ல் ஸ்தாபிக்கப்பட்டது. அப்படி என்றால் அது ஸ்தாப்பிக்கபட்டு சுமார் 2,000 வருடங்கள் ஆயிற்று. மறுபடியும் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தை வாசித்து, சபை எவ்வாறு தோற்றுவிக்கப்பட்டது என்பதை அறிந்து அதிலிருந்து அந்த வரு டத்தையும் நிர்ணயுங்கள். கிறிஸ்துவே அதை கட்டியவர். ஆகவே அது அவருடைய பெயரை தாங்கி நிறகவேண்டும். சபை விஷயத்திலும் இது உண்மையே. "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:16).

அதனுடைய அங்கத்தினர்கள் விஷயத்திலும் இது உண்மை யாக இருக்கிறது. "முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிறது" (அப்போஸ்தலர் 11:26) நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், வேதாகமம் கிறிஸ்தவர் களை மட்டுமே உண்டாக்கும். கிறிஸ்து ஒரே சபையை மட்டும் ஸ்தாபித்தார். எபேசியர் 4:4-ல் அது ஒரே சரீரம் என்று அழைக்கப் படுகிறது. கொலோசெயர் 1:18-ல் அந்த சரீரமே சபையென்று அதன் ஆசிரியர் விளக்குகிறார். ஆகையினால் **ஒரே சபை.**

கிறிஸ்துவே சபையின் தலைவர். கிறிஸ்து சபைக்குத் தலையா யிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்கு தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கு ரட்சகராயிருக்கிறார். (எபேசியர் 5:23). கர்த் தருடைய சபைக்கு உலக பிரகாரமாக தலைவரோ, தலைமை ஸ்தாபனமோ கிடையாது. கிறிஸ்துவே அதன் தலைவர். அவர் பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

கிறிஸ்துவே சபையின் ரட்சகர், இதுவும் குறிப்பாக எபேசியர் 5:23-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பொருள் என்னவெனில்,

ஒருவன் ரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றால், அவன் அந்த சபையில் அங்கத்தினனாக இருக்க வேண்டும். கிறிஸ்து சபைக்காக மரித்தார். ( எபேசியர் 5:27; அப்போஸ்தலர் 20:28 ). அந்த அளவுக்கு அவர் தம்மை அர்ப்பணித்திருக்கிறார். இதிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள்?

ரட்சிக்கப்பட்டவர்கள் அதிலே சேர்க்கப்படுகின்றனர் (அப்போஸ்தலர் 2:47). கிறிஸ்துவும் ரட்சிக்கப்படுகிறவர்களை சரியான சபையிலே, அதாவது தம்முடைய சபையிலே சேர்க்கிறார்.

கிறிஸ்து, தம்முடைய சபைக்காகவே திரும்பி வரப்போகிறார் ( எபேசியர் 5:27 ). அவர் திரும்பி வரும் போது, அந்த சபையில் நீங்கள் அங்கத்தினராக இல்லை என்றால் எப்படி இருக்கும்? நன்றாக சிந்தித்துப் பாருங்கள்.

கர்த்தருடைய சபை, ஏற்கனவே உங்கள் வட்டாரத்தில், உங்கள் பட்டணத்தில், உங்கள் ஊரில் இருக்கிறதா?

கர்த்தருடைய வசனங்களை வாசித்து அறிந்து, அது என்ன போதிக்கிறதோ அதற்கு கீழ்ப்படியும் அளவுக்கு நீங்கள் அவரிடத்தில் அன்பு கூர்ந்தால் நீங்களும் அதில் அங்கமாகலாம்.

அப்படி செய்யும் பொழுது, தேவனுடைய வசனத்தையும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவையும் விசுவாசிப்பீர்கள் ( எபிரெயர் 11:6; யோவான் 14:1-3; ரோமர் 10:17 ). பிறகு உங்களுடைய எல்லா பாவங்களையும் விட்டு மனந்திரும்புவீர்கள் ( லூக்கா 13:3 அப்போஸ்தலர் 17:30; 2:38).

கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கை இடுவீர்கள் ( அப். 8:37; ரோமர் 10:10; மத்தேயு 10:32). பிறகு உங்கள் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் (தண்ணீரில் முழுக்குதல்) பெறுவீர்கள். ( அப்போஸ்தலர் 2:38; மாற்கு 16:16; ரோமர் 6:3-4; கலாத்தியர்3:26-27; 1 பேதுரு 3:21).

இதினிமித்தம் ரட்சிக்கப்படுவீர்கள். கர்த்தர் உங்களை தம்

முடைய சபையிலே அங்கமாக்குவார் ( அப்போஸ்தலர் 2:47). நீங்களும் கிறிஸ்துவனாக மாத்திரம் இருக்கலாம் (1பேதுரு4:16 ). உங்கள் ஊரிலுள்ள கிறிஸ்துவின் சபையிலே நீங்கள் அங்கமாவீர்கள்.

கர்த்தரை நேசித்து, அவருக்கு கீழ்ப்படிந்து, அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவர்கள் இருக்குவரை இந்த சபை இருக்கும். அப்படியென்றால், நீங்கள் வேறொரு சபையின் அங்கம் என்று அர்த்தமல்ல, அல்லது நீங்கள் ஒரு புதிய நாமகரண கூட்ட சபையை ஆரம்பித்து விட்டீர்கள் என்று அர்த்தமல்ல, ஏனெனில் கிறிஸ்துவின் சபை ஒரு நாமகரண கூட்டமல்ல .

மேலும் இந்த சபையைப் பற்றி அதிகமாக தெரிந்துகொள்ள விருப்பப்பட்டால், உங்கள் வேதாகமத்தை வாசியுங்கள். மற்ற விபரங்களுக்கும், இலவசமான அஞ்சல் வேதாகம பயிற்சிக்கும் எங்களிடத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென் (எபேசியர் 3:21).

## விசுவாச வீரன் நோவா !

நோவா காலத்து ஜனங்கள், வரப்போகும் பெரிய அபாயத்தை குறித்து எச்சரிக்கப்பட்டும், அவர்கள் வாளா இருந்து மடிந்தார்கள். நோவாவுக்கு கொடுத்த வாக்கை எப்படி தேவன் காப்பாற்றினாரோ, அப்படியே ரட்சிப்பை குறித்த வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றுவார் என்பதை கிறிஸ்தவர்கள் அறியவேண்டும் என்று எபிரெயருக்கு எழுதிய ஆசிரியர் குறிப்பிடுகிறார். நோவாவின் காலத்து மக்கள் அவனை பரிகசித்து, எள்ளி நகையாடியிருப்பர். ஆனால் நோவா, பொறுமையோடும், தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது உள்ள நம்பிக்கையோடும் அந்த பெரிய பேழையை கட்டும் பணியை செவ்வனே செய்து முடித்தான். நோவாவின் விசுவாசத்திற்கு கிடைத்த பலன், அவனும் அவன் குடும்பத்தாரும் ரட்சிக்கப்பட்டனர்.



# உங்கள் சொந்த நகரத்திலோ கிராமத்திலோ, எவ்வாறு

# கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது?

– J.C.சோட்

ஒருவேளை, கிறிஸ்துவின் சபை இல்லாத ஒரு நகரத்திலோ அல்லது கிராமத்திலோ நீங்கள் வசிக்கிறீர்கள். அங்கு நாமகரண கூட்ட சபைகளும், மனிதனால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளுமே இருக்கிறது. கர்த்தருடைய சபை ஆரம்பிக்கப்படவில்லை. நீங்கள் என்ன செய்வது என்று ஆச்சிரியப்படுகிறீகள்? அங்கு இருக்கும் ஏதேனும் ஒரு சபையில் அங்கமாவதா? நீங்கள் இருக்கிற நிலையிலே தொடர்ந்து இருப்பதா? கிறிஸ்துவின் சபை இருக்ககூடிய வேறோரு இடத்திற்கு போவதா? இவைகள் முக்கியமான கேள்விகள். விடைகள் எளிதில் வருவதில்லை

உங்களுக்கு சில ஆலோசனைகளை நான் அளிக்கிறேன். நீங்கள் கிறிஸ்துவின் சபையிலே அங்கத்தினர் ஆவதற்கு முடியும். எங்கிருந்தாலும் சரி, உங்கள் சொந்த நகரத்திலோ, கிராமத்திலோ, கர்த்தருடைய சபையை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் இறங்குங்கள். நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களை, ஆலோசனையாய் தருகிறோம்.

1. உங்களுக்கென்று ஒரு வேதாகமத்தை வாங்கிக்கொள்ளுங்கள்.

தேவனுடைய சித்தத்தின்படி செய்ய விருப்பமிருந்தால் அப்பொழுது உங்களுக்கு ஒரு வேதாகமம் தேவை. வேதாகமங்கள் இந்தியாவில் கிடைக்கின்றன. ஒரு புத்தகம் கிடைத்த பின்னர் அதைப் படித்து, ஆலோசனை செய்து இன்றைய மக்களுக்காக கிறிஸ்துவின் பிரமாணங்களடங்கிய புதிய ஏற்பாட்டில் விசேஷித்த கவனம் செலுத்துங்கள். அவ்வாறு செய்வீர்களானால் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்? கர்த்தருடைய சபையில் அங்கமாவது எப்படி? ஆராதனை செய்வது எப்படி? கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிப்பது எப்படி? முதலிய கேள்விக்குரிய விடைகளை அறிந்து கொள்வீர்கள்.

2. சத்தியத்திற்கு நீங்கள் கீழ்ப்படியுங்கள்.

நீங்கள் கர்த்தரை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, மனுஷர் முன்பாக கிறிஸ்துவை அறிக்கை இட்டு, ஞானஸ்நானம் (தண்ணீரில் முழுக்குதல்) பெற்றால், அப்பொழுது நீங்கள் ரட்சிக்கப்படக்கூடும் என்று கர்த்தர் போதிக்கிறார் (மாற்கு 16:16; மத்தேயு 10:32; அப்போஸ்தலர் 2:38). மேலும், அப்போஸ்தலர் காலத்தில், கிறிஸ்துவினிடத்தில் மக்கள் எவ்விதம் குணப்பட்டார்கள் என்று பார்க்க அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தையும் படியுங்கள்.

கர்த்தருக்கு கீழ்ப்படிய ஆயத்தமாகும் பொழுது, வேத வசனத்தின்படி உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க யாரேனும் ஆவலாக இருக்கிறார்களா என்று கண்டுபிடியுங்கள். அப்படி இருந்தால் தண்ணீருள்ள ஒரு இடத்திற்கு உங்களை அழைத்து போகச்சொல்லி, அங்கு பாவ மன்னிப்புக்கென்று, பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே நீரில் உங்களை அடக்கம் பண்ணச் சொல்லுங்கள். இப்பொழுது, ஞானஸ்நானம் பெற்ற உடனடியாக நீங்கள் கிறிஸ்துவின் சபையிலே அங்கமாகிறீர்கள். கிறிஸ்து இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார். (அப்போ 2:47). நீங்களும் கிறிஸ்தவர்களாக மாத்திரம் மாறுகிறீர்கள் (அப்போ 11:26).

3. உங்கள் இல்லத்திலே ஆராதனையை நடத்த துவங்குங்கள்

உங்கள் குடும்பத்தினரையும், நீங்கள் விரும்புகிற நண்பர்களையும் அதில் கலந்து கொள்ள அழைப்பு விடுங்கள். வாரத்தின் முதல் நாளான, ஞாயிற்றுக்கிழமை அந்த கூட்டம் நடைபெற வேண்டும், தேவனால் அங்கீகரிக்கப்படும் வகையில், அந்த ஆராதனையில், வேதாகமத்தை படித்தலும் (2 தீமோத்தேயு 2;15). பாட்டுபாடுதலும் (எபேசியர் 5:19). (இசைக்கருவிகள் இல்லாமல்) இடம் பெற வேண்டும்.

அதோடு, கர்த்தருடைய பந்தியில், கிறிஸ்துவின் சரீரத்தையும் ரத்தத்தையும் நினைவு கூறும் வகையில் அப்பத்திலும், பாத்திரத்திலும் பங்கு கொள்ள வேண்டும் (மத்தேயு 26:26-28; 1கொரிந்தியர் 11-ஆம் அதிகாரம்). கர்த்தர் பந்தியில் திராட்சை ரசம் உபயோகிக்கப்படவேண்டுமென்று கர்த்தர் கூறி இருக்கிறார். கடைசியில் காணிக்கை எடுக்க வேண்டும்.(1 கொரி 16:1,2)

உங்களோடு கலந்துகொண்டு மற்றவர்களும் காணிக்கை கொடுக்க முன் வருவார்கள். இந்த பணம் நேர்மையோடு, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பரப்புவதற்கும், எளியோருக்கு உதவி செய்வதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த ஐந்து அம்சங்களோடு கூடிய ஆராதனை ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் நடத்தப்பட வேண்டும். (அப்போஸ்தலர் 20:7).

4. உங்கள் நகரம் அல்லது கிராமத்தின் மற்ற பகுதிகளுக்குச் சென்று கூட்டங்களை நடத்துங்கள்

உங்கள் இல்லத்திலே ஒவ்வொரு ஞாயிற்று கிழமையிலும் ஆராதனை கூட்டங்கள் நடத்துவதோடு மட்டுமல்லாமல், உங்கள் நகரம் அல்லது கிராமத்தின் மற்ற பகுதிகளுக்குச் சென்று கூட்டங்களை நடத்த வேண்டும். இந்த கூட்டங்களில், மற்றவர்களும் தேவனுக்கு கீழ்ப்படியும் வரை வெறும் சுவிசேஷ கூட்டங்களாக நடத்த வேண்டும். சபை அங்கத்தினர்களாக அவர்களும் வந்த பிறகு மேற்படி ஆராதனை கூட்டங்களை நடத்தலாம்.

ஆனால் நீங்கள் மக்களுக்கு ரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் என்று கூற வேண்டும். அப்பொழுதுதான் அவர்களும் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்ட கிறிஸ்துவின் சபையில் அங்கமாகவும், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளில் ஆராதனை செய்யவும், கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்கவும் கூடும். இதைச் செய்வீர்களானால், உங்கள் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்படும்.

5. கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருங்கள்

உங்கள் ஆராதனையிலும், போதித்தலிலும், ஜீவியத்திலும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருங்கள். தேவனுடைய சத்தியத்தை பரப்ப உங்களாலான மட்டும் பாடுபடுங்கள்.

நீங்கள் எங்கிருந்தாலும் சரி, அங்கேயே ஒரு கிறிஸ்தவனாக மாறி, கிறிஸ்துவின் சபையிலே அங்கமாக இருக்க முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களை வேண்டுவதெல்லாம், கர்த்தருக்கு கீழ்ப்படிதலே.

கூடுமானவரை நாங்களும் உதவுவோம்•



# நீ கிறிஸ்தவனாக மாத்திரம் இருக்கலாம்

– J.C.சோட்

நாம் வாழும் இந்த உலகம் பல மதங்களைக் கொண்டது. கிறிஸ்தவ மார்க்கம் நூற்றுக்கணக்கான சபைகளாகவும், ஆயிரக் கணக்கான நாமங்களையும், பெயர்களையும், தரித்துக் கொண்டிருக்கிறது. இவை கிறிஸ்துவின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, ஒற்றுமையை குலைக்கக் கூடியதாக இருக்கிறது. பொதுவாக மக்கள், இவைகளைக்கண்டு குழப்பமடைந்து எந்த சபையும் வேண்டாம் என்று ஒரேயடியாக வெறுப்படைந்திருக்கின்றனர்.

இதுதான் அந்த பிரச்சனைக்கு தீர்வா? நிச்சயமாக இல்லை. வேறு ஒரு சிறந்த வழி இருக்கத்தான் வேண்டும்.

நீங்கள் எந்த பிரிவினை கூட்டங்களோடும் சேராமல் கிறிஸ்தவனாக மாத்திரம் இருக்க முடியும் என்பது உங்ளுக்கு தெரியுமா? அது உண்மைதான். நீங்களும் மற்ற யாவரும் உண்மையிலே விரும்பினால், கிறிஸ்தவனாக மாத்திரம் இருக்கலாம்.

கிறிஸ்துவின் நாமத்தை தரிக்க வழி இருக்கும் போது, ஏன் மனிதனுடைய பெயர்களையும் பட்டங்களையும் தரிக்க வேண்டும்? வேதாகமம் நம்மை கிறிஸ்தவனாக மாத்திரமே மாற்றும்.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் மக்கள் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருந்திருக்கின்றனர். உதாரணமாக, அப்போஸ்தலர் 11:26-ல் நாம் வாசிக்கிறோம், "முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று". "கிறிஸ்தவர்கள்" என்று மாத்திரம் அழைக்கப்பட்டனர்.

பவுல், அகிரிப்பா ராஜாவுக்கு பிரசங்கித்த வேளையில் அவர் கூறியது, "நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைக் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான்" (அப் 26:28).

கர்த்தருடைய போதனைக்கு கீழ்ப்படிந்தால், கிறிஸ்தவனாக மாறுவேன் என்று இந்த அரசனுக்கு எப்படித் தெரியும்? ஒரு வேளை அவனுக்கு அந்தவிதமாக போதிக்கப்பட்டிருக்கலாம் அல்லது மற்ற வர்கள் அவ்விதமாக பெயரை தரித்துக் கொண்டதை அறிந்திருக் கலாம். எந்த விதமாக இருப்பினும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியும் போது, தான் கிறிஸ்தவனாக மாத்திரமே மாறக்கூடும் என்பதை அறிந்தி ருந்தான். கடைசியாக பேதுரு கூறி இருக்கின்றார் "ஒருவன் கிறிஸ்த வனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினி மித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன். (1பேதுரு 4:16).

"கிறிஸ்தவன்" என்கிற நாமம் புதிய ஏற்பாட்டில் மூன்றே முறை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்த அந்த தனிப்பட்ட நபரையோ, நபர்களையோ குறிக்கிறது. ஒருவன் கர்த்தருக்கு கீழ்ப்படியும் போது, அது அவனை கிறிஸ்தவனாக மாத்திரம் செய்கிறது என்று அறியலாம். "கிறிஸ்தவன்" என்கிற வார்த்தைக்கு "கிறிஸ்துவின் சாயலிலுள்ளவன்" அல்லது "கிறிஸ்துவின் ஆவியை உடையவன்" என்று பொருள்.

கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவர் பெயரை தரிக்காமலிருப்பது எப்படி? கிறிஸ்துவின் நாமத்தை விட்டு, மனித நாமங்களைத் தரித்துக் கொண்டு ஒருவன் எப்படி கிறிஸ்துவின் சாயலில் அல்லது அவர் ஆவியை உடையவனாக இருக்க முடியும்? நிச்சயமாக அப்படி இருக்க முடியாது.

அநேகர் கூறலாம், பெயரில் ஒன்றுமில்லை என்று. ஆனால் வேத வசனம் கூறுவது கிறிஸ்துவின் நாமத்தில் மாத்திரமே இரட்சிப்பு உண்டு என்று (அப்போஸ்தலர் 4:12). அதாவது, வேறு எந்த நாமத்தினாலும் இரட்சிப்பு இல்லை. கொரிந்து பட்டணத்தில் (1 கொரிந்தியர் 1-ஆம் அதிகாரம்), நான் பவுலைச் சேர்ந்தவன், கேபாவைச் சேர்ந்தவன், கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்று கூறிக் கொண்டு, அங்கத்தினர்களில் சிலர் பிரிந்து கிடந்தனர்.

பவுல் இதற்காக அவர்களை புகழாமல், கடிந்து கொள்வதைப் பார்க்கிறோம் "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே, காரியத்தை பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1 கொரிந்தியர் 1;10). அவர்கள் செய்த காரியத்தின் அறிவீனத்தை வெளிப்படுத்த அவர் கேட்டது, "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?"(1கொரி 1:13).

அவர்களுக்குத் தெரியும், கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை. கிறிஸ்துவே அவர்களுக்காக சிலுவையிலறையப்பட்டவர், கர்த்தருடைய நாமத்தினாலே அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று, ஆகையினாலே அவர்கள் மனித நாமங்களை தரிக்காமல் கிறிஸ்துவின் நாமத்தையே தரித்துக்கொள்ள வேண்டும் என்பதே முடிவு. இன்றும் அது எவ்வளவு உண்மை என்று பாருங்கள்.

அன்புள்ள நண்பனே,

வேதாகமத்தில் குறிப்பிடாத நாமங்களையும், பட்டங்களையும் நீ தரித்துக் கொண்டிருப்பாயானால், வேதாகமத்தின் பிரகாரம் நீ ஒரு கிறிஸ்துவனாக இருக்க முடியாது. ஒரு வேளை வேதாகமத்தில் உள்ள சில பெயரையே நீ தரித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் நீயோ அல்லது மற்ற யாரோ அந்த பெயரை தரித்துக்கொண்டிருப்பது தவறு. .கிறிஸ்தவன். என்ற பெயருக்கு முன்னோ, பின்னோ எதையும் கூட்டி இருந்தால், அப்பொழுது நீ கர்த்தருடைய நாமத்தை தவறாக உபயோகிக்கிறாய்.

ஆகவே வேதாகமம் கூறுவதன் அடிப்படையில் நீ ஒரு கிறிஸ்துவனாக இருக்க முடியாது. நீ 'ஒருவித' கிறிஸ்தவனாக இருந்து கொண்டு இன்னமும் கிறிஸ்தவனாக மாத்திரம் இருக்கமுடியாது. அதாவது நீ கிறிஸ்தவன் அல்லது நீ ஒரு கிறிஸ்தவனாக இல்லை.

நீங்கள் வேதாகமத்தை படித்து கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். அப்படி செய்தால், நீ ஒரு கிறிஸ்தவனாக மாத்திரம் இருக்கலாம். அதற்கு குறைவாகவோ அதிகமாகவோ இருக்க முடியாது. அதற்கு மேலாகவோ குறைவாகவோ இருக்க ஏன் பிரயாசப்படவேண்டும்?

நீங்கள் கிறிஸ்துவின் வசனத்தை கேட்டு(ரோமர் 10:17). அவரை விசுவாசித்து (எபி11:6), உங்கள் பாவத்தை விட்டு மனந் திரும்பி (அப்போ 17:30), கிறிஸ்துவை வாயினால் அறிக்கையிட்டு (மத்10:32), பின்பு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால் (அப்போஸ்தலர் 2:38; மாற்கு 16:16), அப்பொழுது கர்த்தர் உங்களை இரட்சித்து, கிறிஸ்தவனாக மாத்திரமே செய்வார். அதே கீழ்ப்படிதலினால், வேதாகமத்தில் வாசிக்கும் அந்த ஒரே சபையில், கர்த்தருடைய சபையில், கர்த்தரால் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள் (அப்போஸ்தலர் 2:47; மத்தேயு 16:18; ரோமர் 16:16).

கிறிஸ்தவனாக மாத்திரம் இருந்து, கிறிஸ்துவின் சபையில் அங்கமாயிருந்தால், அப்பொழுது நீ சரியான பாதையில் இருக்கிறாய் என்று நம்பலாம். யாவரிடத்திலும், நான் கர்த்தருடைய நாமத்தை தரித்துக்கொண்டிருக்கிறேன் அவருடைய சபையில் அங்கமாயிருக்கிறேன் என்று பெருமையாகக் கூறிக் கொள்ளலாம்.

அப்படி என்றால் நீ மனித நாமத்தை தரித்த, நாமகரண கூட்டத்தில் அங்கமாக இல்லை. மனித உபதேசத்தை பின்பற்றுவது கிடையாது என்று பொருள்.

நீ தரித்துக் கொண்டிருக்கும் நாமத்தை வேத வசனத்திலிருந்து நிரூபிக்கலாம். இன்னும் மத சம்பந்தப்பட்ட, நீ செய்யும் எல்லா காரியத்திற்கும் வேத வசனத்திலிருந்து மேற்கோள் காட்டலாம்.

அப்பொழுதுதான் நீ சந்தோஷமாயிருப்பாய். கொலோசெயர் 3:17-ல், "வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்", என்று பவுல் ஏன் கூறினார் என்பது உங்களுக்கு விளங்கும்.

# இருதயத்தில் பரிசுத்தமுள்ளவன்

— பி.ஆர்.எஸ்

"ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" என்றார் பேதுரு (1 பேதுரு 1:13-16)

இயேசு கிறிஸ்துவும் "இருதயத்தில் பரிசுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்" என்றார் (மத்5:8) இருதயத்தில் பரிசுத்தமுள்ளவர்கள்தான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருக்க முடியும். சங்கீதக்காரன் கூறுகிறார். "யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே. அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்". (சங்கீதம் 24:3-5)

இருதயத்தில் சுத்தமுள்ளவன். ஆம்! சுத்தம் என்றால் என்ன? கறையில்லா, மாசு இல்லாத, கலப்படமில்லாத, அழுக்கில்லாத தன்மையைக் குறிக்கும். அன்றாட வாழ்க்கை அனுபவங்களில் இதை

வெளிப்படுத்துகிறோம். சுத்தத்தை வெளிப்படுத்த மாசு இல்லாத தங்கம், கலப்படமில்லாத நெய், துப்புரவாக வெளுக்கப்பட்ட துணி என்று கூறுகிறோம்.

நம்முடைய கர்த்தரும் தமது சரீரமான சபையை சுத்திகரித்து பரிசுத்தமாக்கினார். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் (எபேசியர் 5:25-27)

இருதயத்தில் பரிசுத்தமில்லாமல், ஜீவியத்தில் எந்தவித பரிசுத்தமும் இருக்க முடியாது. ஞானி சாலமோன் கூறியது. "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்" (நீதி 4:23) மேலும் "ஒருவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" என்றார் (நீதி. 23:7)

இருதயம் ஒரு நீர்த்தேக்கம் அல்லது அணைக்கட்டு போன்றது. அணைக்கட்டுகளிலிருந்து, தண்ணீரை குழாய்கள் எடுத்துச் செல்வதைப்போன்று நீர்த்தேக்கமாகிய இந்த இருதயத்தில் என்ன நிறைந்திருக்கிறதோ, அதிலிருந்து தான் வாய், கைகள், கால்கள் முதலிய உறுப்புகள் எடுத்துச் செல்கின்றது. சில காரியங்கள் நம் இருதயத்தினுள் நிச்சயமாக செல்ல இடமளிக்கக் கூடாது. உதாரணமாக வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் (எபே. 5:4) தேவனைவிட்டுவிலகுவதற்கேதுவான அவிசுவாசம் (எபி 3:12) பண ஆசை (1 தீமோ. 6:10) உலக அன்பு (1 யோவான் 2:15) மேட்டிமை (சங் 101:5: நீதி. 16:18), கசப்பான வைராக்கியம், விரோதம் (யாக் 3:14), பகையுணர்வு (1 யோவான் 2:9,11). இருதயத்தினுள் என்ன இருக்கிறதோ அதையே நாம் வழங்குவோம்.

சிலர் இருதயம், முன்பு நான் கூறிய தீமையான காரியங்களால் நிரப்பப்பட்டிருக்கிறது. இந்த இருதயத்தை சுத்தமாக்குவது எப்படி? சன்லைட் சோப்பைக் கொண்டா? இல்லை இல்லை. பின் எப்படி? ஆரம்பமே இருதயத்தில் தான். சங்கீதக்காரன் கூறுகிறான் :

"சுத்த இருதயத்தை என்னில் சிருஷ்டியும்" என்று (சங் 51:10). எஸ்ரா தன் இருதயத்தை பக்குவப்படுத்திக் கொண்டான் (எஸ்ரா 7:10).

இயேசு கிறிஸ்து கூறினார். "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்ட தென்று கேள்விப்பட்டு இருக்கிறீர்கள். நான் உங்களுக்கு சொல்லுகிறேன், ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று. உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்து போடு. உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் உன் அவயங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்" (மத் 5:27-29). துர்ச்சிந்தனைகளுள்ள மனிதனை தேவன் ஆக்கினைக்குட்படுத்துவார் (நீதி. 12:2). "வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே மனிதனைத் தீட்டுப் படுத்தும். எப்படியெனில் இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும் விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். (மத்தேயு. 15:18-20)

வெளிப்படையாக நாம் செய்யும் பாவங்கள், இருதயத்தில் தேக்கி வைத்திருந்த எண்ணத்தின் பிரதிபலிப்பு. "அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படு கிறான். பின்பு இச்சையானது, கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப் பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும். என் பிரியமான சகோதரரே, மோசம் போகாதிருங்கள்" (யாக் 1:14-16). கட்டுப்பாடு இல்லாவிட்டால், கெட்ட சிந்தனைகள், துர் ஆலோ சனைகள் வந்து இதயத்தை நிரப்பிவிடும். புத்தகங்களை வாசிப்பதும், சினிமா, படரேடியோ, ரேடியோ சம்பாஷணைகள், ஆடை, மனோபாவங்கள் முதலிய விஷயத்தில் கட்டுப்பாடு, ஒழுங்குமுறை அவசியம். அசுத்தமான கரங்கள் சுத்தமான நீரையும் அசுத்தமாக்கிவிடும்.

2 கொரி. 6:14-17-ல், பவுல் கொடுக்கும் எச்சரிக்கை, "நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடா திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்". தேவனுடைய வார்த்தை

களினாலே நம்முடைய இருதயங்களைக் கழுவினால் சுத்தமாகும். "துர்மனச் சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதய முள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக் கடவோம். (எபி 10:22)

அப்போஸ்தலனாகிய பேதுரு கூறியது "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாய் இருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள். அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" (1 பேதுரு 1:22,23).

நாம் நம்மைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். எப்படி? தேவனுடைய வார்த்தையை நம் இருதயத்தில் வைத்திருக்க வேண்டும். பவுல் கூறுகிறார்: "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாய் இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின" (2 கொரி. 5:17). இரண்டாவது, பரிசுத்த ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும் (1 பேதுரு 1:13-15). "சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டுஉங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. (ரோமர் 12:1.2) ( 2 பேதுரு 3:10,11)

இருதயத்தில் பரிசுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். நாம் தேவனை அவருடைய சிருஷ்டிப்பின் கிரியைகளில் தரிசிக்கிறோம். பலவித துயரங்களின் பின்னே தரிசிக்கிறோம். கிறிஸ்துவிலும், அவருடைய வார்த்தையிலும் தரிசிக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக இருதயத்தில் பரிசுத்தமுள்ளவர்கள், அவர் இருக்கிற வண்ணமாகப் பரலோகத்தில் தேவனைத் தரிசிப்பார்கள் (1 யோவான் 3:1-3)

அன்புள்ள வாசக நண்பனே, உன் இருதயம் எப்படி இருக்கிறது? பொல்லாத சிந்தனைகளாலும் துர் ஆலோசனைகளாலும்

கறைபட்டிருக்கிறதா? உனக்குள் சந்தோஷம், சமாதானம் இல்லையா? உன் இருதயம் கசப்பான வைராக்கியத்தால் நிறைந்திருக்கிறதா?

நீ கிறிஸ்து இயேசுவின் விலையேறப்பட்ட ரத்தத்தால் கழுவப்பட்டால் புது சிருஷ்டியாகலாம். நீ கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, பழைய பாவங்களைவிட்டு மனந் திரும்பி, இயேசு கிறிஸ்துவை, தேவனுடைய குமாரன் என்று வாயினால் மனுஷர் முன்பாக அறிக்கையிட்டு, பிறகு ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப் பட்டால், நீ ரட்சிக்கப்பட்டு கர்த்தரால் அவருடைய சபையிலே அங்கமாக்கப்படுமாய். பிறகு கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்து ஜீவித்தால் வாடாத ஜீவ கிரீடத்தைப் பெறுவாய்.

## விசுவாசம்

*''விசுவாசம்'' என்பது மனிதனிடத்தில் இருந்து புறப்படும் ஒரு உள்ளுணர்வு அல்ல. ''விசுவாசம் கேள்வியினால் வரும், தேவனுடைய வசனத்தினாலே வரும்'' என்று வேதம் சொல்லுகிறது. தேவனைப் பற்றியும், கிறிஸ்தவனைப் பற்றியும், வேதாகமத்தில் வெளிப்படுத்தப் படாமல், நாம் இவைகளைப் பற்றி ஒன்றும் அறிய முடியாது. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்று இயேசு சொன்னார்.*

*''இயேசு தேவனுடைய குமாரனுமாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது'' என்று இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய யோவான் எழுதியிருக்கிறார்.*

*வேத அறிவு வளரவளரத்தான் விசுவாசமும் வளர்ந்து கொண்டே வரும். இதற்காகத்தான், பேதுருவும், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் என்றார்.*

*''தேவனுடைய வார்த்தையை நான் உட்கொண்டேன். அவைகள் எனக்கு சந்தோஷமும், இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது'' என்று எரேமியா தீர்க்கதரிசி கூறி இருக்கிறார். ஆம்! சத்தியம் ஒன்றுதான் நம்மை உண்மையிலேயே மகிழ்விக்கும். பாவத்தின் உளையில் உழன்று தவிக்கும், கோடிக்கணக்கான மனிதர்கள் விடுதலை பெற்று, கிறிஸ்துவுக்குள் சுதந்திரர்களாக ஜீவிக்க வேண்டும். பாடுகள், சோதனைகள், துன்ப புயல்கள் இவற்றில் சிக்கி வாடும் அனைவரும் கிறிஸ்துவுக்குள்ளான சமாதானத்தைப் பெற்று இவ்வுலகில் வாழ வேண்டும். எந்த பாதுகாப்பும் இல்லாமல் , நம்பிக்கையற்று நடை பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மனுக்குலம் நித்திய நாளுக்கான நம்பிக்கையுடன் கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியோடிருக்க வேண்டும் என்பதே எங்கள் அனுதின ஜெபமாகும். அதற்கு ஒரே வழி ''கிறிஸ்து'' ஆம்! அவர் வழியே சத்திய வழி. அவராலன்றி ஒருவனும் மேற்கூறிய ஆசீர்வாதங்களைப் பெறமாட்டான்.*

*ஆகவே தேவனுடைய சத்திய வசனங்களைக் கேளுங்கள், விசுவாசியுங்கள், கீழ்ப்படியுங்கள்.*

# சுயாதீன பிரசங்கிமார்களும் சபைகளும்

J.C.சோட்

இப்போது, எங்குபார்த்தாலும் சபைகளும், பிரசங்கிமார்களும் இருப்பதை காண்கிறோம். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் மனுஷரால் ஏற்படுத்தப்பட்ட சபைகளைச் சார்ந்தவராக உள்ளனர். மற்றும் சிலர் தாங்கள் சுயாதீன (சுயேச்சை) பிரசங்கிமார்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

என்ன பொருளில் அவர்கள் இப்படி கூறுகிறார்கள். !

குறிப்பிட்ட எந்த நாமகரண கூட்ட சபையிலும் (டினாமினேசன்) தாங்கள் ஐக்கியம் கொண்டவர்கள் அல்ல என்று கூறுகிறார்கள். ஒரு வேளை ஆரம்பத்திலே அப்படிப்பட்ட சபைகளோடு ஐக்கியம் கொண்டிருந்துவிட்டு ஒரு சில காரணங் களுக்காக தங்களுடைய சொந்த வழியில் செல்ல அந்த உறவை முறித்துக் கொண்டவர்களாக இருக்கலாம். கொள்கை சம்பந்தமான பிரச்சினைகள் உருவாகும்போது அல்லது சபையிலுள்ள தனிப்பட்ட நபர்களுக்கு மத்தியில் பிரச்சினைகள் உருவாகும் போது பலர் பிரிந்து புதிய ஊழியத்தை ஆரம்பிக்க வெளியேறி வந்து விடுகிறார்கள்.

சிலர், மனுஷரால் ஏற்படுத்தப்பட்ட சபைகளின் உபதேசங்கள், பழக்கவழக்கங்கள் பிடிக்காததினால், வெளியேறி சுயாதீனப் பிரசங்கிமார்களாக மாறிவிடுகிறார்கள். வேறு சிலர் தாங்கள் செய்யும் ஊழியத்தின் கணக்கை யாருக்கும் காட்ட விரும்புவதில்லை. விசேஷ மாக பணம் வசூலிப்பு சம்பந்தமான விஷயத்தில் யாரேனும் கணக்கை கேட்டால், வெளியேறி தாங்களே சபையை நடத்தவும் பொருளாதார லாபத்தை பெறவும், சுயாதீன பிரசங்கிமார்களாக மாறி விடுகிறார்கள்.

குறிப்பாக இந்தியாவிலே அநேக சுயாதீன முழு நேர பிரசங்கி யாக மாற வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒவ்வொரு முழு நேர பிரசங்கியாரும் தன் சொந்த கூட்டத்தை வைத்து இருக்கவே விரும்புகிறார். மற்ற பிரசங்கிமார்களோடு சேர்ந்து ஊழியம் செய்ய இந்த பிரசங்கிமார்கள் கஷ்டப்படுகின்றனர். அநேகமாக அப்படிப்பட்டவர்கள் கூலிக்கு வேலை செய்கிறவர்களாகவே காணப் படுகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமை கிறிஸ்தவ மார்க்கத்தில் மாத்திரமல்ல, மற்றும் அநேக மதங்களிலும் உண்டென்பதை அறிய முடியும். தாங்களாகவே குருக்களாக மாறிவிடுகிறார்கள். "பாபாஜி" என்று அழைக்கப்படும் மதகுருக்களை நோக்குங்கள். அவர்கள் தம், தம் பக்த சீடர்களை தம் வழியில் நடத்துகிறார்கள். மனுஷன் ஏமாற்றுகிற வனாகவும் ஏமாற்றப்படுகிறவனாகவும் மாறுகிறான். சத்திய வேதத்திலே சுயாதீனப் பிரசங்கிமார்களைப் பற்றியும் மனுஷரால் ஏற்படுத்தப்படும் சபைகளைப் பற்றியும் சொல்லப் படவில்லை என்ற உண்மை உங்களை திடுக்கிடச்செய்யும் அல்லவா?

அது மாத்திரமல்ல, தேவனுடைய வார்த்தையில் மனுஷரால் ஏற்படுத்தப்பட்ட சபைகளைப் பற்றி கூறப்படவில்லை.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல், சபைக்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்கள் அன்னியோன்னியத்திலிருந்து விலக்கப்பட வேண்டுமென வேதவாக்கியங்களில் வாசிக்கிறோம்.(ரோம16:17-18) மேலும் கள்ளப்போதகர்களைப் பற்றியும் கள்ளத்தீர்க்க தரிசனங்களைப் பற்றியும் கூலியாட்களைப் பற்றியும் சத்திய வேதத்திலே வாசிக்கி றோம். அவர்கள் தேவனுக்கு முன்பாக குற்றமுடையவர்களாக நிற்கிறார்கள். (2 பேதுரு 2:1; 1 யோவான் 4:1).

பவுல், பேதுரு போன்ற அநேக பிரசங்கிமார்களும், போதகர் களும் சுயாதீன பிரசங்கிமார்களாக எவ்விடத்திலும் கூறப்படவில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் எதிர்த்ததில்லை. ஒருவருக்கெதிராக ஒருவர் ஊழியம் செய்யவில்லை, போட்டியிட்டதுமில்லை. பதிலாக, அவர்கள் ஐக்கியமாக ஊழியம் செய்து வந்தனர்.

அவர்கள் சந்தோஷத்திலும், துன்பத்திலும் தொடர்ந்து ஊழியம் செய்து வந்தனர். (அப்போ 2; அப்போ 8; 1 கொரிந்தியர் 12:26). பேதுரு, பவுல், யோவான், யாக்கோபு ஆகியோர் தனித்தனியே அவரவர் சபையை நடத்திக் கொண்டிருந்தார்கள் என்று வேத வசனத்தில் எவ்விடத்திலும் சொல்லப்படவில்லை.

மேலும் மற்ற அப்போஸ்தலர்களும், விசுவாசிகளும் சபை தங்களுக்கு சொந்தமானது என கூறினதாக வேதத்திலே எவ்விடத்திலேயும் கூறப்படவில்லை. "கர்த்தருடைய சபை" என்று மாத்திரமே கூறப்பட்டு இருக்கிறது (எபே 5:23; மத் 16:18).

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பீர்களானால் ஒரே சபையைப்பற்றிதான் சொல்லப்பட்டிருக்கிறது (எபேசியர் 4:4 கொலோசெயர் 1:18). இதுதான் கிறிஸ்துவின் சபை. இது அநேக பிராந்திய சபைகளை கொண்டதாயும், ஒவ்வொரு சபையும் திரளான விசுவாசிகளைக் கொண்டதாயும் இருக்கிறது. சபைக்குறிய அலுவல்களை பொறுத்தவரையில், பிராந்திய சபை சுயாதீனம் உடையதாயிருப்பினும், ஒன்றுக்கு விரோதமாக ஒன்று ஊழியம் புரியவும், எதிர்க்கவும், பிராந்திய சபைகளுக்கு சுதந்திரம் இல்லை. அதற்கு மாறாக ஒன்றுக்கொன்று, ஐக்கியமுடையதாகவும், கர்த்தருடைய ஊழியத்தை பரப்புகிறதாகவும் இருத்தல் வேண்டும்.

தனிப்பட்ட முறையிலோ அல்லது சபையாகவோ சுயாதீனமாக இருப்பீர்களானால், கர்த்தரோடும் அவருடைய சபையோடும் சேராமல் சுயாதீனமாக இருக்க விரும்புகிறீர்கள் என்பது தெரிகிறது, ஆகவே கர்த்தருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் எதிராளியாக மாறி விடுகிறீர்கள். அதாவது அவரோடு இருப்பதை விட்டு, அவருக்கு எதிராளியாக மாறிவிடுகிறீர்கள். அவருக்காக ஜீவிப்பதற்கு பதிலாக அவரால் தள்ளப்படக்கூடிய நிலைக்கு மாறிவிடுகிறீர்கள். இதை நீங்கள் விரும்புகிறீர்களா? உங்கள் ஊழியம் இது தானா? இதைப்பற்றி சற்று ஆழ்ந்து சிந்தித்து நீங்கள் செய்கின்ற தவறான காரியத்தினின்று உங்களை சீர்ப்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் தனிமையாக இருந்து சுயாதீனப் பிரசங்கியாக இருப் பதை தேவன் விரும்புவதில்லை. பதிலாக அவருக்கு கீழ்ப்படிந்து, கிறிஸ்தவனாக ஜீவிப்பதைத்தான் அவர் விரும்புகிறார்.

இந்த சுயாதீனப் பிரசங்கிமார்கள் கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது. அதே போல் கிறிஸ்தவர்களும் சுயாதீனர்கள் அல்ல. மனுஷரால் ஏற்படுத்தப்பட்ட சபைகளின் மூலமாக நீங்கள் எதிர்க்கப்பட்டால், வெளியேறி, அதைப் போன்ற புதியதொன்றை ஆரம்பிக்க வேண்டாம். அதற்கு பதிலாக கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்பட தீர்மானியுங்கள். நீங்கள் போதிக்க விரும்பினால் நல்லது. சத்தியத்தை மாத்திரமே போதிக்க வேண்டும். (2 தீமோத்தேயு 4:2).

நீங்கள் தனிப்பட்ட முறையிலே சென்று, மத சம்பந்தமான ஸ்தாபனங்களை ஆரம்பிக்கவும், அதிலே மக்களை சேரும்படியாக ஊக்குவிப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை, சுயாதீனனாக மாத்திரமே இருக்க நேரிடும். அதன் பலனாக நீங்களும். உங்களை பின்பற்றுகிறவர்களும் தேவனை இழந்துவிடக் கூடும்.

ஆகவே சத்திய வேதத்தை அணுகி புதிய ஏற்பாட்டு கிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளுமாறு உங்களை ஊக்குவிக்கிறோம். அவரை விசுவாசித்து, உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, உங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால் நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிய முடியும் (மாற்கு 16:15,16); அப்போஸ்தலர் 2:38). அப்பொழுது கர்த்தர் உங்களை இரட்சித்து அவர் சபையிலே சேர்த்திடுவார். (அப்போஸ்தலர் 2:47; அப்போஸ்தலர் 20:28).

இப்படிச் செய்வதினால் நீங்கள் ஒரு தனிப்பட்ட பிரிவைச் சேர்ந்தவராயிராமல், கிறிஸ்துவராக மாத்திரமே இருக்கலாம்(1பேதுரு 4:16). பிறகு உங்களைப்போலவே மற்றவர்களும் கிறிஸ்தவர்களாக மாற தேவனுடைய சத்தியத்தை மற்றவர்களுக்கு நீங்கள் போதித்து புத்தி சொல்ல முடியும்.

அப்பொழுதுதான் நீங்கள் சரியான காரியத்தை செய்தீர்கள் என்று பாராட்டுவோம்.

அப்பொழுது நீங்கள் விடுதலையாக்கப்படுவீர்கள்.
(யோவான் 8:32).



# வாலிபனே, தேவனிடத்தில் திரும்பு!

— பி.ஆர்.எஸ்

ஒரு வாலிபன் தன் வாழ்க்கையை சந்திக்கும்பொழுது, அவனுக்குள் எத்தனையோ விதமான போராட்டங்கள், பயம், வருங்காலத்தைப் பற்றி என்னவெல்லாம் கனவு காண்கிறான். ஆனால் வழியில் எத்தனையோ எதிர்ப்புகள், தடைகள், ஏமாற்றங்கள் இருக்கும். அதை அறியான்.

**வா**லிபத்தைப்போல் ஒரு சுவாரஸ்யமான, மகிழ்ச்சியான, நாட்களுமில்லை, அதே சமயத்தில் அதைப்போல ஏமாற்றத்திற் குள்ளாக்கும் பருவமும் வேறில்லை. "இளங்கன்று பயமறியாது" என்ற முதுமொழிக்கிணங்க, பிரதிபலனைக் குறித்து கவலைப் படாமல், துணிச்சலோடு எதையும் முயன்று பார்க்கும் சுபாவம், வாலிபப் பிராயத்திலுள்ள ஆண், பெண் இரு பாலருக்கும் உண்டு. வாலிபனின் ஜீவியம் ஒரு சவால் விடக்கூடிய ஜீவியம் தான். அவனுடைய ஜீவியத்தின் வெற்றியும், தோல்வியும் எதை பொறுத்திருக்கிறது? அவர்கள் வாழ்க்கையினுடைய வெற்றியின் ரகசியந்தான் என்ன?

அவர்களது வெற்றியின் ரகசியம், இரண்டு அம்சங்களைக் கொண்டதாக இருக்கலாம்.

**1. எச்சரிக்கையாயிருக்கும் மனோபாவம்:-**

எச்சரிக்கையாயிருத்தல் என்றால் ஜாக்கிரதையாயிருத்தல் என்று பொருள். அதாவது, எதையும் ஏனோதானோவென்று எடுத்துக் கொள்ளாமல், விநயமாக, ஞானத்தோடு செயல்படுதலைக்

குறிக்கும். வாழ்வில் எல்லாம் தானாகவே அமைந்துவிடும் என்ற நோக்கத்தை தவிர்த்து, குறிக்கோளுடன்கூடிய முயற்சியையும் இது குறிக்கும். இவையெல்லாம், வாலிபன் ஞானத்தோடு எதை தேர்ந்தெடுக்கிறானோ அதைப் பொறுத்தது. முன் பின் தெரியாமல் உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு, கவர்ச்சியை தேர்ந்தெடுத்து அதன் பிரதிபலனாக பலவித இன்னல்களை அடைந்து, மனமொடிந்து, மாளா துக்கத்தில் இருக்கும் வாலிப சகோதர, சகோதரிகளை நாம் அன்றாடம் சந்திக்கிறோம்.

கொஞ்சம் புத்திசாலித்தனமான காரியங்களை தேர்ந்தெடுத்திருந்தால், இந்நிலைக்கு ஆளாகி இருக்க மாட்டேனே என்று புலம்புவோர் ஏராளம். வேதமும் இதைத்தான் கூறுகிறது. "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித் திரிகிறான்" (1 பேதுரு 5:8). இப்படிப்பட்ட அநேக எச்சரிக்கைகள் வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவற்றை மதித்து செயல்பட்டால் எத்தனையோ விளைவுகளிலிருந்து காப்பாற்றப்படலாம், அநேகர் இந்த எச்சிரிக்கைகளை மீறி, தங்கள் இஷ்டம்போல் ஜீவித்து, அதன் பயனாக, தங்கள் சரீரத்தையும், அதற்கு மேலாக ஜீவனையும் கெடுத்துக் கொள்கிறார்கள்.

**2. வெற்றியின் இரகசியம் தெய்வீக வழிகாட்டியில் இருக்கிறது**

தெய்வீக வழிகாட்டி என்றால், தேவனுடைய வசனத்தால் வழி நடத்தப்படுதல். நாம் எதைச் செய்தாலும், தேவனுடைய சித்தத்திற்கு உப்பட்டுசெயல்பட வேண்டும். " வேத வசனங்கள் தேவாவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாயும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாயும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கிறது". (2 தீமோ. 3:16,17)

நம் பெற்றோர்கள் நம் மீது எவ்வளவு அன்பு கூறினாலும், அவர்கள் நமக்கு போதுமான வழிகாட்டியாக இருக்க முடியாது. நம் ஆசிரியர்கள் எவ்வளவு படித்தவர்களாயிருந்தாலும் அவர்களும் நமக்கு போதுமான வழிகாட்டியாக இருக்க முடியாது. நம் நண்பர்கள் நம்மை எவ்வளவுதான் நேசித்தாலும், அவர்களும் நமக்கு போதுமான வழிகாட்டியாக இருக்க முடியாது. இன்னும் நம்முடைய பிரசங்கிமார்கள், போதகர்கள் நமக்கு போதுமான வழிகாட்டியாக இருக்க முடியாது. (எரேமியா. 10:23)

நம்மை நித்திய வழியில் நடத்தவல்லது தேவனுடைய வார்த்தை ஒன்று தான். ஆகவே சாலமோன், "கட்டளையே விளக்கு வேதமே வெளிச்சம், போதக சிட்சையே ஜீவவழி"என்றார் (நீதி 6:23).

வேத வசனங்கள், நாம் பரிசுத்தமாகவும் நேர்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று போதிக்கிறது. எப்படிப்பட்ட தோழமையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் கற்றுக் கொடுக்ககிறது. பெரும்பாலும் வாலிபர்களின் வருங்காலம் எப்படிப்பட்ட தோழமையைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது. தேவனை விசுவாசியாமல், அவரை கனம்பண்ணாத மக்களோடு உறவு வைத்துக்கொண்டால், அது நம்மை அழிவின் பாதையில் அழைத்துச் செல்லும். அதற்குப் பதில் தேவ ஞானத்தை தேர்ந்தெடுத்து, தேவ பக்தியுள்ள மனிதர்களோடு தொடர்பு கொண்டிருக்கும் பொழுது, நாம் நல்ல பாதையில் நடத்தப்படுவோம்.

ஒரு முக்கியமான கேள்வியை சங்கீதக்காரன் தாவீது வாலிபர்களைப் பார்த்து கேட்கிறான். "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்?" யோசேப்பு தானியேல் மற்றும் தானியேலோடு சிறை வாசத்தில் கொண்டுவரப்பட்ட மூன்று எபிரெய வாலிபர்கள் இவர்கள் எல்லோரும் தங்கள் வழிகளை சுத்தம் செய்தவர்கள். ஆகவே பலவான்களாயிருந்தார்கள். அப்போஸ்தலனாகிய யோவான், "வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும்,

உங்களுக்கு எழுதியிருக்கிறேன்" என்றார். (1 யோவான் 2:14)

வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? அதற்கு விடையளிக்கும்போது தாவீது கூறுகிறார். "உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே. இதை செயலாற்ற மிகுந்த பிரயாசம் தேவை. வாலிபன் சுத்திகரிக்கப்படுவதற்கான மாதிரி தேவனுடைய வார்த்தையில் இருக்கிறது. கிறிஸ்துவும் பாவமில்லாதவராக இவ்வுலகத்தில் ஜீவித்து, நமக்கு ஒரு மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். அவரை நம் முன்னோடியாக வைத்து அவரைப் போல் மாற முயற்சிக்க வேண்டும்.

**வாலிபர்கள் அநேக அபாயங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.**

முதலாவது காரணம், ஆரம்ப நாட்களில் சரியான பயிற்சி கொடுக்கப்படாமலிருத்தல், இரண்டாவது, வாழ்க்கையில் அனுபவம் இல்லாமை, மூன்றாவது, உண்மையல்லாத வெறும் கவர்ச்சிக்கு ஒப்புக் கொடுத்தல், நான்காவது, பிரதிபலனைப் பற்றி கவலைப்படாமல், தற்காலிக உலக ஆசாபாசங்களுக்கு ஒப்புக் கொடுத்தல்.

வாலிபர்கள், சங்கீதக்காரன் தாவீது கூறிய அறிவுரையைக் கேட்டு, தேவனுடைய வசனத்தால் தங்களை சுத்திகரித்து கொள்ளுவார்களேயானால், இந்த பலவீனங்களிலிருந்தும், ஒழுக்கக் கேட்டிலிருந்தும் காப்பாற்றப்படலாம். தேவனுடைய வார்த்தையை சரியாக உபயோகப்படுத்தும் பொழுது, தங்களை கட்டுப்படுத்த வல்ல சக்தியையும் ஞானத்தையும் பெறுவார்கள். இயேசு கிறிஸ்து தாம் சோதிக்கப்படும்போது, தேவ வசனத்தை உபயோகித்து சாத்தானை மடங்கடித்தார். (மத். 4:1-11)

அதைப் போல வாலிபனும் சோதனையிலே விழும்போது, தேவனுடைய வார்த்தையைக் கொண்டு சாத்தானை மேற்கொள்ள முடியும். வாழ்க்கைப் பாதையில் வேத வசனம் ஒரு கலங்கரை விளக்கம் போல இருந்து, அபாயங்களை சுட்டிக் காட்டி, பாதுகாப்பான வழியில் நம்மை நடத்தும். இல்லாவிட்டால், எது சரி, எது தவறு, எது நன்மை, எது தீமை, என்று நாம் எப்படி வரையறுக்க முடியும்.

மேலும் வேத வசனம் தீய செல்வாக்கினின்று நம்மை காப்பாற்றுகிறது. நாம் வாழும் இந்த உலகத்தில் நம்மை கேட்டில் அமிழ்த்தக் கூடிய எத்தனையோ வித கவர்ச்சிகள் உண்டு. எந்த பக்கம் திரும்பினாலும் நம்மை தீய வழியில் உந்தித் தள்ளும் கெட்ட செல்வாக்கும் உண்டு. தீய நண்பர்கள், சினிமா போன்ற எத்தனையோ காரியங்கள் உலகில் உண்டு. தாவீது கூறுகிறார். "நான் உமக்கு விரோதமாய் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங் 119:11). நாம் தேவனுடைய வசனத்தில் நடத்தப்படும் பொழுது, தேவன் நம்மை காத்துக் கொள்வார்.

வாலிபர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை வெற்றியுடன் தொடர, அவர்களுக்கு ஒரு சரியான அளவீடும் வழிகாட்டியும் தேவை. அவர்கள் வாழ்க்கைப் படகு, அறியாத கடலிலே செல்ல வேண்டியிருக்கும். சரியான பாதையில் நடத்த ஒரு திசை காட்டும் கருவி தேவை. தேவ வசனத்தை பிடித்துக் கொண்டு செல்லும்போது சரியான திசையில் செல்வார்கள்.

அனுபவம் என்பது ஒரு பள்ளிக்கூடம், வாழ்க்கையானது, வேதாகமத்தின் அடிப்படையில் அமைக்கப்படும்பொழுதுதான் அதன் பாடங்களை நன்கு கற்றுக்கொள்ள முடியும். வாலிபர்கள் தங்களுக்கு தாங்களே வழிகாட்டியாக இருக்க முடியாது. தேவ வசனத்திற்கு முழுவதும் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். தேவனுடைய வசனம் வெறும் ஒரு சட்ட புஸ்தகமல்ல. நமக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறி, அவ்வப்பொழுது எச்சரித்து, ஆபத்துக் காலத்தில் உதவி செய்யும் நல்ல நண்பன். ஆசான்.

ஆகையினால் பிரியமுள்ள வாலிப சகோதரனே, சகோதரியே, உன் இருதயத்தை தேவனுடைய வார்த்தையால் நிரப்பு. தேவனுக்கு விரோதமாய் பாவஞ்செய்யாமலிருப்பாய் (சங் 119:11). அப்பொழுது நீ உன் நடைகளில் பிசகுவதில்லை (சங் 37:31). பேதுரு கூறுகிறார் "அழிவுள்ள வித்தினால் அல்ல என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது. புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது.

கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே" (1 பேதுரு 1:23-25).

தேவனுடைய வசனம் நம் விசுவாசத்திற்கு ஆதாரம். விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும், (ரோமர் 10:17). நாம் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பிக்கப்படுகிறோம் (யாக் 1:18). தேவனுடைய வசனத்தின் துணை கொண்டுதான் நாம் சரியான ஆராதனையை செய்ய முடியும் (யோவான் 4:24;17:17).

வாலிப சகோதரனே, சகோதரியே, உன் இருதயத்தை தேவனுடைய வார்த்தையினால் நிரப்பு. அப்படியென்றால் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற வாஞ்சை உண்டாக வேண்டும். அதன் மூலம் நல்ல பழக்க வழக்கங்களை உண்டாக்க வேண்டும். உன் வாழ்க்கையை கூர்ந்து கவனித்து, தேவ வசனத்திற்கு மாறான காரியங்களை விட்டு விலகவேண்டும்.

தேவனுடைய வார்த்தைகளை தினமும் தியானிக்க வேண்டும். அவ்வசனங்களை உள்ளத்தின் ஆழத்தில் பதித்து வைக்க வேண்டும். சங்கீதக்காரன் தாவீது உரைத்ததைப்போல "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்".

## மாயையே

**நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாமிசத்திலிருந்து தீங்கையும் நீக்கிப் போடு. இளவயதும் வாலிபமும் மாயையே (பிரசங்கி. 11:10)**

# இயேசு கிறிஸ்து மீண்டும் எப்பொழுது வருவார் ?

J.C.சோட்

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அவ்வப்பொழுது சிலர் நாள் குறித்துக் கொண்டேயுள்ளனர். அவருடைய வருகைக்கு எப்படி அடிக்கடி நாட்களை முன் குறிக்கிறார்களோ அப்படியே அடிக்கடி அவர்கள் தோற்றுப் போகவும் செய்கிறார்கள்.

எந்த ஒரு மனிதனுக்கும் அவருடைய இரண்டாம் வருகை குறித்து அவர் வெளிப்படுத்தவில்லை என்பதை, நாள் குறிக்கும் இந்த விந்தை மனிதர்கள் ஒரு போதும் கற்றுக் கொள்ள மாட்டார்களா?

ஒருவேளை இயேசு கிறிஸ்து அவருடைய இரண்டாம் வருகைக்கான காலத்தை வெளிப்படுத்த வேண்டுமென விரும்பியிருந்தால், அவரால் அதை செய்திருக்க முடியும். தன்னை நேசிக்கும் அவருடைய பிள்ளைகள் வேதாகமத்தில் சிரமப்பட்டுத் தேடிமறைந்திருக்கும் தேதியை கண்டு பிடித்துக் கொள்ளட்டும் என்று உருவக மொழியில் வெளிப்படுத்தியிருக்க மாட்டார். அவர் அப்படிச் செய்யாதபடியால் கண்டிப்பாக அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். அந்தக் காரணம், எப்போதும் அவருடைய பிள்ளைகள் அவருக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்பதுதான். கடைசி நிமிடம்வரை காத்திருந்து இறுதிமணி வேளையில் மனந்திரும்பி கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாவது அவருடைய நோக்கமல்ல.

கர்த்தர் சீக்கிரம் வருகிறாரென்று அநேகர் கூறுகின்றனர். அதாவது நம்முடைய வாழ்நாள் காலத்திலேயே கட்டாயம் கிறிஸ்து வந்துவிடுவார் என அவர்கள் விளம்புகின்றனர். அப்படிச் சொல்வது உண்மையாகக் கூட இருக்கலாம், உண்மையல்லாமலும் போகலாம்.

அப்போஸ்தலர்களும், ஆதித் திருச்சபை மக்களும் கர்த்தர் வெகு சீக்கிரத்தில் திரும்ப வருவார் என்றும், அவர்களுடைய வாழ் நாள் காலத்திலேயே வரலாம் என்றும் எதிர்பார்த்தனர்.

கிறிஸ்துவானவர் பிதாவிடத்திற்கு திரும்பிச் சென்றதிலிருந்து அவர் சீக்கிரம் வருகிறதற்கு எதிர்பார்க்கப்பட்டு வருகிறார் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. ஆனால் அவர் இன்னும் வரவில்லை.

அவர் இன்னும் வரவில்லை என்பதால் அவர் வரப்போவதே இல்லை என்பது இதன் பொருள் அல்ல. நாம் எதிர்பார்க்கும் நேரத் தில் அல்ல, **அவர் குறித்த நேரத்தில்தான், அவர் வருவார்** .

கிறிஸ்துவானவர், " இதோ சீக்கிரமாய் வருகிறேன் " என்று சொல்லிச் சென்று இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்து விட்டபடியால் அவர் சீக்கிரம் வருகிறார் என்று சொல்வதே தவறு என்று சிலர் நினைக்கின்றனர்.

அவர் எப்பொழுது வந்தாலும், இன்றைக்கே வந்தாலும் அல் லது இன்றிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து வந்தாலும், நித்தியத்தோடு இந்த கால அளவை ஒப்பிட்டுப்பார்த்தால் இவை குறுகிய காலமே. ஆகையால் இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார் என்று கூறுவதில் தவறேதுமில்லை.

கிறிஸ்துவின் வருகை சம்பந்தமாக அநேக காரியங்கள் நமக்கு வெளிப்படுத்தப் பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தையை நேசித்து மதிக்கும் ஒவ்வொருவரையும் அவைகள் திருப்திப் படுத்த வேண்டும்.

1 நான் மறுபடியும் வருவேன் என்று இயேசு கூறினார். அவர் சொல்வதைக் கேளுங்கள், " உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாச மாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ் தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச்சொல்லியிருப் பேன் ; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகி றேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான்

மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளு வேன்'' , ( யோவான் 14 :1 - 3 ) . இவ்வசனங்கள் நிச்சயமானதும் உறுதியானதுமாகும்.

❷ பரலோகத்தில் இருக்கிற பிதா தவிர வேறு யாருக்கும் அவருடைய வருகை தெரியாது என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுதாமே கூறுவதைக் கேளுங்கள். '' அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றோருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள் '', ( மத்தேயு 24 :36 ). அந்த நாள் பிதாவுக்கு மட்டுமே தெரியுமானால் மனிதன் எவ்வாறு அத்தகவலைப் பெற்றுக் கொள்ள முடியும்?

❸ இயேசு கிறிஸ்து இரவில் திருடன் வருகிற விதமாய் வருவார் என்று வேத வாக்கியங்களில் நாம் காண்கிறோம். '' கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதாமாய் வரும் '' (II பேதுரு3:10). அவர் ஒரு திருடன் அல்ல, ஆனால் யாரும் எதிர்பாரா வண்ணம் திருடனைப் போல வருவார்.

❹ கர்த்தர் திரும்ப வரும்பொழுது . . . . . . . . . . . . '' வானங்கள் மடமட என்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்'' (IIபேதுரு 3 : 10 ), இயேசு கிறிஸ்து திரும்ப அக்கிரமக்காரரை அழித்து அவருடைய பிள்ளைகளை ஆயிரம் வருடம் அரசாளுவார் என்பது மேற்கண்ட வசனப் பகுதிக்கு முற்றிலும் விரோதமானது.

❺ கிறிஸ்துவின் வருகையின் போது நீதிமான்கள் , அக்கிரமக் காரர் ஆகிய யாவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இதையே யோவான் ஆசிரியர் , '' இதைக் குறித்து நீங்கள் ஆச்சிரியப்படவேண்டாம், ஏனெனில் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது நன்மை செய் தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவகளாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களா கவும் புறப்படுவார்கள் ''. (யோவன் 5 : 28,29)என்று கூறுகிறார்.

❻ இயேசு கிறிஸ்து வரும்பொழுது உயிரோடிருக்கிற நீதிமான்கள்

அவரை தரிசிக்கும்படியாக மேகங்களுக்குள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். பவுல் அடியார் இதைக் குறித்து இவ்விதமாகக்கூறுகிறார், " ஏனெனில், கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், எக்காளத்தோடும் வானத்திலிருந்து, இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் " (1 தெச. 4:16,17).

7 இராஜ்யமாகிய சபைக்கு புறம்பேயிருக்கிறவர்களை ஒன்று சேர்த்து நரகத்திலே தள்ளும்படியாக அந்நாளில் கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள் அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத்தேயு13:41,42).

8 பெரிதும், இறுதியுமான நியாயத் தீர்ப்பு நடக்கும். எபிரெய ஆசிரியர் இவ்விதமாய் சொல்கிறார், " அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது " (எபிரெயர் 9 : 27 ). இதையே பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதும்பொழுது, "ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் " (II கொரி . 5:10 ) எனக் குறிப்பிடுகிறார்.

9 நியாயத் தீர்ப்பிலே நீதிமான்கள் நித்தியஜீவனை அடையவும், என்றென்றும் கர்த்தரோடிருக்கவும் போவார்கள். ஆனால் அக்கிரமக்காரரோ நித்திய நரகத்திலே தள்ளப்படுவார்கள்.(மத்தேயு 25:46).

ஆம், கிறிஸ்து மீண்டும் வருவார். உண்மையாகவே விரைவில் வருவார். அப்பொழுது அநேக காரியங்கள் நிகழும், ஆனால் அவைகள் இன்றைக்கு அநேகர் போதிப்பதற்கு மாறாக இருக்கும்.

இயேசு கிறிஸ்துவின் வருகை பற்றியும், அப்பொழுது நடக்கும் சம்பவங்கள் குறித்தும் நீங்கள் வஞ்சிக்கப்படாமல் எச்சரிக்கையா

யிருங்கள். அவர் ஒருமுறை வந்துவிட்டால், பிறகு அவரை சந்திக்க ஆயத்தமாகுதல் என்பது இயலாத ஒன்று.

இப்பொழுது நம்முன் இருக்கும் பிரதான கேள்வி, **இந்த நிமிடத்தில் கிறிஸ்துவை சந்திக்க நான் ஆயத்தமா?** என்பதுதான். உங்கள் பதில், "இல்லை" என்றால் தயவுகூர்ந்து உங்களுக்கு நேரமும் வாய்ப்பும் இருக்கும் போதே ஆயத்தமாகிக் கொள்ளுங்கள். ஏனெனில் இயேசு கிறிஸ்து வருவார் என்பது அதி நிச்சயமானது. அவர் எப்பொழுது வருவார் என்பதுதான் நமக்குத் தெரியாது, ஆனால் அவர் நிச்சயம் வருவார். மீண்டும் கேட்கிறேன், அவரை சந்திக்க நீங்கள் ஆயத்தமா?

## மனிதனுடைய ரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டம்

*சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும். யோவான் 8:32; 17:17*

*கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட வேண்டும். ரோமர். 10:17;10:14*

*கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டும். யோவான். 8:24;3:16;எபிரெயர்.11:6.*

*பழைய பாவங்களை விட்டு தேவனிடத்தில் மனந்திரும்ப வேண்டும், மாறி நடக்க முடிவாகத் தீர்மானிக்க வேண்டும். அப்போஸ்தலர்.17:30;லூக்கா. 13:3,5.*

*கிறிஸ்துவை கர்த்தரென்றும், தேவனுடைய குமாரனென்றும், வாயினால் மனுஷர் முன்பு அறிக்கையிட வேண்டும். மத்தேயு 10:32 ; ரோமர். 10:9,10; அப்போஸ்தலர் 8:37.*

*பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவேண்டும். (நீரில் முழுக்கப்பட வேண்டும்) அப்போஸ்தலர் 2:38; 22:16 ; 8:38, ரோமர் 6:3,4.*

*அப்பொழுது ரட்சிக்கப்படுகிறீர்கள் ; ரட்சிக்கப்படுகிறவர்களை கிறிஸ்து தம் சபையில் சேர்க்கிறார். அப்போஸ்தலர் 2:47.*

*நீங்கள் வேதவசனப்படி ரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? பாவமன்னிப்பைப் பெற்றிருக்கிறீர்களா?*